
# வரலாறு

# 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 9 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முதற் பதிப்பு | 1990 |
| இரண்டாம் பதிப்பு | 1991 |
| மூன்றாம் பதிப்பு | 1992 |
| நான்காம் பதிப்பு | 1993 |
| ஐந்தாம் பதிப்பு | 1994 |
| ஆறாம் பதிப்பு | 1995 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

அம்பலங்கொடை, வதுகெதர, இலக்கம் 341, அல்பிட்டிய றோட்
மஹிந்த பிரின்டர்ஸ் (பிறைவேற்) லிமிரெட் அச்சகத்தில் அச்சிட்டுக்
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

95/ඥ/120(55,000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல்வைத்தோமே
நமதுயிரே தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம்!

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெக் கொள்வீர்!

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றுடுவீர்!

**றிச்சட் பதிறண**
**கல்வி, உயர்கல்வி அமைச்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

சிறிது காலம் எமது இடைநிலைப் பாடசாலைப் பாடவிதானத்திலிருந்து நீக்கப்பட்டிருந்த ''வரலாறு'' என்ற பாடம் மீண்டும் பாடசாலைகளிற் கற்பிக்கப்பட வேண்டுமெனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தைச் செயற்படுத்தும் பொருட்டு 6 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை மாணவருக்கு வேண்டிய வரலாற்று நூல்களை வெளியிடும் பணி கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நூல் வரிசையில் 9 ஆம் ஆண்டுக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள இந்நூல், ஆரம்ப காலத்திலிருந்து போர்த்துக் கேயர் ஆட்சிக் காலம் வரையான காலப்பகுதி பற்றி எழுதப்பட்டுள்ளது.

ஒரு பிரசை குறைந்தது அவருடைய சொந்த நாட்டின் வரலாறு பற்றியாதல் அறிந்திருக்க வேண்டியது முக்கியம். வரலாற்றில் வரும் விடயங்களுள் நாடுகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட போர்கள் பற்றியும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமைக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் முதலியன பற்றியும், சமய கலாசார அபிவிருத்தியின் பொருட்டு அமைக்கப்பட்ட விகாரைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள் ஆகியன பற்றியும், கலைப்படைப்புகள் பற்றியும் கற்கிறோம். இவை பற்றிக் கற்கும் போது போர்களின் பெறுபேறுகள் நிலையில்லாதன என்பதையும், ஏனைய கருமங்களின் பெறுபேறுகள் ஓரளவுக்கு நிலையானவை என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளுகின்றோம். போர்களில் தோல்வி அடைந்தவர்கள் போலவே வெற்றி பெற்றவர்களும் ஒரு நாள் இறக்கின்றனர். ஆயின் அமைதியும் ஒற்றுமையும் நிலவும் காலங்களில் அமைக்கப்படும் குளங் குட்டைகள் ஆகியனவும் சமயக் கட்டடங்களும் ஒற்றுமையின் பெறுமதியை உலகுக்கு எடுத்துக் காட்டுவதுடன், பல நூற்றாண்டு காலம் நிலைத்திருந்து நம் முன்னோர்களுடைய சேவைகளைப் பரம்பரை பரம்பரையாக ஞாபகப் படுத்துகின்றன. பூசல்கள் சூழ்ந்த உலகிலே வாழுகின்ற மாணவருக்கு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை விளங்க வைப்பதே பாடசாலைகளில் வரலாற்றினைக் கற்பிப்பதன் முக்கிய நோக்கமாகும். மேலும், இன அடிப்படையில் சிங்களவர், தமிழர், சோனகர் என நாம் வேறுபட்டுளோமாயினும், மிகப் பழைய காலத்திலிருந்தே நாம் ஒன்று சேர்ந்து இலங்கை மக்களாக வாழ்ந்து வருகின்றோம் என்பதை இந்நூல், சிறியதாயினும், மாணவருக்கு விளங்க வைக்கும். அது தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்ற எமது முக்கியமான குறிக்கோளுக்கு ஓர் ஊன்றுகோலாக அமையும்.

இந்நூலிலே குறைபாடுகள் காணப்பட்டவிடத்து அவற்றை எமக்கு அறிவித்தால் அடுத்த பதிப்பில் அவற்றைத் தவிர்த்து நல்ல நூல் ஒன்றினை நாம் மாணவருக்கு வழங்கக் கூடியதாக இருக்கும். அப்படியான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நாம் மனமுவந்து ஏற்றுக்கொள்ளுவோம்.

இந்நூலை வெளியிடுவதற்குப் பாடுபட்டு உழைத்த அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

எம். கே. ஜே. ஏ. அல்விஸ்,
கல்வி வெளியீட்டு ஆணையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நாயகமும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
''இசுறுபாய''
பத்தரமுல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆலோசனைக் குழு**

| | | |
|---|---|---|
| திரு. எம். கே. ஜே. ஏ. அல்விஸ் | — | கல்வி வெளியீட்டு ஆணையாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும் |
| திரு. கே. பீ. எம். ஜயதிலக | — | மேலதிக ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| பேராசிரியர் மென்டிஸ் றோகணதீர | — | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் |
| கலாநிதி மாலினி அந்தகம | — | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகம் |
| திருமதி ஈவா. வீ. விக்ரமகே | — | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் |
| திருமதி ஆர். எஸ். பிரேமரத்தன | — | புனித யோவான் கல்லூரி, நுகேகொடை |
| திருமதி ஆர். சீ. ஜயவர்த்தன | — | தேசிய கல்வி நிலையம். |

**எழுத்தாளர் குழு (மூலநூல்)**

| | | |
|---|---|---|
| திரு. கே. சீ. ஏ. எஸ். கருணாரத்ன | — | தேசிய கல்வி நிலையம் |
| திரு. பி. எல். ஆர். றோகணகுமார | — | தேசிய கல்வி நிலையம் |
| திருமதி. பீ. மாத்தற ஆறாச்சி | — | கடுவெல, மகா வித்தியாலயம், போம்றிய |
| திரு. கே. ஏ. பீ. பெரேரா | — | நீர்கொழும்பு, புனித மரியா மகா வித்தியாலயம் |
| திருமதி ஈவா பீ. விக்ரமகே | — | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் |
| வண. எல்லாவல மெத்தானந்த தேர | — | கல்வி அலுவலகம், எகலியக்கொடை |

**பதிப்பாசிரியர் குழு (மூலநூல்)**

| | | |
|---|---|---|
| திருமதி எம். சீ. த சில்வா | — | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| திரு. பீ. வீ. கருணாரத்ன | — | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

**சித்திரங்கள்**

| | | |
|---|---|---|
| திரு. டபிள்யு. ஏ. சுமதிபால | — | தேசிய கல்வி நிலையம் |

**சிங்களத்திலிருந்து மொழிபெயர்த்துப் பதிப்பித்தவர்**

| | | |
|---|---|---|
| திரு. ஐ. தம்பிமுத்து | — | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

இ. க. நி. சே. தரம் 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

அத்தியாயம் | பக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1 | இலங்கையின் நீர்வள நாகரிகம் | 01 |
| 2. | இலங்கையின் தரைத்தோற்றம், காலநிலை, நீர் வழங்கல் முறை | 08 |
| 3. | இலங்கையின் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி | 18 |
| 4. | நீர்வள நாகரிகத்தின் எழுச்சி | 27 |
| 5. | இலங்கையின் வெளிநாட்டு உறவுகள் | 42 |
| 6. | நாகரிகம் தென்மேற்குத் திசைநோக்கி இடம்பெயர்ந்தமையும் இராச்சியங்கள் இடம் மாறியமையும் | 54 |
| 7. | அரசியல், சமூகத் தாபனங்கள் | 67 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 1

# இலங்கையின் நீர்வள நாகரிகம்


இலங்கையின் நாகரிகமானது பெரும்பாலும் நீர் நிலையங்களை மையமாகக் கொண்டே வளர்ந்தமையினால் அதனை நீர்வள நாகரிகமென்று கூறுதல் பொருந்தும். எழுதப்பட்டுள்ள வரலாற்றின்படி கி.மு. ஆம் 6 நூற்றாண்டளவில் வட இந்தியாவிலிருந்து இங்கு குடியேறிய ஆரிய மொழி பேசிய ஒரு மக்கள் கூட்டத்தினரே இதற்கு வித்திட்டோராவார்கள். ஆயினும், அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு குடியேற்றங்கள் இருந்தன என்பதற்குப் பல ஆதாரங்களுள. இராமன்-இராவணன் கதை போன்ற புராதன கதைகளும். கற்காலத்தின் மத்திய பகுதியில் இலங்கையில் வாழ்ந்தபலாங்கொடை மனிதர் பற்றிய முக்கியமான தொல்பொருளியல் ஆய்வுகளும் உதாரணங்களாகும். பதியகம் பளை, கொனாட்டு என்ற கல்மனை, கித்துல் கலிலுள்ள பெலி குகை, குருவிட்டவிலுள்ள பட்டதொம்ப குகை, பொம்பரிப்பு முதலிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது ஆதிக் குடியேற்றங்களுக்குரிய பாத்திரங்கள், மனித என்புகள் முதலிய பொருள்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இக்காலப்பகுதி வரலாற்றுக்கு முந்திய காலமெனப்படும்.

கி.மு. 6ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இந்நாட்டில் இயக்கர், நாகர் எனப்பட்ட இருபிரிவு சுதேச மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. இயக்கர் எனப்பட்டோர் மகியங்கனை, லக்கலை போன்ற பிரதேசங்களிலும், நாகர் எனப்பட்டோர் நாகதீவிலும், அதாவது, யாழ்ப்பாணத்திலும் களனியிலும் வாழ்ந்து வந்தனரெனக் கூறப்படுகின்றது.

அக்கால இலங்கையின் வரலாற்றினை அமைப்பதற்குரிய ஆதார ஏடுகளான தீபவம்சம், மகாவம்சம் ஆகியவற்றின்படி விஜயனும் அவனுடைய எழுநூறு தோழர்களுமே இலங்கையில் முதற் குடியேறிய கூட்டத்தினராவார்கள். இவர்கள் இந்தியாவின் லாட்ட நாட்டிலிருந்து மேற்குக் கரையோரமாகப் பாருகச்சை, சுப்பாரகம் ஆகிய துறைமுகங்களைத் தாண்டி இலங்கையின் வடமேற்குக் கரையில் இறங்கினார்கள். விஜயன், மல்வத்து ஓயவுக்கு (கதம்ப நதிக்கு) அண்மையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 1.1 இந்தியாவும் இலங்கையும்

லான தம்மன்னாவை (தம்பபன்னியை) தனது வசிப்பிடமாக்கிக் கொண்டான். அவனுடைய அமைச்சர்கள் தத்தமது பெயர்களிற் கிராமங்களை அமைத்தனர். இப்படியாக உபதிஸ்ஸ என்பவனால் உபதிஸ்ஸ கிராமமும் அனுராத என்பவனால் அனுராத கிராமமும் உருவெல என்பவனால் கலா ஓய அல்லது கோண நதிப் பள்ளத்தாக்கில் உருவெல என்ற கிராமமும் அமைக்கப்பட்டன. விஜயன், அப்போது இலங்கையிற் பிரதேசத் தலைவியாக இருந்த குவேனி என்பவளைத் தனது மனையாளாக்கிக் கொண்டான். ஆயினும் பின்னர் முடிசூடிக் கொள்வதன் பொருட்டு மதுரா புரியிலிருந்து இளவரசி ஒருத்தியை வரவழைத்தான் என வரலாற்றுக்கதைகள் கூறுகின்றன. அவளுடன் வந்த கூட்டத்தினர் இரண்டாவதாக இங்கு குடியேறியவர்களாவார்கள்.

விஜயனுக்குப் பின்னர் ஆட்சி செய்யும் பொறுப்பை ஏற்கும்படி அழைக்கப்பட்டு இங்கு வந்த பண்டுவாசுதேவனும் (பண்டுவஸ்தேவன்) அவனுடன் வந்த குழுவினரும் இந்தியாவிலிருந்து இங்கு குடியேறிய மூன்றாவது ஆரியக் குழுவினரெனலாம். விஜயனுடைய அமைச்சர்களால் இவர்கள் உபதிஸ்ஸ கிராமத்திலே வரவேற்கப்பட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

பண்டுவாசுதேவ இளவரசனின் இராணியான பத்தகச்சானா இளவரசியும் அவளுடன் வந்த குழுவினரும் அடுத்ததாக இங்கு குடியேறிய முக்கியமான குழுவினராவார்கள். இவர்கள் இந்தியாவின் கிழக்குப் பகுதியிலுள்ள கங்கை என்ற ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள தாமுறலிப்தி துறைமுகத்திலிருந்து கப்பலேறி இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் கோகண்ணத்தில் (திருக்கோணமலையில்) இறங்கினார்கள். பத்தகச்சானாவுடன் வந்த அவளுடைய சகோதரர்களான இராமன், றோஹணன், தீக்காயு, விஜிதன் ஆகியோர் தத்தமது பெயர்களிலே, பெரும்பாலும் மகாவலிகங்கையின் பள்ளத்தாக்கிற் கிராமங்களை அமைத்தார்களென மகாவம்சம் கூறுகின்றது. மற்றுமொரு குடியேற்றக் குழுவினர் நாட்டின் தென்கிழக்குப் பகுதியிலே கும்புக்கன் ஓய, மாணிக்க கங்கை, கிரிந்தி ஓய, வளவை கங்கை ஆகியவற்றின் பள்ளத்தாக்குகளை அண்டிக் குடியேற்றங்களை அமைத்தார்கள் என்பதற்குரிய சான்றுகளுள. மாணிக்க கங்கைக்கு (கப்பறகந்த நதி) அருகில் அமைக்கப்பட்ட காஜரகாமம், சந்தகாமம் எனப்பட்ட இரு கிராமங்களும், கிரிந்தி ஓய (கரிந்தி நதி)பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்ட மஹாகாம குடியேற்றமும் இவற்றுள் முக்கியமானவையாகும். களனி கங்கைக்கு அருகிற் குடியேறியவர்கள் களனிக் குடியேற்றத்தை அமைத்தார்கள்.

கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பாரதத்தில் மௌரியப் பேரரசு வலுப்பெற்றிருந்த போது மகிந்த தேரருடைய தலைமையிலான தூதுக்குழு ஒன்றினால் இலங்கைக்குப் பௌத்த மதம் கொண்டுவரப்பட்டது. அதே காலத்தில் சங்கமித்தை பிக்குணியும் குழுவினரும் ஸ்ரீ மகாபோதி விருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தின் கிளை ஒன்றினை எடுத்துக் கொண்டு இந்தியாவின் தாமுறலிப்தி துறைமுகத்திற் கப்பலேறி இலங்கையில், யாழ்ப்பாணக்குடா நாட்டின் ஜம்புகோளப் பட்டினத்தில் இறங்கினார்கள். ஸ்ரீ மகாபோதி விருட்சத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அதற்குரிய சேவைகளை மேற்கொள்வதற்குமெனப் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர் குழுவினரும் வந்தனரெனக் கூறப்படுகின்றது. போதிவிருட்சம் சம்பந்தமான வேலைகளுக்கென இவ்வாறு வந்த குழுவினர் நாட்டின் பல்வேறு பகுதிகளிலே குடியேறினார்களெனவும் கூறப்படுகின்றது. இவர்கள் மூலமாகவும் குடியேற்றங்கள் தோன்றி வளர்ந்தன.

## குடியேற்றங்கள் பரவிய முறை


ஆரம்பத்தில் ஆற்று முகத்துவாரங்களை அண்டித் தோன்றிய குடியேற்றங்கள் பின்னர் நாட்டினுள்ளே பரவியன. ஈர வலயத்தில் களனி கங்கையினை அண்டியும் குடியேற்றங்கள் தோன்றினவாயினும், உலர்வலய ஆறுகளை அண்டித் தோன்றிய குடியேற்றங்களிலேயே முக்கியமான வளர்ச்சி காணப்பட்டது. இவற்றுள்ளும் மல்வத்து ஓய, கலா ஓய ஆகியவற்றை அண்டி வடமேற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட குடியேற்றங்களும், அவ்வாறே திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து தொடங்கி மகாவலி கங்கை ஆற்றுப் பள்ளத்தாக்குக்கூடாக நாட்டுக்குள்ளே பரவியிருந்த குடியேற்றங்களும் மிகவும் முக்கியமானவையாகும். இங்ஙனம், வட திசைச் சமவெளியின் வடமேற்குப் பகுதியிலும் வடகிழக்குப் பகுதியிலும் அமைந்திருந்த குடியேற்றங்கள் ஒன்றாக்கப்பட்டு அனுராதபுர இராச்சியம் உருவாக்கப்பட்டது. அனுராத கிராமம் இதன் தலைநகரமாக்கப்பட்டது. இவ்வாறே, இலங்கையின் கிழக்குப் பகுதியிலும் தென் கிழக்குப் பகுதியிலும் தோன்றிய குடியேற்றங்கள் படிப்படியாகப் பரந்து றுகுணை இராச்சியம் உருவாவதற்கு வழிவகுத்தன.

முக்கியமான பொருளாதார முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டே எந்த ஒரு நாகரிகமும் வளர்ச்சியடைகின்றது. இலங்கையில் ஆதியிற் குடியேறியவர்கள் விவசாயத்தினையே தமது முக்கியமான தொழிலாகக் கைக்கொண்டார்கள். எனவேதான் இவர்கள் சுலபமாக நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலே ஆரம்பத்திற் குடியேறினார்கள். பின்னர் சனத்தொகை பெருகியதை அடுத்துக் கமச்செய்கைக்கு அதிக நீர் வேண்டியிருந்தமையினால் குட்டைகள் கால்வாய்கள் ஆகியவற்றைத் தொடுத்து நிர்ப்பாசன முறைகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு வளர்ந்த விவசாயப் பொருளாதாரத்தினை நீர்வள நாகரிகத்தின் அத்திவாரம் எனக் கொள்ளலாம்.

பொருளாதாரம், விவசாயத்திலே தங்கியிருந்தமைக்குரிய காரணங்கள் பல. முதலாவது, இக்குடியேற்றங்களைஅமைத்துவிருத்தி செய்த மக்களுடைய முக்கிய தொழில் விவசாயமாக இருந்தது. இரண்டாவது, விவசாயத்துக்கு ஏற்ற இயற்கைக்காரணிகள் இந்தக் குடியேற்றங்கள் பரவிய பிரதேசங்களிலே காணப்பட்டன. இயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 1.2 இந்தியாவிலிருந்து வந்தவர்கள் குடியேறிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளும் குடியேற்றங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையான கால்வாய்கள், சமதரை யான நிலம், வளமான மண், ஏற்ற கால நிலை ஆகியன முக்கிய காரணி களாகும்.

நீர்ப் பற்றாக்குறை, உலர் வலயத் திலே முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்தது. இந்தச் சம தரைப் பகுதிக் குத் தென்மேற் பருவக் காற்று வீசிய காலத்திலேயே பெரும் பாலும் மழை கிடைத்தது. எனவே மழை இல்லாத வரண்ட காலத்துக்கு வேண்டிய நீரைச் சேமித்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டது. எனவே இவர்கள் குளங்களைக் கட்டி னார்கள். ஆரம்பத்தில் ஆறுகளை அண்டிக் கிராமங்களிலே சிறு குளங் களைக் கட்டிய இவர்கள் பின்னர் ஆறுகளுக்குக் குறுக்கே அணைகளைக் கட்டி வாய்க்கால்கள் வழியே நீரைத் திசை திருப்பிச் சேர்த்தற் பொருட் டுப் பாரிய குளங்களைக் கட்டினார் கள். இவ்வாறாகக் காலப் போக்கில் ஆறுகள், அருவிகள், கால்வாய்கள், குளங்கள் ஆகியன ஒன்றிணைக்கப் பட்டுப் பிரமாண்டமான நீர்ப்பாசன முறை ஒன்று தோன்றியது.

நீர்வள நாகரிகத்தின் முக்கிய மூல வளமான நிலம் ஓர் ஒழுகின்படியே பயன்படுத்தப்பட்டது. பயிர்ச்செய் கையானது, உலர்முறைப் பயிர்ச் செய்கை, ஈரமுறைப் பயிர்ச்செய்கை என இருவகைப்படும். இவற்றுள் ஈர முறைப் பயிர்ச் செய்கையே முக்கிய மானது. ஒரு கிராமத்தில், வளமான வண்டல்மண் காணப்பட்ட பகுதி யிலேயே குளங்களும் வயல்வெளி களும் காணப்பட்டன. குளத்துக்குச் சற்றுத் தூரத்திற் கிராமவாசிகள் வீடுவாசல்களை அமைத்து வாழ்ந் தார்கள். அப்பகுதி நாட்டுப்புறம் எனப்பட்டது. நாட்டுப் புறத்துக்கு அப்பாற் பற்றைக் காடுகள் காணப் பட்டன. அப்பகுதி சேனைப் பயிர்ச் செய்கைக்கும் கால்நடை வளர்ப்புக் கும் பயன்படுத்தப்பட்டது. இங்ங னம் நிலத்தின் தன்மைக்கும் அது விவசாயத்தின் பொருட்டுப் பயன் படுத்தப்பட்ட முறைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது தெளிவு. கிராமத்தின் மேட்டுப் பகுதிகளிலே கிராமவாசிகளின் ஆன்மீக வளர்ச்சி க்கு வேண்டிய தாகபைகளும் பன்ச லைகளும் கட்டப்பட்டிருந்தன.

**பொருளாதார, அரசியல், சமயப் பின்னணி**

நீர்ப்பாசன முறையை விருத்தி செய்வதற்கு அரசர்களுடைய ஆதரவு மிகவும் முக்கியமாக இருந்தது. இது அரசர்களுடைய ஒரு தலையாய கட மையாகக் கருதப்பட்டது. அத்துடன் ஓர் அரசனுடைய சிறப்பு அவன் நீர்ப்பாசன வேலைகளுக்கும் விவசா யத்தின் அபிவிருத்திக்கும் ஆற்றிய சேவைகளைக் கொண்டே மதிப்பிடப் பட்டது. இதனாலேயே பாரிய குளங் களைக் கட்டுவித்த மகாசேனன், தாதுசேனன், பராக்கிரமபாகு ஆகி யோர் சிறந்த மன்னர்களாகப் போற் றப்படுகின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் மன்னர்களுக்கும் விவசாயப் பொருளாதாரத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்ததெனக் கூறலாம். நாட்டிலே அரசியல் நிலை உறுதியாக இருந்த காலப் பகுதிகளிலே விவசாயப் பொருளாதாரச் செழிப்புக் காணப்பட்டது. அரசியல் நிலை உறுதியற்றிருந்த சந்தர்ப்பங்களிலே விவசாயப் பொருளாதாரம் சீரழிந்தமையைக் காணலாம்.

கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து விவசாயப் பொருளாதாரத்தை அத்திவாரமாகக் கொண்டிருந்த நீர் வள நாகரிகம் பௌத்த கலாசாரத்தின் மூலம் வளம் பெற்றது. இந்நாகரிகம் வளர்வதற்கு அனுகூலமாக அமைந்த மூன்று அரச கடமைகள் பற்றி வரலாற்றுக் கதைகளில் எப்பொழுதும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அவை யாவன அரசியல் உறுதிப்பாட்டைப் பேணுதல், நீர்ப்பாசன முறைகளை அமைத்து விவசாய விருத்தியை ஏற்படுத்தல், மக்களுடைய ஆன்மீகப் பண்புகளை வளர்த்தற் பொருட்டுப் பௌத்த மதத்தின் மேம்பாட்டுக்காக உழைத்தல் என்பனவாகும்.

## பயிற்சி

1. இந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்களென வரலாற்றுக் கதைகளிற் கூறப்படும் கூட்டத்தினருடைய வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த சுதேச மக்கள் பற்றிக் கிடைக்கும் ஆதாரங்கள் யாவை?
2. இந்தியக் குடியேற்றக் கூட்டத்தினர் பற்றிய விபரங்களையும் அவர்கள் அமைத்த குடியேற்றங்கள் பற்றிய விபரங்களையும் எழுதுக.
3. இலங்கைப் படம் ஒன்றிலே, இந்திய குழுக்களின் குடியேற்றங்கள் பரவிய ஆற்றுப் பள்ளத்தாக்குகளையும் முக்கிய குடியேற்றங்களையும் குறித்துப்பெயரிடுக.
4. கீழ்க்காணும் ஆறுகளினதும் இடங்களினதும் பழைய பெயர்களை எழுதுக.

   1. திருக்கோணமலை
   2. காங்கேசன்துறை
   3. கதிர்காமம்
   4. மல்வத்து ஓயா
   5. மகாவலி கங்கை
   6. வளவை கங்கை
   7. மாணிக்க கங்கை
   8. களனி கங்கை
   9. கலா ஓயா
   10. ததுறு ஓயா

5. நீர்வள நாகரிகம் நிலைப்பதற்கு மன்னர்களுடைய ஆதரவு எவ்வாறு பயன்பட்டதென விளக்குக.
6. எமது புராதனக் கிராமம் ஒன்றிலே காணப்பட்ட முக்கிய அம்சங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 2

# இலங்கையின் தரைத்தோற்றம், காலநிலை, நீர் வழங்கல் முறை

ஒரு நாட்டின் வரலாற்று வளர்ச்சியிலே அந்நாட்டின் தரைத்தோற்றம் காலநிலை முதலிய பௌதிகச் சூழற் காரணிகள் செல்வாக்குடையனவாகும். எனவே, நீர்வள நாகரிகத்திலே மனிதச் செயற்பாடு பற்றிக் கற்கும்போது நாட்டின் புவியியற் பின்னணி பற்றி ஆராய்வது முக்கியமாகும்.

## தரைத்தோற்றம்

மத்திய மலைநாட்டிலிருந்து நிலம் படிப்படியாக உயரங்குறைந்து சம தரையாகிக் கடற்கரைவரை தாழ்ந்து செல்வது இலங்கையின் தரைத்தோற்றத்தின் முக்கியமான அமிசமாகும். இலங்கையிலே இரண்டு முக்கியமான தரைத்தோற்ற வலயங்களைக் காணலாம். 1. மத்திய மலைப் பிரதேசம் 2. மத்திய மலைப் பிரதேசத்தைச் சூழவுள்ள தாழ் நிலப் பிரதேசம்.

300 மீற்றரிலும் உயர்ந்த பிரதேசம் மத்திய மலைநாட்டைச் சேர்ந்ததாகும். நாட்டின் மிகவுயர்ந்த மலைத் தொடர்கள், முக்கியமான மேட்டு நிலங்கள், இடைவெளிகள், நீர் வீழ்ச்சிகள் ஆகியன காணப்படும் இந்தப் பிரதேசம், இடவிளக்கவியல் நோக்கின்படி ஒரு பல்லுறுப்புப் பிரதேசம் எனப்படும். இப்பிரதேசம், வரலாற்றின் பல்வேறு காலப் பகுதிகளிலே மலயரட்டை, மலய தேசம் ஆகிய பெயர்களாற் குறிப்பிடப்பட்டது.


மத்திய மலைப் பிரதேசத்தைச் சூழவுள்ள தாழ்ந்த நிலப்பிரதேசத்தினை இருபகுதிகளாகப் பிரிக்கலாம். அவையாவன:—

1. கரையோரச் சமவெளிப் பிரதேசம்
2. அகச்சமவெளிப் பிரதேசம்

கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றர் வரை உயர்ந்த பிரதேசம் கரையோரச் சமவெளியினுள் அடங்கும். இந்தச் சமதரைப் பிரதேசத்திலே விரிகுடா, களப்பு, கழிமுகம், முனை போன்ற கடற்கரை நில உறுப்புக்களைக் காணலாம். இலங்கையின் வரலாற்று வளர்ச்சிக்கு இக்கரையோர நில உறுப்புகள் ஊன்று கோல்களாக அமைந்துள்ளன. நீர் வள நாகரிகமானது வடமேற்கு, வடகிழக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு. 2.1 இலங்கையின் நீர்வள நாகரிகம் பரவிய அகச்சமவெளிப் பிரதேசத்து மலைகள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 2.2 இலங்கையின் ஆறுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்குக் கரையோரச் சமவெளிகளைச் சேர்ந்த ஆற்றுமுகங்களை அண்டியே ஆரம்பித்தது. ஜம்புகோளம், மாந்தோட்டம், கோகண்ண (திருக்கோணமலை) போன்ற பழைய துறைமுகங்கள் இச்சமவெளிப் பிரதேசத்திலேயே அமைந்துள்ளன.

கடல் மட்டத்திலிருந்து 30 மீற்றருக்கும் 300 மீற்றருக்கும் இடைப்பட்ட உயரமுடைய பிரதேசம், அகச் சமவெளிப் பிரதேசத்தினுள் அடங்கும். இதன் தென்மேற்குப் பகுதியின் கரையோரச் சமவெளியிலிருந்து படிப்படியாக உயர்ந்து வடக்கு, தெற்குத் திசைகளிற் பரந்து செல்லுகின்ற சமாந்தர பீடபூமிகளைக் காணலாம். ஏனைய பகுதிகளிலே கற்பாறைத் தொடர்கள் காணப்படுகின்றன. திம்புலாகலை, றிதிக்கலை, மிகிந்தலை, சீகிரிய, மொணறாகலை, கதிர்காமக் குன்று ஆகியன எடுத்துக் காட்டுகளாகும். இந்தக் கற்பாறைத் தொடர்களுள் சில, புண்ணிய தலங்களாகவும் சில, அரண்களாகவும் வரலாற்றின் சிற்சில காலப்பகுதிகளிலே பயன்படுத்தப்பட்டன.

## வடிகால் அமைப்பு

மத்திய மலைநாட்டுக்குக் கிடைக்கும் மழை நீர் மலைநாட்டைச் சுற்றியுள்ள சமவெளிகள் ஊடாக நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஆறுகள் மூலம் பாய்ந்து செல்லுகின்றது. உரு 2.2 இல் இலங்கையின் ஆறுகள் காட்டப்பட்டுள்ளன. சிறிய பெரிய குளங்கள் பலவற்றின் மூலம் இலங்கை நீர்வளம் பெறுகின்றது என்பது உருவிலிருந்து புலனாகும். தென்மேற்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் ஓடும் ஆறுகள் ஆண்டு முழுவதும் நீர் நிறைந்தனவாக இருக்கும். ஆயின் ஏனைய பிரதேசங்களுக்கூடாகப் பாய்கின்ற ஆறுகளின் நீர்மட்டம் தென்மேற் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலத்திலே (மே முதல் செத்தெம்பர் வரை) குறையும்.

## கால நிலை

காலநிலை ரீதியில் இலங்கை இரண்டு பிரதான வலயங்களாகப் பிரிக்கப்படுகின்றது. ஒன்று ஈரவலயம் மற்றையது உலர்வலயம். இலங்கையின் காலநிலைக் கூறுகளுள் மழை வீழ்ச்சி மிக முக்கியமானதாகும். இலங்கை பல வழிகளில் மழையைப் பெறுகின்றது. மேற்காவுகை, பருவப் பெயர்ச்சி, ஆவியாதல் ஆகிய இந்த முறைகள் மூலமே பெரும்பாலும் மழை கிடைக்கின்றது. இம்முறைகள் மூலம் ஆண்டு முழுவதும் மழையைப் பெறும் வலயம் ஈர வலயமெனப்படுகின்றது. பொதுவாகத் தென்மேற்கு ஈரவலயமெனக் குறிப்பிடப்படும் இப் பகுதி வரலாற்றின் ஆரம்ப காலங்களிலே தென் பிரதேசம், மாயாரட்டை ஆகிய பெயர்களினாற் குறிப்பிடப்பட்டது. நாட்டின் மேற்கு, தென்மேற்குத் தாழ் நிலங்களும் மத்திய மலைநாட்டின் மேற்குப் பகுதியும் இதனுள் அடங்கும். மே மாதம் முதல் செத்தெம்பர் மாதம் வரை தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் இந்த வலயமே அதிக மழையைப் பெறுகின்றது. காவுகைச் செயற்பாடுகள் மூலமும் இந்த வலயத்துக்கு மழை கிடைக்கின்றது. ஆண்டு முழுவதும் நீர் சுலபமாகக் கிடைக்கும் இவ்வலயத்தின் சராசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு மழை வீழ்ச்சி 1900 மி. மீற்றருக்கும் அதிகமாகும். பெப்புருவரி, ஆகஸ்து ஆகிய மாதங்களில் இங்கு ஓரளவு வரட்சி நிலவும்.

சராசரி ஆண்டு மழை வீழ்ச்சி 1900 மி. மீற்றருக்குக் குறைந்த வலயம் உலர் வலயமாகக் கணிக்கப்படுகின்றது. நாட்டின் வடமேற்கு, வடக்கு, கிழக்கு, தென்கிழக்குச் சமவெளிப் பிரதேசங்களும் மத்திய மலை நாட்டின் கிழக்குப் பகுதியும் இந்த வலயத்துக்கு உரியனவாகும். திசம்பர் முதல் பெப்புருவரி வரையான வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் இவ்வலயத்துக்கு மழை கிடைக்கின்றது. ஈர வலயத்துக்கு மழையைக் கொண்டுவரும்தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் ஒப்பிடும் போது, இந்தக் காற்று மூலம் கிடைக்கும் மழை குறைவாகவும் நிச்சயமற்றதாகவும் இருக்கக் காணலாம் இலங்கையில் தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றுப் பலமாக வீசுகின்ற மே மாதம் முதல் செத்தெம்பர் மாதம் வரையான காலம் இப் பிரதேசத்து வரட்சிக் காலமாகும். அரை வறள் பிரதேசங்களாகக் கணிக்கப்படும் மன்னார் மாவட்டத்திலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இந்த வரட்சி அதிகமாக இருக்கும். அரை வறள் பிரதேசத்தின் சராசரி மழை வீழ்ச்சி 1250 மி. மீற்றருக்குக் குறைவாகும்.

எமது நாட்டுச் சிறுபோகம், பெரும் போகம் எனும் இரண்டு பயிர்ச் செய்கைப் பருவங்களும் மழை வீழ்ச்சியின் பாணிக்கு ஏற்பவே அமைந்துள்ளன. பழைய காலத்துக் குளங்களின் பரம்பலையும் இன்றைய உலர் வலயத்துப் புவியியல் அமிசங்களையும் ஒப்பிட்டு நோக்கும்போது இன்று நிலவும் உலர் வலயக் கால நிலையானது முற்காலத்திலும் ஆதிக்கமுடையதாக இருந்ததெனக் கருதக் கூடியதாக இருக்கின்றது. இங்கு கூறப்பட்டுள்ள உலர் வலயத்து மகாவலி கங்கை, மலாய ரட்டையின் வடக்கு எல்லை, ததுறு ஓயா ஆகியவற்றினை எல்லைகளாகக் கொண்ட வட பிரதேசம் வரலாற்றின் ஆரம்ப காலங்களிலிருந்து ராச ரட்டை அல்லது பிஹிட்டி ரட்டை எனவும் மாகவலி கங்கையிலிருந்து களுகங்கை வரையமைந்த மலாய ரட்டையின் தென் எல்லைவரையான பிரதேசம் றுகுணு ரட்டை எனவும் களுகங்கை, மலாய ரட்டையின் மேற்கு எல்லை, ததுறு ஓயா ஆகியவற்றாற் சூழப்பட்ட பிரதேசம் மாயாரட்டை எனவும் குறிப்பிடப்பட்டன.

## நீர் வழங்கும் திட்டத்தின் அவசியம்

இலங்கையின் விவசாயம், நீர் வழங்கும் முறையிற் பெரும்பாலும் தங்கியிருந்தது. பின்வரும் முக்கிய காரணங்களின் நிமித்தமே நீர் வழங்கும் திட்டம் அவசியமானது. முதலாவதாக, இந்தப் பிரதேசத்துக்கு ஆண்டின் ஒரு பருவத்தில் மாத்திரமே மழை கிடைத்தது. இரண்டாவது, அவ்வாறு கிடைத்த மழையும் போதியதாக இருக்கவில்லை. ஆகையினாலே வரட்சிக் காலத்தில் பிரயோகிப்பதற்குத் தேவையான நீரைச் சேமித்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனைவிட வளர்ந்து கொண்டு வந்த சனத்தொகைக்கு வேண்டிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தல் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகக் காரணங்களும் இதற்குத் தூண்டுகோல்களாக இருந்துள்ளன என்று கூறலாம்.

எமது வரலாற்றுக் கதைகள், ஆதார ஏடுகள், கல்வெட்டுகள் முத லியவற்றின் மூலம் கிடைக்கும் தகவல் களின்படி அனுராதபுர காலத்தின் பிற்பகுதியளவில் இலங்கையின் சனத் தொகை பெரிதாக இருந்துள்ளது. அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற புராதன நகரங்களிற் காண படும் சமய சம்பந்தமான கட்டடங் களினதும் நீர்ப்பாசன அமைப்புகளி னதும் சிதைவுகளைக் கவனிக்கும் போது இது உண்மையென்பது மே லும் தெளிவாகும். இப்பாரிய கட் டட வேலைகளுக்குப் பல தொழிலா ளர்கள் தேவைப்பட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்தப் பெரிய சனத்தொகைக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுவ தற்கு விவசாயத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டியிருந்தமையினால் அதற்கு ஏற்ற முறையில், இயற்கைக் கால்வாய்களை உபயோகித்து நீர்ப் பாசன முறையொன்றினை அமைத் தல் முக்கியமாயிற்று. இதற்கேற்ப அனுராதபுரக் காலத்தின் முற்பகுதி யிலிருந்தே சிறிய குளங்கள் கட்டப் பட்டன. பிற்காலங்களிலே சனத் தொகையும் மனித நடவடிக்கைகளும் அதிகரித்ததையடுத்து ஓரளவு பெரிய குளங்கள் கட்டப்பட்டன. காலப் போக்கிலே இந்தக் குளங்களுடன் இணைந்த குளக்கட்டுகள், கால்வாய் கள் அணைக்கட்டுகள் ஆகியன அடங் கிய பரந்த நீர்ப்பாசன முறை உரு வானது.

**கால்வாய்களை அமைப்பதற்குத் தரைத் தோற்ற அமிசங்களைப் பயன்படுத் தியமை**

நீர்ப்பாசனக் கால்வாய்களை அமைக்கும் போது தரையின் தாழ்வு, உயர்வுத் தன்மைகளை இந்நாட்டு மக்கள் நன்கு பயன்படுத்தியுள்ளனர். புராதன நீர் வழங்கும் முறைகளின் அமைப்பினை நோக்கும்போது இது தெளிவாகும்.

உட்சமவெளிப் பகுதிகளுக்குக் குறுக்கே அமைந்துள்ள குறுகிய மலைத் தொடர்களின் இடைவெளி களினூடாக ஆறுகள் பாய்ந்த சந் தர்ப்பங்களிலே மலைத் தொடரின் இரண்டு முனைகளையும் தொடுத்து அணைகள் கட்டப்பட்டன. ஆற்றின் பாய்ச்சல் இப்படியாகத் தடை செய் யப்பட்டபோது அணையடியில் நீர் தேங்கி நின்று குளமானது. அதன் பின்னர் சமவெளியினூடாக நிலத் தின் சாய்வுக்கு ஏற்றதாகக் கால்வாய் கள் அமைக்கப்பட்டன. இக்கால் வாய்கள் மூலம் குளத்தின் மட்டத் துக்குக் குறைந்த சமவெளிகளிலும் பள்ளத்தாக்குகளிலுமிருந்த வயல்க ளுக்கு நீர் வழங்கப்பட்டது. மல்வத்து ஓயாவை அண்டி அமைக்கப்பட்ட அபய வாவி, திஸா வாவி ஆகியன வும் கலா ஓயாவை அண்டி அமைக் கப்பட்ட கலா வாவியும், குறுலு ஓயாவை அண்டி அமைக்கப்பட்ட குறுலு வாவியும் இதற்கு உதாரணங் களாகும்.

ஓர் ஆறு வளைந்து வளைந்து செல் வதனால் நீர்ச்சுழி உண்டாகுபோது நீரோட்டத்தின் வேகம் குறைகின் றது. இந்த இயல்பினைப் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி ஆறுகளுக்குக் குறுக்கே அணைகளை அமைத்து அதனாற் சேரும் நீரைக் கால்வாய்கள் மூலம் சம வெளிப் பகுதிகளுக்கு வழங்கக் கூடியதாக இருந்தது. கி.பி. முதலாம் நூற்றாண்டில், வசப மன்னன், மகாவலி கங்கையின் ஒரு கிளையான அம்பன் கங்கையை மறித்து அலகர கால்வாய் மூலம் நீர் வழங்கியமை இதற்குரிய ஓர் உதாரணமாகும். இன்னும், மகாவலி கங்கைக்குக் குறுக்கே மினிப்பேயில் அணை கட்டி மினிப்பே கால்வாய் மூலம் சமவெளியினூடாகப் பொலன்னறுவைப் பிரதேசம் வரை பரந்துள்ள தாழ் நிலப் பகுதிக்கு இப்படியாகவே நீர் வழங்கப்பட்டது.

பெரிய ஆறுகளின் நீர் நிலத்தின் சாய்வுக்கு ஏற்பக் கால்வாய்கள் வழியாகக் குளங்களுக்கு வழங்கப்பட்டது. அலகரவில் திசை திருப்பப்பட்ட அம்பன் கங்கையின் நீர் கால்வாய்களினூடாக மின்னேரியா, கிரிதலை, கவுடுல்ல, கந்தளாய் ஆகிய குளங்களுக்கு வழங்கப்பட்டமை உதாரணமாகும்.

மேலும், புராதன காலச் சிற்பர்கள், கால்வாய்களை அமைக்கும் போது நிலத்தின் சாய்வின் அளவினைக் கவனித்தார்கள் என்பதற்கு ஆதாரங்களுள. கலா வாவியிலிருந்து திஸா வாவிக்கு நீரைக் கொண்டு செல்லும் ஜய கங்கை (யோத கால்வாய்) இதற்குரிய உதாரணமாகும். இங்கே சாய்வின் அளவு, கிலோ மீற்றருக்கு ஏறக்குறைய 75 மில்லி மீற்றரெனக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு கிரமமாகச் சாய்வுகளைப் பயன்படுத்தியமையினால், கால்வாயின் கிடை அரிக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டது மாத்திரமன்றி மிகப் பரந்த பிரதேசத்துக்கு நீரை வழங்கக் கூடியதாகவும் இருந்தது.

இப்படியாகக் குளங்கள், ஆறுகள் அணைகள், குளக்கட்டுகள், கால்வாகள், ஆகிய கூறுகளைக் கொண்டமைந்த பாரிய நீர்ப்பாசன முறையொன்று அனுராதபுர காலத்தின் பிற்பகுதியளவில் அமைக்கப்பட்டிருந்தது.

**குளங்கள்**


இந்த நீர்ப்பாசன அமைப்பின் அடிப்படைக் கூறு குளம். ஒரு குளத்தின் முக்கியமான கூறுகள் யாவை என ஆராய்ந்து பார்ப்போம். குளக் கட்டு, கலிங்கற்றொட்டி, கலிங்கல், அலைதாங்கி, சுருங்கை ஆகியன ஒரு குளத்தின் முக்கியமான கூறுகளெனலாம்.

**குளக்கட்டு**

ஒரு குளத்தின் மிகவும் முக்கியமான பகுதி இதுவாகும். ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்த இரு மலை முனைகளைத் தொடுத்து அணை கட்டப்படுவதால் இக்கட்டுக்கு மேலுள்ள பகுதியிலிருந்து பாய்ந்து வருகின்ற நீர் இந்தக் கட்டுக் காரணமாக ஒன்று சேர்ந்து குளமாக அமைகின்றது. குளத்தின் நீர்க்கொள்திறனுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய அளவுக்குப் பலமுடையதாகக் குளக்கட்டு அமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 2.3 ஒரு குளத்தின் முக்கியமான கூறுகள்

**அலைதாங்கி**

குளக்கட்டைப் பாதுகாத்தற் பொருட்டுக் குளக் கட்டின் உட்புறத்தின் அடியில் தட்டைக் கருங்கற் படையொன்று போடப்பட்டது. இதனால் குளக் கட்டுப் பலப்படுத்தப்பட்டதுடன் அலைகளினால் குளக் கட்டு அரிக்கப்படாமலும் பாதுகாக்கப்பட்டது.

**சுருங்கை**

குளத்திலே அதிக நீர் உண்டான போது மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இடம் சுருங்கை என்று சொல்லப்படும். அநேகமாகக் குளக்கட்டின் ஓர் எல்லையில், குளக்கட்டின் மட்டத்துக்குக்கீழ் கற்பாளங்களைக்கொண்டு ஓர் இடைவெளி போல இது அமைக்கப்படும். நீர் அதிகரித்த வேளைகளில் மேலதிகமான நீர் இதனூடாகப் பாய்ந்து வெளிலே செல்வதனால் குளக்கட்டுக்கு ஏற்படக்கூடிய சேதம் தவிர்க்கப்படுகின்றது.

**கலிங்கல்**

குளத்திலிருந்து நீர் வெளியே செல்லும் துவாரம் கலிங்கல் எனப்படும். ஒரு குளத்திலே இது ஒன்றேனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவேனும்இருக்கக்கூடும். சாதாரண அளவுடைய ஒரு குளத்தில் இரண்டு கலிங்கற்கள் இருக்கும். குளத்து நீர் மட்டம் உயர்ந்திருக்கும் போது நீரை வெளியேற்றத்தக்க முறையில் மேல் நீர் மட்டத்தில் அமைக்கப்படும் கலிங் கல் உலர் கலிங்கல் எனப்படும். இத னூடாக நீர் மட்டத்துக்கு ஓரளவு உயர்ந்த மட்டப் பகுதிகளுக்கு நீரை வழங்கலாம்.

குளக்கட்டின் மட்டத்துக்குக் குறைந்த மட்டத்தில் அமைக்கப்படும் கலிங்கல் ஈரக் கலிங்கல் எனப்படும். நீர் மட்டம் அதிகம் குறைந்துள்ள வேளைகளில் ஈரக் கலிங்கல்லூடா கவே நீர் பெற்றுக் கொள்ளப்படும். குளத்தின் திருத்த வேலைகளுக்காகக் குளத்து நீரை அப்புறப்படுத்து வதற்கு ஈரக் கலிங்கல்லே பயன்படுத் தப்படும். சிறிய குளங்களிலே ஈரக் கலிங்கற்கள் மாத்திரமே காணப்படும்.

**கலிங்கற்றொட்டி**

புராதனக் குளக்கட்டு வேலைக ளிலே மிகவும் சிறந்த அமைப்பு கலிங் கற்றொட்டியாகும். எனவே கலிங் கற்றொட்டியின் அமைப்புப் பற்றி யும் நாம் விசேடமாக ஆராய்தல் வேண்டும். பரந்த ஆழமான ஒரு குள த்திலிருந்து குளக்கட்டுக்குக் குறுக்கே நீர் பாய்ந்து கலிங்கல்லுக்கூடாக வேக மாக வெளியே செல்லும்போது உண் டாகும் அமுக்கத்தினால் குளக்கட்டு பெரிதும் பாதிக்கப்படக்கூடும். குளக் கரையும் நீர் மட்டமும் சந்திக்கின்ற இடத்திலே ஆழமான, சதுரக் கிணறு போன்று அமைக்கப்படும் கலிங்கற் றொட்டி மூலம் அவ்வமுக்கம் கட்டுப் படுத்தப்படுகின்றது. கலிங்கற்றொட்டி யானது கலிங்கலில் அமைக்கப்பட்ட முக்கியமான கூறானது. இக்கலிங்கற் றொட்டியின் அடியிலிருந்து குளத்தின் மேட்டுக்கு ஊடாக நீர் கொண்டு செல்லப்படும். தேவையான நேரத் தில், தேவையான அளவு நீரைப் பெற்றுக் கொள்ளுவதன் பொருட்டு இத்தொட்டியிலே நீரைக் கட்டுப் படுத்தும் உபகரணம் பொருத்தப்பட் டிருந்தது. பழைய கல்வெட்டுகள் முதலியவற்றிலே இது 'மொகொல' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்ப காலத்திலே கட்டப்பட்ட கலிங்கற்றொட்டிகளும் பிற்காலத் திலே கட்டப்பட்ட கலிங்கற்றொட்டி களும் பருமனில் மாத்திரமே வித்தி யாசப்படுகின்றன. இவற்றுக்கிடையில் தொழினுட்ப வேறுபாடுகள் காணப் படுவதில்லை. ஆரம்ப காலத்திலேயே கலிங்கற் றொட்டிகள் பூரண தொழி னுட்பத் திறனுடன் அமைக்கப்பட்ட னவென்பது இதிலிருந்து புரிகின்றது.

**காவற்கல்**

குளத்தின் கலிங்கல்லில் அல்லது அதற்கு அண்மையில் பாம்பு வடிவு டைய காவற் கல்லொன்று அநேக மாகக் காணப்படும். பாம்புகள் நீருக் குக் கீழ்க் குடிகொண்டிருப்பதாக ஆதி கால மக்கள் நம்பினார்கள். எனவே குளங்கள், கிணறுகள் முதலியவற்றை அமைத்தபோது அவற்றுக்குக் காவ லாகப் பாம்பின் உருவம் வைக்கப் பட்டதாகத் தோன்றுகின்றது. அப் படியாகப் பாம்பின் உருவம் வைக் கப்பட்டபோது குளத்தின் நீர் மட் டம் குறையாதென்ற நம்பிக்கை இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி

1\. (அ) இலங்கையின் உலர் வலயச் சம வெளிகளைச்சுருக்கமாகக் கூறுக.

(ஆ) இச்சமவெளிகளுக்கு நீர் வழங்கும் முறை ஏன் அவசியமானது என விளக்குக.

2\. நிலத்தின் உயர்ந்த, தாழ்ந்த தன்மைகள் நீர் வழங்கல் திட்டங்களை அமைத்த போது எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என விளக்குக.

3\. ஒரு குளத்தின்பகுதிகளைக்காட்டும் மாதிரியுரு ஒன்று அமைக்க.

4\. இலங்கைப் படம் ஒன்று வரைந்து பின் வருவனவற்றை அடையாளஞ் செய்க.

(அ) 300 மீ. உயரக்கோடு

(ஆ) மகாவலி கங்கை

(இ) கல் ஓயா

(ஈ) கிரிந்தி ஓயா

(உ) வளவை கங்கை

(ஊ) களு கங்கை

(எ) தெதுறு ஓயா

(ஏ) ராச ரட்டை

(ஓ) மலாய ரட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 3

# இலங்கையின் நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி

மிகப் பழைய காலத்தில் வாழ்ந்த மக்கள் ஆற்று நீரையும் மழை நீரையும் பயன் படுத்தியே விவசாயம் செய்து வந்தார்கள். ஆயின் காலப் போக்கில், வளர்ந்து கொண்டு வந்த சனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்தற்பொருட்டும், கோடை காலத்திலே பயிர்ச் செய்கையை மேற் கொள்ளுதற் பொருட்டும் நீரைச் சேமித்து வைக்க வேண்டிய அவசிய மேற்பட்டது. எனவே, குளங்களையும் கால்வாய்களையும் அமைப்பது அவசியமாயிற்று. ஆரம்பத்திலே, கிராம மட்டத்திற் சிறு குளங்களை அமைக்கும் பொறுப்பானது கிராமத் தலைவனுக்கு வழங்கப்பட்டிருந்தது. காலப் போக்கில், பாரிய குளங்களையும் கால்வாய்களையும் அமைக்கும் பணியிற் பொதுமக்களுடைய சேவையைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அரசனுடைய தலைமைத்துவம் வேண்டியதாயிற்று. எனவே மக்களுடைய சீவனோபாயமான விவசாயத்துக்கு வேண்டிய நீரை வழங்கும் பணி அரசனுடைய முக்கிய கடமையாகக் கருதப்பட்டது. எமது வரலாற்றுக் கதைகளிலே அரசர்களைப் பற்றிக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில் அவர்கள் ஒவ்வொருவரும் நீர்ப்பாசன வேலைகளுக்கு வழங்கிய ஆதரவு பற்றி விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றுக் கதைகளிலே, விஜய மன்னனுடைய அமைச்சர்களுள் ஒருவனான அனுராத என்பவனால் கட்டுவிக்கப்பட்ட ஒரு குளம் பற்றியே முதன் முதலிற் குறிப்பிடப்படுகின்றது. ஆயின் இக்குளம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதன் பின்னர் பண்டுகாபய மன்னனால் அபய வாவி, ஜய வாவி, காமினி வாவி எனப்பட்ட மூன்று வாவிகள் கட்டப்பட்டனவாக வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன. இவற்றுள் அபயவாவி மாத்திரமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது இப்போது பசவக்குளம் என்று குறிப்பிடப்படுகின்றது. அடுத்ததாகத் தேவாநம்பிய திஸ்ஸனாற் (கி.மு. 247-207) கட்டுவிக்கப்பட்ட திஸா வாவி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அபய வாவி, திஸா வாவி ஆகிய இரண்டு வாவிகளும் அனுராதபுரத்து மல்வத்து ஓயாவுக்கு அண்மையில் இருந்தன. சத்தாதிஸ்ஸ மன்னன் (கி.மு. 137-119) 18 குளங்களைக் கட்டுவித்தான் என வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன. இங்ஙனம் ஆரம்ப காலத்திற் கட்டப்பட்ட குளங்களுள் ஒரு சில மத்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவமிசத்திற் குறிப்பிடப்பட்டுள்ள னவாயினும் இந்தக் காலத்துக்குரிய கல்வெட்டுக்களிலே பல சிறிய குளங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கிறிஸ்து காலத்தின் ஆரம்பம் வரை கட்டப்பட்ட குளங்கள் பரம்பியுள்ள முறையினை நோக்கும்போது அவை மல்வத்து ஓயா, கலா ஓயா, தெதுறு ஓயா, கிரிந்தி ஓயா, மாணிக்க கங்கை, கும்புக்கன் ஓயா, வளவை கங்கை, கல் ஓயா ஆகிய ஆறுகளை அண்டியே அமைக்கப்பட்டன என்பது தெளிவாகும்.

பாரிய குளங்களைக் கட்டுவதிலே முன்னோடியானவனாக வசப மன்னனை (கி.பி. 67—111) கூறலாம். ஆயின் பிற்காலங்களிற் கட்டப்பட்ட குளங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது இம்மன்னனாற் கட்டப்பட்ட குளங்கள் அவ்வளவு பெரியன வென்று கூறமுடியாது. வசப மன்னன் 11 குளங்களையும் 12 கால்வாய்களையும் கட்டுவித்தான் என்று மகாவமிசம் கூறுகின்றது. இக்குளங்களுள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிலவற்றின் பெயர்கள் மகா விலச்சிக் குளம், மானாகட்டியகுளம், நொச்சிப்பொத்தான குளம், கிரிவடுன்ன குளம் என்பனவாகும். வசப மன்னனாற் கட்டப்பட்ட கால்வாய்களுள் அலகர கால்வாய் மாத்திரமே வரலாற்றுக் கதைகளால் இடம்பெற்றுள்ளது. அலகரவுக்கு அண்மையில் அம்பன் கங்கைக்குக் குறுக்கே கட்டப்பட்ட அணையிலிருந்து ஆரம்பமாகும் இக் கால்வாய் ஏறக்குறைய 48 கிலோமீற்றர் தூரத்துக்கூடாகச் சென்று கிரி ஓயாவில் முடிவடைகின்றதாகக் கருதப்படுகின்றது. அலகர போன்ற பெரிய ஒரு கால்வாயைக் கட்டுவதற்கு வேண்டிய சிறந்த தொழினுட்ப அறிவும் ஆற்றலும் முதலாம் நூற்றாண்டளவிலேயே இந்நாட்டு மக்களிடத்திற் காணப்பட்டதென்பது இதிலிருந்து புலனாகும். வசப மன்னன் காலத்தில் சுரங்கக் கால்வாய்களும் அமைக்கப்பட்டன எனக் கூறப்படுகின்றது. அனுராதபுரத்துறன் மசு உத்தியானத்துத் தடாகங்களுக்குத் திஸா வாவியிலிருந்து நீர் கொண்டு செல்லப்பட்ட இப்படியான சுரங்கக் கால்வாய்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத்துறையில், மகாசேன (கி.பி. 274—301) மன்னனுடைய ஆட்சிக் காலத்திலேயே அதிக முன்னேற்றம் காணப்பட்டது. இவனால் 16 குளங்களும் ஒரு பெரிய கால்வாயும் கட்டுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவனாற் கட்டுவிக்கப்பட்ட மின்னேரியாக் குளம் அதுவரை கட்டப்பட்ட குளங்கள் எல்லாவற்றையும் விடப் பெரியதாகும். மின்னேரியாக் குளம், குறுளு வாவி, மகாகணதறா வாவி, மாமிணியவாவி, மகாறத்மலே வாவி, கவுடுள்ள வாவி, மகாகல் கடவள வாவி, மாகல்ல வாவி அகியன மாகசேன மன்னனாற் கட்டுவிக்கப்பட்டனவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மின்னேரியாக் குளமானது மின்னேரி ஓயாவையண்டி அமைக்கப்பட்டதாகும். மின்னேரியா குளத்துக்குப் பெருமளவு நீர் தேவைப்பட்டது. எனவே, முன்னர் வசப மன்னனாற் கட்டுவிக்கப்பட்ட அலகர அணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டை உயர்த்திக் கால்வாயையும் பெருப்பித்து அக்கால்வாயிலிருந்து தலவத்து கால்வாய் வழியாக மின்னேரியா குளத்துக்கு நீர் பெற்றுக் கொள்ளப்பட்டது. மகாவலி கங்கையிலிருந்து ஆரம்பிக்கின்ற பப்பதந்த கால்வாயும் மகாசேன மன்னனாற் கட்டுவிக்கப்பட்டதாகும்.

மகாவலி கங்கையின் ஒரு கிளையான கவுடுலு ஓயவை மறித்து கவுடுலு வாவி அமைக்கப்பட்டது. இந்த வாவிக்கு மின்னேரியா குளத்திலிருந்து பத்துக் கிலோமீற்றர்வரை நீளமான ஒரு கால்வாய் மூலம் மேலதிக நீர் வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் அலகர-மின்னேரியா-கவுடுலு என்ற ஒன்றுசேர்க்கப்பட்ட பாரிய நீர்ப்பாசன முறையொன்றும் உருவானது. இது நீர்ப்பாசன முறையின் வரலாற்றிலே புதிய ஓர் அத்தியாயத்தின் ஆரம்பமானது. யாங் ஓயாவை அண்டிக் கட்டப்பட்ட குறுலு வாவியும் மல்வத்து ஓயாவின் ஓர் கிளையான கணதறா ஓயாவைமறித்து அமைக்கப்பட்ட மகாகணதறா வாவியும் மகாசேன மன்னனாற் கட்டுவிக்கப்பட்ட முக்கியமான இரண்டு வாவிகளாகும். தற்போதைய மாதுறு ஓயா நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் இருந்த மகாதாறகல்லக்க வாவியும் மகாசேன மன்னனால் அமைக்கப்பட்டதாகும். மகாசேன மன்னன் மேற்கொண்ட பாரிய நீர்ப்பாசன வேலைகள் காரணமாக அவன் தெய்வமாக மதிக்கப்பட்டான். இன்றும் 'மின்னேரியா தெய்வம்' என்ற பெயரில் அப்பிரதேசத்து மக்கள் அவனுக்கு பூசைகள் நடத்தி வருகின்றார்கள்.

நீர்ப்பாசன வரலாற்றிலே அடுத்ததாக முக்கியமானவன் தாதுசேன மன்னன் (கி.பி. 455-473). மகாசேன மன்னனுடைய பெயருடன் மின்னேரியாக் குளம் எவ்வாறு இணைந்துள்ளதோ அவ்வாறே தாதுசேன மன்னனுடைய பெயருடன் கலாவாவி இணைந்துள்ளது. தாதுசேனன் 18 குளங்களையும் ஒரு கால்வாயையும் கட்டுவித்தான் என்று வரலாற்றுக் கதைகளும் இலக்கிய ஆதார நூல்களும் கூறுகின்றன. இவற்றுள் முக்கியமானது கலா வாவியாகும். அக்காலத்தில் அனுராதபுரத்திலே அதிகரித்துக் கொண்டுவந்த சனத்தொகைக்கும் விவசாயத்துக்கும் தேவையான நீர் கலா வாவியிலிருந்து திஸா வாவிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இக்கால்வாய், யோத கால்வாய் அல்லது ஜய கங்கை என்று குறிப்பிடப்படுகின்றது. இதுவும் தாதுசேன மன்னனாற் கட்டப்பட்டதாகும். கலா ஓயாவின் மேற்பகுதிகளுக்குத் தென்மேற்பருவப் பெயர்ச்சிக் காற்று, வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆகிய இரண்டு பருவப் பெயர்ச்சிக் காற்றுகள் மூலமும் மழை கிடைக்கின்றது. ஆகையினாலே, கலாஓயாவிலிருந்து நீரைப்பெறுகின்ற கலா வாவிக்கு வருடம் முழுவதும் நீர் கிடைக்கின்றது. அத்துடன் அந்நீர் ஜய கங்கை மூலம் அனுராதபுரத்து திஸா வாவிக்கும் ஏனைய குளங்களுக்கும் கொண்டு செல்லப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. தாதுசேன மன்னன் மறைத்து வைத்திருந்ததாகக் கருதப்பட்ட திரவியத்தைத் தனக்குத் தரும்படி இளவரசன் காசியப்பன் கேட்ட போது, கலா வாவியிலிருந்து இரு கைகளாலும் நீரை அள்ளிச் சென்று ''இதுவே என்னிடமுள்ள திரவியம்'' என்று தாதுசேனன் கூறியதாகச் சொல்லப்படுகின்றது. கலா வாவியை விடத் தாதுசேனன்,கெக்கிராவைக்கு அண்மையிலுள்ள மாததுகம வாவி, மன்னார் மாவட்டத்துப் பாணகம் வாவி அல்லது பாணன் குளம், மன்னார் மாவட்டத்து யோத வாவியாக இருக்கலாமெனக் கருதப்படுகின்ற மானாமது வாவி,குருணாகல் மாவட்டத்துச் சங்கமு விகாரைக்கு அண்மையிலுள்ள மெத்தக்குட்டிய வாவி,இப் பாகமுவுக்குச் சற்றுத் தூரத்திலுள்ள மாவெலிய வாவி அல்லது மகளுவாவி எனப்படும் வாவிகளையும் கட்டுவித்தான்.


நீர்ப்பாசனம் பற்றிய வரலாற்றில் அடுத்ததாக முக்கியத்துவம்பெறுவது இரண்டாம் முகல மன்னனுடைய (கி.பி.531-551) ஆட்சிக்காலமாகும். இவன் மூன்று குளங்களைக் கட்டுவித்தான். இவற்றுள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன பதவியா குளம், பத்பகன் குளம் என்பனவே அவ்விரண்டுமாகும். பத்பகன் குளம் இம் மன்னனாற் கட்டுவிக்கப்பட்ட மிகப் பெரிய குளமாகும். இந்தக் குளம் இப்போது நாச்சதுவ குளம் எனக் குறிப்பிடப்படுகின்றது. மல்வத்து ஓயாவை மறித்துக் கட்டப்பட்டுள்ள இக்குளம், ஜய கங்கையிலிருந்து வெட்டப்பட்ட, பத்துக் கிலோ மீற்றர் நீளமுடைய ஒரு கால்வாய் மூலம் மேலதிக நீரைப் பெற்றது.

இலங்கையின் நீர்ப்பாசன வரலாறு பற்றி ஆராயும்போது முதலாம் அக்கபோதி அல்லது முதலாம் அக்போ (கி.பி. 571-604) மன்னன் பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும். குருணாகல் சிறிவட்டமானக வாவி, முல்லைத்தீவிலுள்ள குறுந்து வாவி அல்லது கண்டி முறுப்புக் குளம், வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடு குளம் ஆகியன இம்மன்னன் நீர்ப்பாசனத் துறைக்குச்செய்தபங்களிப்புகளாகும்.

இக்குளங்களைத் தவிர முதலாவது அக்போ மன்னன் மணிமேகலை அல்லது மினிப்பே என்ற சிறந்த அணைக் கட்டினையும் அமைப்பித்தான். மினிப்பேயில் மகாவலி கங்கையை மறித்து இந்த அணைக்கட்டை அமைத்து அதன் மூலம் சேர்க்கப்பட்ட நீர் 27 கிலோமீற்றர் நீளமான ஒருகால்வாய் வழியே கொண்டு செல்லப்பட்டு மகாவலி கங்கையின் இடது கரை வயல்களுக்கு வழங்கப்பட்டது. முதலாம் அக்போ மன்னனுடைய மரணத்தின் பின்னர் அரசனான இரண்டாம் அக்போ (கி.பி. 604-614) நீர்ப் பாசனத்துறைக்கு மிகப் பெரும் சேவை ஆற்றினான். இவன் கந்தளாய் குளம், கிரிதலை வாவி ஆகியவற்றைக் கட்டுவித்தான். கந்தளாய் குளம் ஒரு பெரிய நீர்த்தேக்கமாகும். இக்குளம் நிறைந்திருக்கும்போது இதன் நீர்ப் பரப்பு 1300 ஹெட்ரயருக்கும் அதிகமாகும். முதலாம் அக்போ மன்னன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 2.3 இலங்கையின் குளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னேரியா குளத்திலிருந்து கட்டு வதற்கு ஆரம்பிக்கப்பட்டுக் கட்டி முடியாத நிலையிலிருந்த கால்வாயினைக் கட்டி முடித்து அதன் மூலம் கந்தளாய் குளத்துக்கு நீர் வழங்கப் பட்டது. இங்ஙனம் அலகர, மின்னேரியா, கவுடுலு ஆகிய இடங்களின் நீர்ப்பாசன அமைப்புகள் கந்தளாயுடன் இணைக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் அக்போ மன்னன் காலத்தில் அனுராதபுரக் காலப்பகுதியின் நீர்ப்பாசன வேலைகள் உச்ச நிலையை அடைந்திருந்தன. ஆற்று நீரைத் திசைதிருப்புதல், நீரைச் சேர்த்தல், நீரைப் பேணல் ஆகியன சம்பந்தமான பல நடவடிக்கைகள் இக்காலப்பகுதியிலே ஒருங்கே மேற் கொள்ளப்பட்டு நீர்ப்பாசன வேலைகள் பூரண நிலையை அடைந்திருந்தன. இந்த நீர்ப்பாசன முறைகளைக் கட்டியெழுப்பிய தொழிலாளர் மிகுந்த தூர நோக்குடன் இவற்றைத் திட்டமிட்டுள்ளார்கள். இந்தவேலைகளை மேற்கொள்ளுவதற்கு என்ன கணிதமுறையை அல்லதுதொழினுட்ப முறையை அவர்கள் கையாண்டார் களென இன்று எம்மாற் கூறமுடியாதிருக்கின்றது. இவை பற்றி எழுதப் பட்ட ஏடுகள் எதுவும் இதுவரை எமக்குக் கிடைத்தில. புராதன இலங்கையிலே இத்தகைய தொழினுட்ப அறிவு, தொழினுட்பப் பிரிவினர் மத்தியிற் குரு சீடன் முறையிற் பரம்பரை பரம்பரையாக வழங்கப்பட்டு வந்தமையினால் அது எழுதி வைக்கப்படவில்லை எனக் கூறலாம்.

இரண்டாம் அக்போ காலத்துக்குப் பின்னர் ஏறக்குறைய 60 ஆண்டுகளாக நாட்டின் அரசியல் நிலை குழப்பமாக இருந்தது. மானவம்மன் (கி.பி. 684-718)அரசனான பின்னர் நாட்டிலே மீண்டும் அமைதி ஏற்பட்டது. இரண்டாம் அக்போ மன்னன் காலத்தின் இறுதிவரை ஆட்சி செய்த அரசர்கள் முக்கியமான நீர்ப்பாசன வேலைகளை மேற் கொண்டதாகக் கூறப்படவில்லை. ஆயினும் இருந்த நீர்ப்பாசன முறைகளைப் பேணுதல், புனரமைத்தல், பெருப்பித்தல் போன்ற வேலைகளை ஒவ்வொரு காலத்து அரசர்களும் கவனித்து வந்தார்கள். கி.பி. 1017 இல் சோழப் பேரரசனாற் பிடிக்கப்பட்ட பின்னர் அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைந்தது. மீண்டும் நீர்ப்பாசனத் துறைக்கு முக்கிய சேவையாற்றியவர்களாகப் பொலன்னறுவைக் காலத்தைச் சேர்ந்த முதலாம் விஜயபாகுவும், மகா பராக்கிரமபாகுவும்போற்றப்படுகின்றனர்.

முதலாம் விஜயபாகு மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1070-1110) மேற் கொள்ளப்பட்ட நீர்ப்பாசன வேலைகளை நோக்கும் போது, இக்காலப்பகுதியில் புனரமைப்பு வேலைகளுக்கே அதிக கவனஞ்செலுத்தப்பட்டதாகத் தோன்றுகின்றது எனலாம். சோழர் ஆட்சி நிலவிய கி.பி. 1017 முதல் கி.பி. 1070 வரையான காலத்தில் ராசரட்டையின் நீர்ப்பாசன அமைப்புகள் அழிந்த நிலையில் அல்லது சிதைவுற்ற நிலையில் இருந்தன என்பது இதிலிருந்து புலனாகும். ஆயின் இக் காலப் பகுதியிலே ஆக்கிரமிப்புச் செய்தசோழப் படையினர் நீர்ப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன அமைப்புகளை அழித்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் எதுவும் இல்லை. அதேபோன்று, இக்காலத்திலே நாட்டின் நீர்ப்பாசன வேலைப்கள் பேணப்பட்டு வந்ததாகத் கூறும் ஆதாரங்களும் இல்லை. எனவே, ராசரட்டை சோழர்களின் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த ஏறக்குறைய 50 வருட காலத்திலே வெள்ளப்பெருக்குப் போன்ற இயற்கை விபத்துக்களினால் இடிந்து உடைந்துபோன நீர்ப்பாசன அமைப்புகளை உடனுக்குடன் புனரமைப்புச் செய்வதற்கு வேண்டிய அரச ஆதரவும் நிருவாக அமைப்பும் இல்லாத காரணத்தினாலேயே நீர்ப்பாசன முறை முற்று முழுதாகப் பழுதடைந்ததெனலாம். இதனாலேயே சோழரிடமிருந்து இராச்சியத்தை மீட்டுக் கொண்டதும் நீர்ப்பாசன முறையைப் புனரமைப்புச் செய்வதற்கு விஜயபாகு நடவடிக்கை மேற்கொண்டான். இவன், அலகர கால்வாயைத் திருத்தி அதனுடன் இணைந்த மின்னேரி-கவுடுலு - கந்தளாய் நீர்ப்பாசன முறையை உரிய நிலைக்குக் கொண்டு வந்தான். மேலும் இவன், மககல் கடவலை, மககணதறாவை, பத்பகன் வாவி, நாச்சதுவ ஆகிய குளங்களைத் திருத்தியமைத்தான்.

முதலாம் விஜயபாகுவுக்குப் பின்னர் மகா பராக்கிரமபாகு அரசனாகும் வரை சிங்காசன உரிமை பற்றிப் பிணக்குகள் இருந்து வந்தன. இந்தக் குழப்ப நிலை காரணமாக நீர்ப்பாசனத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இப்பிணக்குகளின்போது போரில் ஈடுபட்டிருந்த இரு பிரிவினரும் போர்த்தந்திரங்களாகக் கால்வாய்கள், அணைக்கட்டுகள் ஆகியவற்றை இடித்து வீழ்த்தினார்களெனக் கூறப்படுகின்றது.

நீர்ப்பாசனத் துறை சம்பந்தமாக அடுத்து முக்கியத்துவம் பெறும் காலம் பராக்கிரம மன்னனுடைய (கி.பி. 1153-1186) ஆட்சிக் காலமாகும். அக்காலப் பகுதி, இலங்கையின் நீர்ப்பாசனத்துறை வரலாற்றின் பொற்கால மெனக் கருதப்படுகின்றது. பராக்கிரமபாகு கி.பி. 1153 இற் பொலன்னறுவை அரசனாவதற்கு முன்னர் கலா ஓயாவுக்கும் களுகங்கைக்குமிடைப்பட்ட தென் பிரதேசத்தின், அதாவது மாயா ரட்டையின், மகா ஆதிப்பாதன் என்ற பதவியை வகித்துக் கொண்டு பராக்கிரமபுரம் என்ற பெயரிலே ஒரு நகரை அமைத்து அங்கே வசித்து வந்தான் என்று கூறப்படுகின்றது. இவன், இன்று பண்டுவஸ்நுவர என அழைக்கப்படும் அப்பராக்கிரமபுரத்தில் வாழ்ந்த காலத்தில் ததுறு ஓயா பள்ளத்தாக்கு நீரைப் பயன்படுத்தி மூன்று கால்வாய்களை ஆரம்பித்தான். ததுறு ஓயாவை மூன்று இடங்களிலே மறித்து அணைகள் கட்டிக் கால்வாய்கள் வழியே, தாழ்ந்த பிரதேசச் சமவெளிப் பயிர்ச் செய்கைக்கு இவன் நீர் வழங்கினான். மேலும், பண்டுவஸ் நகருக்கு அண்மையிலுள்ள பண்டா வாவியையும் இம்மன்னன் பெருப்பித்தான் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. இன்னும், பஸ்ஸோதுன் ரட்டையின், அதாவது இன்றைய களுத்துறை மாவட்டத்தின் சதுப்பு நிலத்தை நிரப்பிப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தினான் எனவும் கூறப்படுகின்றது.

கி.பி. 1153 ஆம் ஆண்டிலிருந்து பராக்கிரமபாகு பொலன்னறுவையை ஆட்சி செய்த காலத்தில் இவன் இலங்கையின் நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்கு அளப்பரிய சேவை செய்தான். இம்மன்னன் நீர்ப்பாசனத்துறைக்கு ஆற்றிய சேவை பற்றிச் சூளவமிசத்திலே சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. பராக்கிரம சமுத்திரம் இம்மன்னனால் அமைக்கப்பட்டமிகச் சிறந்த குளமாகும். இது தோபாவாவியையும் தும்புலு வாவியையும் தொடுத்து அமைக்கப்பட்டதாகும். மகாவலி கங்கையின் ஒரு கிளையான அம்பன் கங்கைக்குக் குறுக்கே அங்கமண்டில்லையிற் கட்டப்பட்ட ஓர் அணை மூலம் திசை திருப்பப்பட்ட நீர், ஆகாய கங்கை அல்லது அங்கமண்டில்ல கால்வாய் என்று அழைக்கப்பட்ட கால்வாய் மூலம் பராக்கிரம சமுத்திரத்துக்கு வழங்கப்பட்டது.

அனுராதபுர, பொலன்னறுவைக் காலப் பகுதிகளிலே உலர்வலயத்திற் படிப்படியாக அமைக்கப்பட்டு வந்த சிறிய பெரிய குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் ஆகியவற்றைக் கொண்டமைந்த பாரிய நீர்ப்பாசன முறை பராக்கிரமபாகு மன்னனுடைய ஆட்சிக் காலத்திலே உச்சக் கட்டத்தை அடைந்தது. வானிலிருந் விழும் ஒரு துளி நீரைத் தன்னும் மனிதனுக்குப் பயன்படாது சமுத்திரத்தைச் சென்றடையவிடக் கூடாதென இம்மன்னன் கூறியிருந்தான் என்று சொல்லப்படுகின்றது.

பராக்கிரமபாகு மன்னனுக்குப் பின்னர் அரசனான நிஸ்ஸங்கமல்ல மன்னனும் நிஸ்ஸங்க சமுத்திரம் என்ற பெயரில் ஒரு குளத்தைக் கட்டுவித்தான் என்று கூறப்படுகின்றது. அதன் பின்னர் 15 ஆண்டுகளாக அரசுரிமை பற்றித் தலைநகரில் தொடர்ந்து குழப்பங்கள் ஏற்பட்டமையினால், நீர்ப்பாசன அமைப்புகளை மன்னர்களாற் பாதுகாக்க முடியவில்லை. கி.பி. 1215 இல் இடம் பெற்ற மாகனின் படையெடுப்பின் பின்னர் ராச ரட்டை மக்கள் தென் மேற்கு மலைப் பகுதிக்கும் றுகுணு ரட்டைக்கும் இடம் பெயர்ந்து சென்றார்கள். அதனால், மேலே கூறப்பட்ட விரிவான நீர்ப்பாசன அமைப்பினைக் கொண்டுநடத்துவதற்கு வேண்டிய தொழிலாளர் அணியேனும் ஏற்றவாறு ஆணையிடக்கூடிய ஆற்றலுள்ள ஆட்சியாளரேனும் இருக்கவில்லையென்ற காரணத்தினால் அனுராதபுர, பொலன்னறுவைக் காலப்பகுதிகளிலே ராசரட்டைச் சமவெளியிற் படிப்படியாக வளர்ந்து வந்த விரிவான நீர்ப்பாசன அமைப்பு அடுத்த பத்து இருபது ஆண்டுகளிலே முற்று முழுதாகச் சிதைந்து அழிவுற்றதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இலங்கைப் படமொன்றிற் பின்வருவனவற்றை அடையாளமிட்டுப் பெயரிடுக.

(அ) அனுராதபுர, பொலன்னறுவைக் காலப்பகுதிகளிலே நீர்ப்பாசன அமைப்புடன் சம்பந்தப்பட்ட ஆறுகள்.

(ஆ) நீங்கள் அடையாளமிட்டுள்ள ஆறுகள் மூலம் நீர் வழங்கப்பட்ட ஐந்து குளங்கள்

2. (அ) வசபன் (ஆ) மகாசேனன் (இ) தாதுசேனன் (ஈ) முதலாம் அக்போ (உ) முதலாம் பராக்கிரமபாகு ஆகிய மன்னருள் நீர்ப்பாசனத்துறைக்கு மிக முக்கியமான சேவை ஆற்றியவர்களென நீர் கருதும் மூன்று மன்னர்களைத் தெரிவு செய்து அவர்கள் ஆற்றிய சேவைகள் பற்றி விபரிக்க.

3. சிறு குறிப்புகள் எழுதுக.

(அ) ஜய கங்கை (ஆ) அலகர கால்வாய் (இ) அங்கமண்டில்ல (ஈ) ததுறு ஓயா (உ) மினிப்பே அணைக்கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 4

# நீர்வள நாகரிகத்தின் எழுச்சி

**பௌத்த மதம் மூலம் நாம்பெற்றுள்ள நன்மைகள்**

வட இந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் வந்த மக்கள் குழுவினர் குடியேற்றங்களை அமைத்து வாழ்ந்து வந்தமை பற்றியும் அக்குடியேற்றங்களை அண்டி நீர்வள நாகரிகம் தோன்றி வளர்ந்து வந்தமை பற்றியும் மேலே படித்துள்ளோம். விவசாயத்தின் வளர்ச்சி மூலம் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. மேலும், விவசாய வேலைகள் குறைவாக இருந்த காலங்களிலே மக்களுக்குப் போதிய ஓய்வு கிடைத்தது. இவை, சிறந்த நாகரிகமொன்று தோன்றி வளர்ச்சி பெறுவதற்கு உகந்த காரணங்களாக அமைந்தன. இங்ஙனம், பௌத்த மதத்தின் வருகையுடன் இங்கு கொண்டுவரப்பட்ட மௌரிய கலாசார அமிசங்களான கட்டடக் கலை, சிற்பக்கலை, எழுத்துக்கலை, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில், அனுராதபுரத்தை மையமாகக் கொண்டு சிறந்த நாகரிகமொன்று உருவாகி வளர்ந்தது.

அனுராதபுரத்தின் முதலாவது மன்னன் பண்டுகாபயன் என வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன. இவன் அனுராதபுர நகர அமைப்பைத் திட்டமிட்டுத் தேவாலயங்கள், சுடுகாடுகள், நிருவாக நிலையங்கள் முதலியவற்றை அவை ஒவ்வொன்றுக்கும் ஏற்ற இடங்களிலே அமைப்பித்தான். இவனுடைய ஆட்சிக் காலம் பற்றிய வரலாற்றுக் கதைகள் வாயிலாகப் பௌத்த மதம் இங்கே கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இங்கு காணப்பட்ட வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் ஆகியன பற்றி நாம் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இந்த வழிபாட்டு முறைகளுள் விருட்ச வணக்கம், சைனமதம், பசாசு வணக்கம், இறந்தோரை வணங்கும் முறை ஆகியன அடங்கும்

மூன்றாவது பௌத்த பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட தேரவாத பௌத்த மதமே தேவாநம்பிய திஸ்ஸ மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் மகிந்த தேரரால் இங்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. மௌரியப் பேரரசன் அசோகனின் (கி.மு. 273-232) ஆதரவில் நடத்தப்பட்ட அப்பேரவை முடிவுற்ற பின்னர் அண்டை நாடுகளிற் பௌத்த மதத்தைப் பரப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி இலங்கையிற் பௌத்த மதத்தைப் பரப்புப் பணிஅசோகனுடைய மகனான மகிந்த தேரரின் தலைமையிலான குழுவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைக்கப்பட்டது. கி.பி. 247ஆம் ஆண்டு பொசொன் (ஆனி) மாதப் பௌர்ணமியன்றே மகிந்த தேரர் இலங்கைக்கு வந்தார். இந்த நாட்டிற் பௌத்த மதம் நிலைத்திருப்பதற்கு வேண்டிய குரு பீடத்தினை அமைப்பதே இந்தத் தூதுக் குழுவின் முக்கியமான கடமையாக இருந்தது. தூதுக் குழுவினர் வந்த தினமே, அவர்களுடன் இங்கு வந்த பண்டுக என்ற உபாசகனைத் துறவியாக மாற்றிச் சாதாரண மக்களும் பௌத்த துறவு வாழ்விற் சேர்ந்து கொள்ளக் கூடிய முறை இந்நாட்டு மக்களுக்கு விளக்கப்பட்டது. முதலாவதாகப் போதிக்கப்பட்ட "சுல்லகத்தி பதோபமசூத்திரம்" என்றதன் மூலம் ஒரு சாதாரண மனிதன் துறவறம் பூண்டு படிப்படியாகப் பக்குவமடைந்து பூரண குரு என்ற நிலையை அடையும் முறை விளக்கப்பட்டது. அதற்கேற்ப முதலமைச்சன் அரிட்டன் முதலாக அறுபதுபேர் பௌத்த துறவிகளாயினர். மகிந்த தேரரும் குழுவினரும் இரண்டாம் நாள் மன்னனுடைய அழைப்பின் பேரில் தலைநகரை அடைந்தனர். அங்கு கூடியிருந்த பல்வேறு மக்கள் முழுவினர் தேரருடைய போதனையைக் கேட்டுப் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டனர். பட்டத்து இராணியான அனுலாதேவி துறவியாகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு விடுத்த வேண்டுகோளின்படி அவளைத் துறவியாக மாற்றஞ் செய்வதற்குத் தமது சகோதரி பிக்குணி சங்கமித்தையை இங்கு வரவழைப்பதற்கு மகிந்ததேரர் ஒழுங்குகள் செய்தார். சங்கமித்தை, புத்தர் சார்ந்திருந்த போதி விருட்சத்தின் வலது பக்கக் கிளை ஒன்றினையும்



உரு 4.1— றுவணவலி மஹாசாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதி விருட்சத்தைப் பேணிப் பாது காப்பதற்கு வேண்டிய குழுவினரை யும் தம்முடன் கூட்டிக்கொண்டு தற்போதைய யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடக்குக் கரையிலிருந்த ஜம்புகோளப் பட்டினத்தில் வந்திறங்கினார். இந்தப் போதி விருட்சம் மகா மெவனப் பூங்காவில் நாட்டப் பட்டது. இந்தப் போதி விருட்சமானது பௌத்த மக்கள் அனைவரதும் வணக்கத்துக்குரிய ஒரு புனிதப் பொருளாக இருந்து வருகின்றது.

மகிந்த தேரரிடத்திலே நம்பிக்கை கொண்ட மன்னன் மகாமெவன பூங்காவைத் தேரருக்கு அர்ப்பணித்தான். அதனையடுத்து அங்கே மகா விகாரையை எவ்வாறு அமைக்க வேண்டுமென்பதைத் தேரர் மன்னனுக்கு விளக்கினர். அதன்படி பிக்குகளுக்கு வேண்டிய சங்கசாலை, போகொயமனை, ஸ்நானத்தடாகம், அன்ன சாலை முதலியவற்றை மன்னன் அங்கே அமைப்பித்தான். இந்த மகா விகாரையே பின்னொரு காலத்தில் தேரவாத பௌத்த சமயத்தின் மையமாக விளங்கியது.

பௌத்த மதம் இங்கே விரைவிற் பரவுவதற்கு அனுகூலமாக இருந்த காரணங்கள் பல. அரசர்கள்,அமைச்சர்கள் ஆகியோரும் ஏனைய மேல் மட்டத்து மக்களும் முதலிற் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டமை முக்கியமான ஒரு காரணமெனலாம். பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் இங்கு காணப்பட்ட வழிபாட்டுமுறைகளும் நம்பிக்கைகளும் பௌத்த மதமளவுக்கு வலுவுள்ளனவாகவேனும் கட்டுக்கோப்புடையனவாகவேனும் இருக்கவில்லை என்பது மற்றுமொரு முக்கிய காரணமாகும். பௌத்தமதம் தனியாகவன்றி அக்கால மௌரிய கலாசாரத்தின் சிறந்த அமிசங்களுடன் இங்கு கொண்டு வரப்பட்டது என்பதனை மற்றுமொரு காரணமாகக் கூறலாம். ஏலவே கூறப்பட்டுள்ளவாறு, பௌத்த மதத்துடன் மௌரிய கட்டடக்கலை. சிற்பக்கலை நெடுங்கணக்கு, இலக்கியம் ஆகியனவும் கொண்டுவரப்பட்டன. இவை காரணமாகப் பௌத்த மதம் மக்களுடைய வாழ்க்கையில் விரைவாக ஊடுருவிக் கொண்டது. மேலும் மக்கள் வழிபட்டுத் தொழுதற் பொருட்டுச் சைத்தியங்கள், விகாரைகள் முதலிய வழிபாட்டுத்தலங்கள் இக்காலத்திலே தோன்றின. இவற்றுள் தேவா நம்பிய திஸ்ஸ மன்னனால் அமைப்பிக்கப்பட்ட இசுறுமுனிய, வெஸ்ஸகிரிய, மிகிந்தலை, தூபாராமய ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். மகாமெவன பூங்காவிற் போதியை நாட்டுவதற்கு எடுக்கப்பட்ட விழாவிற் காசரகாம (கதிர்காமம்) சந்தனகாம முதலிய தூரப் பிரதேசங்களைச் சேர்ந்த தலைவர்களும் கலந்துகொண்டனர். இவ்வாறு கலந்து கொண்ட தலைவர்கள்மூலமும் பௌத்த தர்மம் பரவியது. இங்ஙனமாகவே குறுகிய காலத்தினுள் பௌத்த மதம் நாடு முழுவதும் பரவியது.

பௌத்த மதம் மக்களின் வாழ்க்கையில் ஊடுருவிக்கொண்டதன் விளைவாக மக்கள் மத்தியில் ஒற்றுமையும் அமைதியும் காணப்பட்டன. இவற்றுடன் விவசாய வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமூலம் கிடைத்த ஓய்வுக் கால மும் அதிகரித்தது. இந்த அமைதி, ஓய்வு ஆகியன காரணமாக இலக்கியம், கலைத்துறை ஆகியவற்றிலே ஈடுபடுவதற்குரிய வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தது. இங்ஙனமாகவே பௌத்த மதத்தினதும் விவசாயத்தினதும் பின்னணியிலான கலாசாரம் இன்று அனுராதபுர காலத்திலே தோன்றியது.

### மொழியும் இலக்கியமும்

மகிந்த தேரர் வருவதற்கு முன்னர் போலவே முதல் ஆரியக் குழுவினராகக் கருதப்படும் விஜயனும் தோழரும் வருவதற்கு முன்னரும் இங்கே சுதேசிகளான மக்கள் வாழ்ந்து வந்தார்களென்பதையும் அவர்களுக்குச் சொந்தமான மொழி, கலாசாரம் ஆகியன இருந்து வந்தன என்பதையும் நாம் மறுக்கமுடியாது. அந்த மொழியும் கலாசாரமும் பௌத்த மதத்துடன் வந்த இந்திய மொழியினாலும் கலாசாரத்தினாலும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனவெனக் கூறலாம். அவ்வாறு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும் அந்த ஆதிக்குடிகளின் மொழியைச் சேர்ந்தசொற்களெனக் கருதப்படக் கூடிய சில சொற்கள் சிங்கள மொழியில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிங்கள மொழியிலே இன்று வாய், தலை ஆகியவற்றைக் குறிப்பதற்கு வழங்கும் சொற்கள் இந்திய ஆரிய மொழிகளிலேனும் திராவிட மொழிகளிலேனும் காணப்படாமையினால் அச்சொற்கள் இந்த நாட்டுச் சுதேச மக்களுடைய மொழிக்குரியனவாகலாம் என்பது மொழி விற்பன்னருடைய ஊகக்கம். மேலும், பண்டுகாபய மன்னன் காலத்திலிருந்தனவாக நாம் மேலே ஆராய்ந்த வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் ஆகியனவுமே இச்சுதேச மக்களுடைய கலை கலாசாரத்தைச் சேர்ந்தனவெனக் கருத இடமுண்டு. ஆயினும், எமக்கு இப்போது கிடைத்துள்ள ஆதாரங்களின்படி, பௌத்த மதத்தின் வருகைக்குப் பின்னர் இந்நாட்டு மக்களுக்கு அறிமுகஞ்செய்து வைக்கப்பட்ட சொற்கோவை, மொழி, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அனுராதபுர காலத்துச் நெடுங்கணக்கும் இலக்கியமும் உருவாயின என்று நாம் நம்பவேண்டி இருக்கின்றது.

திரிபிடகத்திலுள்ள புத்த பகவானின் வாக்கியங்களும், புத்தருடைய காலத்திலிருந்து அசோக மன்னன் ஆட்சியில் மூன்றாவது தர்மப்பேரவை நடாத்தப்பட்டது வரையான கலாப் பகுதிக்குரிய, இந்தியாவின் மகதநாட்டுப் புராதனக் கதைகளும் இந்நாட்டில் அப்போது காணப்பட்ட மூல மொழியிலேயே அரிட்டன் உட்பட்ட முதலாவது பௌத்த துறவிகளுக்கு மகிந்த தேரரால் கற்பிக்கப்பட்டன. இந்த மூல மொழி ஹெல என்று குறிப்பிடப்படுகின்றது. அரிட்டன் முதலான துறவிகள் பரம்பரையினரால் ஹெல மொழியில் பேணப்பட்டு வந்த இந்தத் திரிபிடகமும் அதனைச் சேர்ந்த இலக்கியமும் கர்ண பரம்பரை வழியாகப் பேணப்பட்டு வந்தன. ஹெல மொழியில் இருந்த இலக்கியம் கி.பி. முதலாம் நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலகம்பாவின் ஆட்சிக்காலத்திலே மாத்தளையிலுள்ள அளுகுகையில் (தற்போது அளுவிகாரை எனப்படுவது)முதன்முறையாக ஓலையில் எழுதப்பட்டது.அக்காலத்திலிருந்து நாட்டின் பௌத்த சமய வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட கதைகளும் சேர்க்கப்பட்டு வளர்ந்த இந்த இலக்கியம் ஹெல விளக்கவுரை எனப்பட்டது. ஐந்தாம் நூற்றாண்டில் புத்த கோச முதலான உரையாசிரியர்களால் இந்த ஹெலவிளக்கவுரை பாளிமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. அவ்வாறே திரிபிடகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் விரிவான விளக்கவுரை எழுதப்பட்டது. திரிபிடகமுட்பட்ட இந்தப் பாயிர இலக்கியமே அனுராதபுர காலத்து இலக்கியத்துக்கு அத்திவாரமாக அமைந்தது. மகிந்த தேரர் அறிமுகஞ்செய்து வைத்த பிராக்மி நெடுங்கணக்கு ஒழுங்காகவிருத்தியடைந்து அனுராதபுர காலத்தின் பிற்பகுதியளவில், தெளிவாகக் கருத்துக்களை எடுத்துக்கூறக் கூடிய பரிபூரண நெடுங்கணக்காக விருத்தியடைந்தது. தம்பியா அட்டுவா கட்டபதய, சிகவலந்தவினிச, சியபஸ்லகர ஆகியன அனுராதபுர காலத்தில் தோன்றிய சிங்கள் இலக்கிய நூல்களாகும். இவற்றுடன் சிகிரியாவின் கண்ணாடிச் சுவர்களிலே வரையப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான கவிதைகளும் அனுராதபுர காலத்தின் பிற்பகுதிக்குரியனவாகும். இக்கவிதைகளுள் அநேகமானவை சாதாரண மக்களால் எழுதப்பட்டன. எனவே அக்கால மக்கள் எழுதவாசிக்கத் தெரிந்திருந்தனரென்பது தெளிவு. ஏழாம் நூற்றாண்டில் அக்போ மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் 12 பிரசித்திபெற்ற புலவர்கள் இருந்தார்களெனக் கூறப்படுகின்றது. அவர்களுள் தஹம், பாபிறி, அனுருத்த எனப்பட்டோர் அடங்குவர்.

இக்காலத்திலே வடமொழி இலக்கியமும் பிரபலமடைந்திருந்தது. இராமன்-சீதை கதையை வைத்துக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் குமாரதாச மன்னன் எழுதிய 'யானகீஹறணய' என்பது ஒரு சிறந்த வடமொழிக்காவியமாகும். நான்காம் சேன மன்னனால் எழுதப்பட்ட 'சியபஸ்லகர' என்ற நூல் தண்டின் என்ற வடமொழி விமரிசகர் வரைந்த 'காவ்ய தர்ஷய' என்பதைத் தழுவி எழுதப்பட்டதாகும். சிங்கள, பாளி, வடமொழி இலக்கிய வளர்ச்சிக்கு அனுராதபுர காலத்து மன்னர்கள் அளப்பரிய சேவைகள் ஆற்றி வந்தார்கள்.

**கட்டடக்கலை**


பௌத்த மதம் இங்கு கொண்டு வரப்படுவதற்கு முன்னர் இங்கே இருந்த கட்டடங்களின் இடிபாடுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. பண்டுகாபய மன்னன் கட்டடங்கள் அமைத்து நகரை அலங்கரித்தான் என்று மகாவமிசத்திற் கூறப்பட்டுள்ளதாயினும், கி.பி. 3 ஆம் நூற்றாண்டின் பின்னர் அமைக்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகள் மாத்திரமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அநேகமான கட்டடங்கள் சமய தேவைகளுக்காக அல்லது பிக்குகளின் பிரயோகத்துக்காக அமைக்கப்பட்டனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வள நாகரிகத்தைத் தழுவி வளர்ச்சிபெற்ற கட்டடக்கலையானது பௌத்த மதத்துடன் இணைந்ததாகும். ஆரம்பத்தில் பிக்குகள் குகைகளிலும் ஆரணியங்களிலும் வசித்து வந்தனராயினும் காலப்போக்கில் அரசர்களுடைய ஆதரவைக் கொண்டு அமைக்கப்பட்டு ஆர்ப்பணிக்கப்பட்ட விகாரைகளில் வசிப்பதற்கு ஆரம்பித்தனர். இரண்டாம் உபதிஸ்ஸ மன்னன் பிக்குகளுக்கென வசிப்பிடம், அன்னசாலை, ஸ்நானத்தடாகம் ஆகியவற்றை மகாவிகாரையிற் கட்டுவித்தான் என்று கூறப்படுகின்றது. அதன் பின்னர், ஆயிரக்கணக்கான பிக்குகள் வசிக்கக்கூடியதாக லோவாமஹாபாய என்ற ஒன்பது மாடி மாளிகையைத் துட்டுகைமுனு கட்டுவித்தான்.

கட்டடக்கலையானது இக்காலத்திலே இரு அமிசங்களிலே வளர்ச்சி பெற்றது. வழிபாட்டுக்குரிய தாகபைகள், போதிமனைகள், சிலைக் கூடங்கள் ஆகியவற்றை அமைக்கும் முறை ஒன்று. குருமாருக்குரிய விகாரை இல்லங்களையும் சமய தேவைகளைப் பூர்த்தி செய்தற்குரிய கட்டடங்களையும் அமைக்கும் முறை மற்றது. போயமனை, சிலைக் கூடம், வைத்தியசாலை, ஸ்நானத் தாடாகம், மலசலகூடம் ஆகியன




உரு 4.2 துளைவாயில் (முகப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது வகையிலடங்கும் சில கட்டடங்களாகும். தாகபையைத் தழுவி, நான்கு திசைகளிலும் முகப்பு வைத்துக் கட்டப்பட்டவாயில் மண்டபங்களைப் போன்றதாக நுளை வாயில்களை அமைக்கும் முறை மற்றுமொரு விசேட அமிசமாகும். மகா தூபய அல்லது றுவன்வலிசாய, மிரிசவட்டி தாகப, அபயகிரி தூபி, ஜேதவன தூபி ஆகிய பெரிய தூபிகள் அமைக்கப்பட்டன. மகா தூபியும் மிரிசவட்டி தாகபவும் துட்டுகைமுனுவினாற் கட்டுவிக்கப்பட்டன. வலகம்பாவினால் அபயகிரி தாகபவும் மகாசேனனால் ஜேதவன தாகபவும் கட்டுவிக்கப்பட்டன. இவற்றுடன் தலைநகருக்கு வெளியே இருந்த பிரதேசங்களிலும் பெரிய தாகபக்கள் இக்காலப் பகுதியிற் கட்டப்பட்டன. களனி, திஸ்ஸ மறாராம, தீக்கவாபி, சேருவிலை, சோமவதி, மஹியங்கனை ஆகியன தலைநகருக்குத் தூரத்தில் அமைக்கப்பட்ட பெரிய தாகபக்களுக்கு உதாரணங்களாகும். இன்னும் சிறிய தூபிகளைச் சுற்றி வட்டத் தாது மனைகளும் அமைக்கப்பட்டன. சைத்தியங்களைச் சுற்றி, ஆரம்ப காலத்திலே மரத்தூண்களையும் பின்னர் கற்றூண்களையும் மூன்று வரிசையில் நாட்டி அவற்றுக்கு மேல் பக்க மரங்களைப் பொருத்தி முக்கோண வடிவக் கூரைகள் அமைக்கப்பட்டிருந்தன என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. தாகபயின் சிகரத்துக்கு மேலே கூரையின் கூம்புருவான உச்சி இருந்தது. இது 'களிமண்டல' என்று சிங்களத்திற் குறிப்பிடப்படும். கூம்புருவான இந்த உச்சியிலிருந்து தாகபயைச் சுற்றிக் கைமரங்களைப் பொருத்தி அவற்றுக்குமேலே கூரை



உரு 4.3
களனி விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டது. அனுராதபுரத்தி லுள்ள தூபாராம, லங்காராம ஆகியவற்றிலும் மதிரிகிரிய, பொலன்னறுவை ஆகிய இடங்களிலும் இது போன்ற வட்டத்தாது மனைகளின் சிதைவுகள் காணப்படுகின்றன.

அனுராதபுர காலத்துக்குப் பிற்பட்ட காலங்களுக்குரிய பல அரண்மனைகளின் சிதைவுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அனுராதபுரத்து உள் நகரிலுள்ள மகாவிஜயபாகு மன்னனுடைய மாளிகையும் இன்றைய பண்டுவஸ் நுவர (பழைய பராக்கிரமபுரம்) எனும் இடத்திற் காணப்படும் முதலாவது பராக்கிரமபாகு மன்னனுடைய மாளிகையும் பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்லன் ஆகியோரால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட அரண்மனைகளும் எமது புராதனக் கட்டடக்கலையின் சிறப்பினை எடுத்துக் காட்டும் கட்டடங்களாகும்.

### செதுக்கற் கலையும், சிற்பக் கலையும்

பிக்குணி சங்கமித்தையுடன் இங்கு வந்த கூட்டத்தினருள் செதுக்கற் கலைஞரும் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. அசோக மன்னனுடைய ஞாபகத்தூபிகளின் நான்கு திசைகளையும் குறிப்பனவாகச் சொல்லப் படும் சிங்கம், யானை, குதிரை, விருஷபம் அகிய மிருகங்களின் உருவங்களை இலங்கையின் செதுக்கற்கலையின் ஆரம்பத்திலிருந்தே காணக்கூடியதாகஇருக்கின்றது. ஆயினும்சாஞ்சி, அமராவதி ஆகிய இடங்களிற் காணப்படும் செதுக்கல் வேலைப்பாடுகளிலுள்ள தாவரங்கள், பூங்கொடிகள், மிருகங்கள் ஆகியவற்றின் உருவங்கள் இலங்கையின் சிற்ப, செதுக் கற்படைப்புகளுக்கு வழிகாட்டி ஊக்கவித்தனவெனலாம். மிகிந்தலை கண்டகாகபயின் நுளை வாசலில் இப்படியான சிங்க, யானை, குதிரை, விருஷப உருவங்களும் கற்பனைப் பூங்கொடி, கற்பனை விருட்சம், பூரண கும்பம் ஆகிய படைப்புக்களும் காண படுகின்றன. ஆயினும் காலப்போக்கில் இந்தச் சிற்ப, செதுக்கற் கலை இலங்கைக்குரிய தனிச் சிறப்புடன் வளர்ந்து வரலாயிற்று. சந்திர வட்டக்கல், இப்படியான தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் ஆக்கமாகும். சந்திர வட்டக்கல் எனப்படுவது, செதுக்கல் வேலைப்பாடுடைய பிறைவடிவிலான ஒரு கற்பாளமாகும். இதிலே சற்று மலர்ந்த தாமரை மலரின் பாதியைச் சுற்றித்தோரண வேலைப்பாடும் அன்னங்களின் ஒரு வரிசையும், சிங்கம், யான, குதிரை, விருஷபம் ஆகியவற்றின் ஒரு வரிசையும் ஓரத்தில் தீச்சுவாலைகளால் அல்லது இதழ்களாலான சித்திர வேலைப்பாடும் இருக்கும். இங்ஙனம் தேவாலயங்களுக்குள் செல்லும் படிவரிசைகளின் அடியிலுள்ள அழகிய வட்டக்கல், காவற்காரன் உருவம், கொறவக்கல் ஆகிய சிற்பச் செதுக்க ஆக்கங்கள் அனுராதபுர காலத்தில் விரிவான வளர்ச்சியடைந்தன. இசுறுமுனிக் காதலர் சோடி எனக் கூறப்படும் பிரபல கலைச்சிறப்பு வாய்ந்த சிறிய வேலையும் இப்படியான தனிச் சிறப்புப் பொருந்திய இலங்கைக் கலை நுட்பத்தினை எடுத்துக் காட்டும் அழகிய ஒரு படைப்பாகும். மேலும், இசுறுமுனிக் கல்லிற் செதுக்கப்பட்டுள்ள குதிரைத் தலையும் மனித உருவுமே சிறந்த ஒரு கலைப்படைப்பாகக் கருதப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 4.4 சமாதிச்சிலை


கின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டளவிலிருந்து கருங்கல்லிற் புத்தர் சிலைகளைச் செதுக்கும் வழக்கம் இலங்கை முழுவதும் பரவியது. இங்ஙனம் அவுக்கணை, றஸ்சேறுவை, புதுறுவகலை ஆகியன போன்ற மிகப் பெரிய நிற்கும் சிலைகளும் அனுராதபுரச் சமாதிச்சிலையும் கொழும்பிலைச் சிலாவ, தந்திரி முல்லை முதலிய அமர்ந்த சிலைகளும் பொலன்னறுவைக் கல் விகாரையிற்காணப்படுவது போன்ற உறங்கும் சிலையும் புத்த பிரானுடைய அன்பு, அறிவாற்றல் போன்ற பண்புகளைச் சித்திரிக்கும் வகையில் செதுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 4.5 சந்திரவட்டக்கல்



உரு 4.6 இசுறுமுனிக் காதலர்சோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 47 சீகிரிக் குன்று

## ஓவியம்

ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கையில் ஓவியக் கலை வளர்ந்து வந்ததாகத் தோன்றுகின்றது. அனுராதபுர காலத்தில் நுளை வாயில்களிற் பல இடங்களிலே ஓவியங்கள் வரையப்பட்டிருந்தமைக்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. சித்துல்பலவிலும் கறம்பகல குகைகளிலும் இப்படியான ஓவியங்களின் எச்சங்கள் காணப்படுகின்றன. ஆயினும் பூரண ஓவியங்களைச் சீகிரிய குகைகளிலேயே காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த ஓவியங்கள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்குரியன என்பது பொதுவான கருத்து. சீகிரிமலைப் பிரதேசத்துக் குகைகளில் வரயப்பட்டுள்ள அழகிய பெண் உருவங்கள் தாமரை, நீலோற் பலம், அல்லி ஆகிய மலர்களைக் கைகளில் வைத்திருக்கின்றன. இவை உலக ஓவியங்களுள் முதன்மையான இடத்தில் வைத்து மதிக்கப்படுகின்றன. தங்க நிறமும் நீல நிறமும் பொருந்திய இப்பெண் உருவங்கள் பெரும்பாலும் சோடிகளாக வரையப்பட்டுள்ளன. இவை சமகால இந்தியாவின் அஜந்தா குகைகளிற் காணப்படும் ஓவியங்களைப் பெரிதும் ஒத்தனவாகும். ஆயினும் இவை இலங்கை ஓவியருக்கு இயல்பான ஒரு சிறந்த கலைப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்ற படைப்புகள் என்பது அறிஞர்களுடைய அபிப்பிராயம். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4.8 சீகிரிய ஓவியம்

ஓவியங்களுக்குத் தீட்டப்பட்டுள்ள வர்ணங்களுள் மஞ்சள், கபிலம், சிவப்பு, நீலம் ஆகியன துலாம்பரமாகத் தெரிகின்றன. இந்த உருவங்கள் யாரைக் குறுக்கின்றன என்பது பற்றி அறிஞர்கள் மத்தியிற் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. இந்த ஓவியக் கலைப்பாரம்பரியம் பொலன்னறுவை காலத்திலும் வளர்ச்சியடைந்துள்ளது. திம்புலாகலை குகைகளிற் காணப்படும் ஓவியங்ளும் பொலன்னறுவை உத்தரராராமயீற் காணப்படும் ஓவியங்களும் பொலன்னறுவைக் காலத்து ஓவியங்களுக்குரிய எடுத்துக் காட்டுகளாகும்.

**தார்மீக வாழ்கை**

பௌத்த மதம் காரணமாக ஆரம்ப காலத்தில் இலங்கைச் சமுயாயத்திலே பிக்கு, பிங்குணி, உபாசகன் (பக்தியுடையவன்), உபாசிக்கா (பக்தியுடையவள்) என்ற நான்கு பிரிவைச் சேர்ந்த மக்கள் இருந்தனர். சமுதாயத்துப் பல்வேறு மட்டத்து மக்கள் அனைவரும் இந்த நான்கு பிரிவுகளையுமே பொதுவாகச் சார்ந்திருந்தனர். எனவே இந்தியாவிற் போன்று தீவிரமான சாதி முறை இலங்கையில் காணப்படவில்லை எனலாம். மக்களுக்குக் கல்வி கற்பித்தல் பௌத்த தர்மத்தைப் போதித்தல், ஆகிய இரண்டு கடமைகளும் பிக்குகளைச் சார்ந்து இருந்தன. இது காரணமாகப் பௌத்த மதம் கூறும் அன்பு, பற்றின்மை, போதுமென்ற மனப்பான்மை, பரிவு முதலிய சீரிய மனிதப் பண்புகள் மக்களிடத்திற் காணப்பட்டன. விவசாய வேலைகள் இல்லாத ஓய்வு வேளைகளிலே பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசார விடயங்களில் மக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரு 4.9 சிகிரிய ஓவியம்

கள் ஈடுபட்டனர். இதனால் நாட்டிலே அமைதி நிலவியது. அத்துடன் தன்னிறைவுடைய ஒரு சமுதாயமும் பொருளாதார முறையும் உருவாயின. நீர்வள நாகரிகத்தின் மூலக் கூறுகளுக்கேற்ப இவ்வாறு வளர்ந்த கலாசாரத்தினை இன்று அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற நகராங்களிற் காணப்படும் தொல்பொருளாராச்சிப் பொருள்களைக் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

## நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி

இவ்வாறு கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை அனுராதபுர, பொலன்னறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக் காலங்களிலே, முக்கியமாக இலங்கையின் உலர்வலயத்தில், வளர்ந்திருந்த நீர்வள நாகரிகம் பொலன்னறுவைக் காலத்தின் இறுதியில் அதாவது கி.பி. 1215 இல் ஏற்பட்ட மாகனின் படையெடுப்பினால் முற்று முழுதாகச் சிதைவுற்று அழிந்தது. பொலன்னறுவைக் காலத்தின் பிற்பகுதிக்கு உரிய 20 ஆண்டுகளிலே சிங்காசன உரிமை பற்றியெழுந்த பிணக்குகள் காரணமாக நாட்டின் மத்திய நிருவாகத்திற் குழப்பம் ஏற்பட்டது. இதனால் விரிவான விவசாய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு நடத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை மத்திய நிருவாகத்துக்கு ஏற்பட்டது. எனவே போர்க்கலவரங்கள், வெள்ளப்பெருக்குகள் போன்ற இன்னற் காலங்களிலே குளம், குட்டைகள், கால்வாய்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கால நேரத்தில் திருத்தஞ் செய்ய முடியாதிருந்தது. இந்த வேளையில் தென் இந்திய ஆக்கிரமிப்புப் படையுடன் வந்த மாகன் பொலன்னறுவையைப் பிடித்துக் கொண்டதையடுத்து ராசரட்டை மக்கள் பாதுகாப்புத் தேடித் தென்மேற்குத் திசை நோக்கியும் மலயரட்டை, றுகுணு ரட்டை ஆகியவற்றை நோக்கியும் இடம் பெயர்ந்தனர். இதனால் அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களிலிருந்த விகாரைகள், பிரிவெனாக்கள் போன்ற காலசார நிலையங்கள் பாழடைந்தன. குளங்களும் நீர்ப்பாசன அமைப்புகளும் புனரமைக்கப்படாமையினால் அவையும் அவற்றின் மூலம் பேணப்பட்டுவந்த வயல் நிலங்களும் அழிந்து அடர்ந்த காடுகள் தோன்றின. மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவின. சில மக்கள் வடக்கைச் சேர்ந்த யாழ்ப்பாணக் குடா நாட்டை நோக்கிச் சென்றனர். இவர்கள் தென் இந்தியாவுடன் நெருங்கிய உறவுகள் கொண்டிருந்தனர். வேறு சிலர் தென் மேற்குச் சமவெளியை நோக்கிச் சென்று அங்கே தம்பதெனிய என்ற இராச்சியத்தை உருவாக்கினார்கள். இவ்வாறாகத் தம்பதெனிய இராச்சியம் ஆரம்பமாகிய கி.பி. 1230 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 1500 ஆண்டுகளாகச் செழிப்புமிக்க பகுதியாக விளங்கிய உலர் வலய நிலப் பிரதேசம் முற்றுமுழுதாக அடர்ந்த காடாக மாறியது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலே விவசாயக் குடியேற்றங்கள் அமைக்கப்படும் வரை இப்பிரதேசம் மக்கள் நடமாட்டமற்றதாகவே இருந்தது. எனவே, ராசரட்டை நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணங்களாகப் பொலன்னறுவைக் காலத்தின் பிற்பகுதியிற் சிங்காசனம் பற்றி ஏற்பட்ட குழப்பம் காரணமாக மத்திய நிருவாகத்தின் வலுக்குறைந்தமை, விரிவான நீர்ப்பாசன வேலைகளைக் கொண்டு நடத்துவதற்குரிய ஒழுங்குகள் அற்றுப்போனமை, பிறநாட்டார் படையெடுப்பு, மக்கள் தென்மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் குடிபெயர்ந்தமை, உலர் வலயம் முற்றிலும் காடாக மாறியமை, மலேரியா பரவியமை ஆகியவற்றைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி

1. பௌத்த மதம் காரணமாக இலங்கை மக்களிடத்திலுண்டா நற்பண்புகள் பற்றி விளக்குக.

2. புராதன இலங்கையின் கட்டடக்கலையிற் காணப்படும் சில விசேட அமிசங்களை உதாரணங்களுடன் விளக்குக.

3. இலங்கைப் படம் ஒன்று வரைந்து பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக:- மிகிந்தலை, அனுராதபுரம், சீகிரிய, பொலன்னறுவை, தந்திரிமலை, பராக்கிரம புரம், திம்புலாகலை, அவுக்கணை, சித்துல் பவ்வை, புதுறுவகலை.

4. நீர்வள நாகரிகம் வீழ்ச்சியடைந்தமைக்குரிய காரணங்கள் யாவை?

5. பின்வரும் விடயங்கள் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக:- சந்திர வட்டக்கல், தூபி, புத்தர் சிலை, வட்டடத்தாது மனை, நுளைவாயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வெளிநாட்டு உறவுகள்


**வெளிநாட்டு உறவுகளிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்.**

இலங்கையின் வெளிநாட்டு உறவுகளிலே அது அமைந்துள்ள நிலையம் விசேட செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அதாவது, மேனாடுகளுக்கும் கீழ்த்திசை நாடுகளுக்கும் இடையிலான கடல் வர்த்தக மார்க்கத்தில், இந்திய சமுத்திரத்தின் ஒரு கேந்திர நிலையத்தில் இலங்கை அமைந்துள்ளமை அதன் வெளிநாட்டு உறவுகளிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இலங்கையைச் சுற்றிப் பல இயற்கைத் துறைமுகங்களும் ஓடத்துறைகளுமுள. சீனா முதலிய கீழ்த்திசை நாடுகளிலிருந்து மலாக்கா தொடு கடலுக்கூடாக வர்த்தகப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல்கள் இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இலங்கையின் பல்வேறு ஓடத்துறைகளை அடைந்தன. மேலும், ஐரோப்பாவிலிருந்து மத்தியதரைப் பிரதேசத்தினூடாகத் தரைமார்க்கமாகக் கொண்டு செல்லப்பட்ட வர்த்தகப் பொருள்கள் செங்கடலூடாகவும் பாரசீகக்குடா ஊடாகவும் இந்தத் துறைமுகங்களுக்குக் கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டன. அப்பொருள்களை ஏற்றிய கப்பல்கள் இலங்கையின் ஊர்காவற்றுறை, மன்னார் போன்ற ஓடத்துறைகளுக்கும் வந்தன. இதனால் கிழக்குத்திசை நோக்கி வர்த்தகப் பொருள்களைக் கொண்டு சென்ற சீனர், மலாயர் முதலிய வியாபாரிகளும் இலங்கையின் ஓடத்துறைகளிலே பொருள்களை இறக்கினார்கள். எனவே, இலங்கையின் ஓடத்துறைகள் சர்வதேச வர்த்தகத்தின் மையங்களாக விளங்கியுள்ளன எனலாம்.

மேலும், இந்து சமுத்திரத்துக்கூடாக வீசுகின்ற தென்மேற்பருவக் காற்று, வடகீழ்ப் பருவக்காற்று ஆகியனவும் இவற்றுக்குரிய நீரோட்டங்களும் ஆரம்ப காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளன. எடுத்துக் காட்டாக, பருவக் காற்றுகள் காரணமாகவும் நீரோட்டம் காரணமாகவும் அராபியக் கரையிலிருந்து இந்தியாவுக்குப் பாய்க் கப்பல்களைச் செலுத்திச் செல்வது சுலபமெனக் கி.மு. முதலாம் நூற்றாண்டிலே கிரேக்க இனத்தவரான கிபொலொஸ் என்பவர் கண்டு பிடித்தார். இந்நீரோட்டம் அராபியக் கடலிலிருந்து ஆரம்பமாகி மேற்கு இந்திய கரையோரமாக வங்காள விரிகுடாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 5.1 இலங்கையின் அமைவு

னுள் விழுகின்றது. எமது நாடு இந்த நீரோட்டத்தின் பாதையில் அமைந்திருத்தல், எமது நாட்டின் வெளிநாட்டு உறவுகளிற் செல்வாக்குச் செலுத்துகின்ற மற்றுமொரு காரணியாகும். அத்துடன், இலங்கையின் வடக்கு ஓடத்துறைகளுக்கும் கங்கை ஆற்று முகத்திலுள்ள தாம்ற லிப்தி என்ற ஓடத்துறைக்குமிடையில் நடைபெற்ற கடற்போக்குவரத்துக்கு இந்த வடகீழ்ப்பருவக் காற்றே காரணமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துநதிப் பள்ளத்தாக்கு, யூபிரடீஸ்-ரைகிறிஸ், உரோம, கிரேக்க நாகரிகங்கள் போன்ற நாகரிகங்கள் நிலவிய நாடுகளுக்குச் சுலபமாகச் செல்லக்கூடிய பாதையில் எமது நாடு அமைந்துள்ளது என்பதும் எமது வெளிநாட்டு உறவுகளிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

எமது நாடு, இந்திய உபகண்டத்தின் தெற்கு எல்லையில் இந்தியாவுக்கு மிகவும் அண்மையில், ஆனால் வேறாக உள்ளது என்பது எமது வெளிநாட்டு உறவுகளிற் செல்வாக்குச் செலுத்திய மற்றுமொரு முக்கிய காரணியாகும். இந்தியாவுக்கு அண்மையில் அமைந்துள்ளமையினால் அந்த நாட்டிற் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட அரசியல், கலாசார எழுச்சிகள் இலங்கையில் உடனுக்குடன் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. ஆயினும், இலங்கை 32 கிலோ மீற்றர் வரை அகலமான ஒரு தொடுகடலினால் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதனால் அந்தச் செல்வாக்குகளை ஓரளவுக்குத் தவிர்த்துக் கொள்வதற்கு எமக்கு வாய்ப்புக்கிடைத்துள்ளது. இவ்வாறான அரசியல், கலாசார எழுச்சிகளின் எதிரொலிகள், எமது நாடு இந்தியாவிலிருந்து பிரிந்திருப்பது காரணமாகச் சுய உருவெடுத்து வளர்ந்துள்ளன. எடுத்துக்காட்டாக, வட இந்தியாவிலிருந்து வந்த தேரவாத பௌத்த மதக் கலாசாரம் இந்தியாவிலிருந்து விரைவில் அழிந்து போயுள்ளதாயினும் எமது நாட்டிலே அது ஒரு சுய உருவெடுத்து இன்று வரை வளர்ந்துள்ளமையைக் கூறலாம்.

மேலும், இலங்கையைச் சுற்றி இயற்கைத் துறைமுகங்கள் பல இருப்பது, அண்மையிலுள்ள இந்தியாவுடனும் ஏனைய நாடுகளுடனும் ஆதிகாலத்திலிருந்தே உறவுகள் உண்டானமைக்கு ஒரு காரணமானதெனக் கூறலாம். உதாரணமாக, மாந்தோட்டம் அல்லது இன்றைய மன்னார், கோகண்ண அல்லது இன்றைய திருக்கோணமலை, ஜம்புகோளபட்டினம் அல்லது இன்றைய காங்கேசன்துறை ஆகிய இடங்களிலிருந்த துறைமுகங்கள் அக்காலத்திலே முக்கியமான துறைமுகங்களாக விளங்கின. பண்டுவஸ் தேவ மன்னன் இலங்கை வந்து இறங்கியது மாந்தோட்டத் துறைமுகத்திலேயாகும். அவனுடைய இராணி பத்தகச்சானா திருக்கோணமலைத் துறைமுகத்தில் இறக்கினாள். தேவாநம்பிய திஸ்ஸ மன்னனுடைய மருமகனான அரிட்டனும் குழுவினரும் அசோக மன்னனுக்கு வெகுமதிகள் கோண்டு சென்ற போது யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஜம்புகோளபட்டினத் துறைமுகத்திலிருந்தே புறப்பட்டனர். சங்கமித்தை பிக்குணி இந்தியாவின் வங்காள தேசத்துத் தாம்றலிப்தி துறைமுகத்திலிருந்து கப்பலேறி இலங்கை வந்து ஜம்புகோள பட்டினத் துறைமுகத்திலேயே இறங்கியதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையைச் சுற்றியுள்ள இந்த இயற்கைத் துறைமுகங்கள், இலங்கைக்கும் பிற நாடுகளுக்குமிடையில் உண்டான வர்த்தக உறவுகளிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. உராத்தொட்டை (ஊர்காவற்றுறை) கல்யாணி (களனி) தம்பபன்னி, உருவெலை ஆகிய இடங்களின் துறைமுகங்கள் மூலம் இந்தியாவும் இலங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையும் வர்த்தக உறவுகளை வைத்திருந்ததாகத் தோன்றுகின்றது. கிரேக்க நாடு, உரோமாபுரி போன்ற தூர நாடுகளிலிருந்து வந்த கப்பல்களும் இத்துறை முகங்களை அடைந்தன. அலெக்சாந்தர் மன்னனுடைய ஒனெசிகிறிட்டஸ் என்ற கப்பலோட்டி இந்துநதிப் பொங்கு முகத்துக்குவந்த போது அங்கிருந்த வர்த்தகர்களிடமிருந்து இலங்கை பற்றி அறிந்து கோண்டதாகக் கூறப்படுகின்றது. பாரசிகத்துக்கும் இலங்கைக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் இருந்தன என்பது இதிலிருந்து புலனாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கிரேக்க, உரோம இனத்தவர்கள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்தார்கள் என்பதற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக, பருவப்பெயர்ச்சிக் காற்றின் உதவியுடன் பாய்க்கப்பல்களைச் சுலபமாக ஓட்டலாமென்பது கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் ஆராபியாவுக்கும் இலங்கைக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகள் விருத்தியடைந்தன. ஆதிகாலத்திலிருந்தே வர்த்தகத்துறையில் ஆர்வங்கொண்டிருந்த சீன இனத்தவரும் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்திருக்கின்றனர். இந்தியா, சீனா, உரோமாபுரி,பாரசீகம் முதலிய நாடுகளின் நாணயங்களும் மட்பாண்டத் துண்டுகளும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலே கண்டெடுக்கப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாகும். மேல்திசை நாடுகளுக்கும் கீழ்த்திசை நாடுகளுக்குமிடையில் நடைபெற்றுவந்த சர்வதேச வர்த்தகத்தில், இலங்கை, பண்டமாற்று நிலையமாக இருந்துள்ளது. பாரசீகம் இந்தியாவின் சிந்து நாடு போன்ற நாடுகளிலிருந்து குதிரைகளும் நறுமணப் பொருள்களும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. அத்துடன் சீனாவிலிருந்து மலாக்கா தொடுகடலுக்குக்குறுக்கேயுள்ள கடல் வர்த்தக மார்க்கம் வழியாகப் பட்டுத் துணி, கண்ணாடிப் பொருள்கள், கற்பூரம், விசிறி முதலிய பொருள்கள் கொண்டுவரப்பட்டன. இந்நாட்டிலிருந்து பிறநாடுகளுக்கு யானைகளும், யானைத்தந்தம், மாணிக்கக் கற்கள், வாசனைத்திரவியங்கள் முதலிய பொருள்களும் அனுப்பிவைக்கப் பட்டன.

மேற்கண்டவாறு, இலங்கையின் புவியியற் காரணிகளின் அடிப்படையிலுண்டான வெளிநாட்டு உறவுகளை முக்கியமான மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். அவை, அரசியல் உறவுகள், பௌத்த கலாசார உறவுகள், வர்த்தக உறவுகள் என்பனவாகும்.

**அரசியல் உறவுகள்**

இலங்கை, அரசியல் உறவுகளை ஏற்படுத்திக் கொண்ட முக்கியமான நாடு இந்தியாவாகும். அரசியல் உறவு எனப்படுவது குடியேற்றம், படையெடுப்பு, திருமண உறவுகள், கைதிகளைப் பிடித்துக்கொண்டு வருதல் போதல் என்பன போன்ற பலவகைப்பட்ட வழிகள் மூலம் உண்டாகும். விஜயனுக்குப் பின்னர் வந்த ஆரியக் குழுக்கள் அனைத்தினதும் வருகையினைக் குடியேற்றமெனக் கூறுதல் கூடும். இவ்வாறு குடியேறிய குழுக்களுள் விஜயனும் அவனுடைய தோழரும் போலவே பண்டுவஸ்தேவனும் அவனுடைய பரிவாரங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தகச்சானாவும் அவனுடைய பரி வாரங்களும், பத்தகச்சானாவினு டைய சகோதரனான திக்காயுவும் அவனுடைய குழுவினரும், மகிந்த தேரரும் அவருடன் வந்த தர்ம தூதுக் குழுவினரும், சங்கமித்தை யும் குழுவினரும் அடங்குவர். இக் குழுக்களைச் சேர்ந்தோர்அனைவரும் இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே குடியேற்றங்களை அமைத்துக்கொ ண்டதுடன் தமது தாய் நாடுகளுடன் அரசியல் தொடர்புகளைப் பேணி யும் வந்தனர்.

குடியேற்றத்தினை அடுத்துக் காலத் துக்குக் காலம் இலங்கை மீது மேற் கொள்ளப்பட்ட படையெடுப்புகள், அரசியல் ரீதியில், அதிக முக்கியத்து வமுடையனவாகும். இப்படியான படையெடுப்புகள் சில பின்வருவன வாகும். ஆரம்ப காலத்திலே, தேவ நம்பியதிஸ்ஸனுடைய சகோதரனா சூரதிஸ்ஸன் ஆட்சிசெய்த காலத்தில் இங்கே வந்த சேனன், குத்திகன் என்ற குதிரைவியாபாரிகள் இருவர் சூரதி திஸ்ஸ மன்னனைக் கொன்றுவிட்டு அனுராதபுரத்து அரசர்களானார்கள். அதன் பின்னர் இந்தியாவிலுள்ள சோழ நாட்டிலிருந்து வந்த எல்லாளன் என்ற இளவரசன் அசேல மன்னனைக் கொன்றுவிட்டு கி.பி. 145 இல் அனு ராதபுரத்துஅரசைக் கைப்பற்றினான். பின்னர் தென் இந்தியாவிலிருந்து வந்த புலகண்டன் உட்பட்ட ஏழு ஆக்கிரமிப்பாளர் வலகம்பா மன்ன னைத் துரத்திவிட்டு அனுராதபுரத் துச் சிங்காசனத்தை அபகரித்துக் கொண்டனர். அடுத்துத் தாது சேனன் அரசனாவதற்கு முன்னர், தென் இந்தியாவிலிருந்து வந்த பண்டு, பாரிந்தன் முதலான இந்திய ஆக்கிரமிப்பாளர் ஐவர் அனுராத புரத்தை கைப்பற்றினார்கள். முத லாவது சேன மன்னனின் ஆட்சிக் காலத்தில், ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லப பாண்டியப் பேரரசன் இலங்கை மீது படையெடுத்தான். அதன் பின்னர் ஐந்தாம் மகிந்தனுடைய காலத்தில், இராசராசன் என்ற சோழப் பேர ரசன் இலங்கையைத் தாக்கினான்.

இவ்வாறு அனுராதபுர காலத்திலே காலத்துக்குக் காலம் ஏற்பட்ட படை யெடுப்புகள் காரணமாக இங்கு வந்தவர்களுள் சிலர் இந்த நாட்டிலே தங்கி இந்த நாட்டு மக்களுடன் கலந்துகொண்டனர்.

கி.பி. 684 இல் மானவம்மன் அரசனாவதற்கு முற்பட்ட ஏறக்கு றைய அறுபது ஆண்டு காலம், அனு ராதபுர இராச்சியத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, அப்போது இந்த நாட்டில் இருந்த முக்கியமான இரண்டு அரச குடும்பங்களுக்கிடையில் நீண்ட ஒரு பூசல் இருந்துவந்தது. அக்காலத்திலே, சிங்காசனத்தைக் கைப்பற்றிக்கொண்ட ஓர் இளவர சன் இன்னொரு இளவரசனால் சிங் காசனத்திலிருந்து துரத்தப்பட்டதும் துரத்தப்பட்டவன் தென் இந்தியா சென்று கூலிப்படையைக் கொணர் ந்து தனது பகைவனைத் தோற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித்து மீண்டும் அரசனாவான். இப்படியாகத் தோற்கடிக்கப்பட்ட இளவரசனும் தென் இந்தியாவிலிருந்து கூலிப்படையைக் கொணர்ந்து சிங்காசனத்திலிருந்து மன்னனைத் துரத்திவிட்டு மீண்டும் ஆட்சியைப் பெறுவான். இப்படியாகக் குறிக்கப்பட்ட அறுபதுஆண்டு காலத்திலே தத்தமது அரசியல் பலத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு அரசர்கள் மாறிமாறித் தென் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த கூலிப்படையினருள் சிலர் விவாக உறவுகள் முதலியன மூலம் இந்நாட்டு மக்களுடன் சேர்ந்து கொண்டனர்.

ஆரம்ப காலத்திலிருந்தே இந்த நாட்டு ஆட்சியாளர் தத்தமது அரசியல் பலத்தைப் பலப்படுத்தும் பொருட்டு அண்டை நாடுகளைச் சேர்ந்த அரச குடும்பத்தவர்களுடன் திருமணத் தொடர்புகள் வைத்திருந்துள்ளனர். இப்படியான திருமணத் தொடர்புகள் காரணமாக இருநாடுகளுக்குமிடையில் அரசியல் நட்புறவுகள் வளர்ந்துள்ளன. விஜய மன்னன் மதுரையிலிருந்து இராணியைக் கொணர்வித்தமையும், பண்டுவஸ்தேவ மன்னன் இளவரசி பத்தகச்சானாவைக் கொணர்வித்தமையும், ஆரம்ப காலத்திலேற்பட்ட இப்படிப்பட்ட இரு திருமண உறவுகளாகும். அதன் பின்னர், ஏற்பட்ட இப்படியான திருமணத் தொடர்புகளுக்குரிய மிகவும் முக்கியமான ஓர் உதாரணம், கி.பி. 10 ஆம் நூற்றாண்டில், நான்காம் மகிந்தன் கலிங்க தேசத்திலிருந்து இராணியைக் கொணர்வித்தமையாகும். அவளுடன் அவளுடைய இனபந்துக்களும் இங்கே வந்து உயர்ந்த பதவிகளைப் பெற்று இந்த நாட்டு மக்களுடன் கலந்து கொண்டனர். இங்ஙனமே முதலாம் விஜயபாகு மன்னன் தனது வெளிநாட்டுக்கொள்கையைச் சமன்படுத்தும் பொருட்டுக் கலிங்க நாட்டிலிருந்து இராணியைக் கொணர்வித்தான் எனவும் தனது சகோதரியைப் பாண்டிய குடும்பத்துக்குக் கையளித்துக் கொடுத்தான் எனவும் கூறப்படுகின்றது. இந்த அரசியல் உறவு காரணமாக, அடுத்த இரு நூற்றாண்டுகளுள் கலிங்க வமிசம், பாண்டிய வமிசம் எனச் சிங்காசன உரிமையைக் கொண்டிருந்த இரண்டு அரசவமிசங்கள் இந்த நாட்டிலே தோன்றின.

மேலும், படையெடுப்புகளின் போது பிடிக்கப்பட்டவர்களைப் போர்க் கைதிகளாகத் தத்தமது நாடுகளுக்குக் கொண்டு செல்லும் வழக்கத்தை இந்த இரு அரசுகளும் பின்பற்றி வந்துள்ளன. வங்க நாசிக திஸ்ஸ மன்னன் காலத்தில், சோழ மன்னன் இலங்கைமீது படையெடுத்து 12,000 சிங்களவரைச் சிறைக் கைதிகளாகக் கொண்டு சென்றான் எனவும், அதற்குப் பழிவாங்கும் பொருட்டு வங்கநாசிக மன்னனுடைய மகன் கஜபாகு கி.பி. 112 இல் அரசனான பின்னர் சோழநாடு சென்று போர் புரிந்து இங்கிருந்து கொண்டு செல்லப்பட்ட பன்னீராயிரம் பேருடன் மெலும் பன்னீராயிரம் பேரை அந்நாட்டிற் கைதிகளாகப் பிடித்துக் கொணர்ந்து இங்கு குடியேற்றினான் எனவும் எமது மூலாதார நூல்கள் கூறுகின்றன. மேலும், முதலாம் பராக்கிரமபாகு மன்னனும் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து அங்கு பிடிக்கப்பட்ட கைதிகளை இங்கு கொணர்ந்து குடியமர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினான் எனவும் அவர்கள் இந்நாட்டு மக்களுடன் சேர்ந்து கொண்டனரெனவும் கூறப்படுகின்றது.

அனுராதபுர யுகத்தின் பிற்பகுதியளவில், காலத்துக் காலம் பலம் பெற்ற பல்லவ, பாண்டிய, சோழப் பேரரசுகள் தத்தமது ஆதிக்கத்தின் பொருட்டு மேற்கொண்ட போர்களில் இலங்கையும் சம்பந்தப்பட்டுக்கொண்டது. மானவம்ம மன்னன் (கி.பி. 684—718) பல்லவப் பேரரசனுடன் வைத்திருந்த தொடர்பு காரணமாகப் பல்லவப் பேரரசு சிதைவுற்ற பின்னர் தோன்றிய பாண்டிய பேரரசின் குரோதத்துக்கு இலங்கை இலக்காகியது. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லப பாண்டிய பேரரசன், முதலாம் சேன மன்னன் காலத்தில், கி.பி. 848 இல், இலங்கைமீது படையெடுத்தான். அதற்குப் பழிவாங்கும் நோக்குடன், பின்னர் அரசனான இரண்டாம் சேனன் பாண்டிய இராச்சியத்தின் மதுரையைத் தாக்கிப் பாண்டி நாட்டின் சிங்காசனத்துக்கு தான் விரும்பிய பிரதிநிதி ஒருவனை நியமித்தான். அது முதல் பாண்டி நாட்டின் சிங்காசன உரிமை இலங்கைக்கு உரியதாக இருந்தது. இதனால் அடுத்து இந்தியாவிற் பலம் பெற்ற சோழப் பேரரசின் கோபத்துக்கு இலங்கை பலியானது. முதலாம் பரந்தக மன்னன் மதுரை மீது படையெடுத்த போது அங்கிருந்த பாண்டிய மன்னன் சிங்காசன உரிமையின் சின்னங்களை எடுத்துக் கொண்டு உதவி கோரி இலங்கைக்கு வந்தான். சோழப் பேரரசன் முதலாம் பரந்தகன் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலங்கையைத் தாக்கினான். ஈற்றில், இராச ராசன் என்ற சோழப் பேரரசனின் மகன் இரா சேந்திரன் கி.பி. 1017 இல் இலங்கை மீது படையெடுத்து 5 ஆம் மிகிந்து மன்னனைத் தோற்கடித்து அனுராதபுரத்தைக் கைப்பற்றியமை இந்தத் தாக்க எதிர்த் தாக்கங்களின் இறுதி விளைவாக அமைந்தது.

## பௌத்த கலாசார உறவுகள்

கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையியில் தொடர்புகள் இருந்ததாகத் தோன்றுகின்றது. ஆயினும் கி.மு. 247 ஆம் ஆண்டளவில் இங்கு புத்த மதம் கொண்டு வரப்பட்ட பின்னரே இந்த இரு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டனவாகும். புத்த மதத்துடன் மௌரிய கலாசாரச் செல்வாக்கும் இலங்கையிற் பரவியதென நான்காம் அத்தியாயத்திற் கற்றுள்ளோம். அசோக மன்னனால் தெரிவிக்கப்பட்ட முடி சூட்டு முறை அன்று முதல் இந்நாட்டு மன்னர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்ததாகத் தோன்றுகின்றது. இலங்கை மன்னர்கள் தேவ நம்பிய போன்ற அரச புனைப்பெயர்களைக் கைக்கொள்ளத் தொடங்கினர். அவ்வாறே அசோகச் சக்கரவர்த்தியினால், அரிட்டனுக்கும் குழுவினருக்கும் வழங்கப்பட்ட 'சேனாதிபதி' 'புரோகிதர்', 'செட்டி' முதலிய பதவி முறைகளும் பிற்காலத்திற் கைக்கொள்ளப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த மதத்துடன் வந்த மௌரிய கலாசாரத்தின் அமிசங்களை மூலமாகக் கொண்டு இந்த நாட்டுக் கலாசாரம் பல்வேறு அமிசங்களில் வளர்ச்சி பெற்றது. சிங்கள நெடுங்கணக்கு, இலக்கியம், சிற்பக்கலை, நடனக்கலை, கட்டடக்கலை ஆகியன இந்தியாவிலிருந்து வந்த மௌரிய பாரம்பரியங்களின் செல்வாக்கைப் பெற்று வளம்பெற்று வளர்ந்த முறை பற்றி நான்காம் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. புத்த சமயத்துக்கூடாக வட இந்தியாவுடன் ஏற்பட்ட இந்தத் தொடர்பு பிற்காலங்களில் மேலும் விருத்தியடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

குப்தர் காலப்பகுதியைச் சேர்ந்த சமுத்திரகுப்த பேரரசனின் ஆட்சிக் காலத்தில், இலங்கை மன்னனான கீர்த்திசிறிமேவன் (கி.பி. 301-328) குப்தர் பேரரசனுடைய அனுசரணையுடன், இலங்கை யாத்திரிகர்களுக்கெனப் புத்தகாயாவில் ஒரு தங்கு மடத்தினைக் கட்டுவித்தான் எனக் கூறப்படுகின்றது. இவ்வகையான உறவுகள் காரணமாகக் குப்தர் காலச் சிற்ப, சித்திரப் பாரம்பரியங்களின் செல்வாக்கை இலங்கை ஓவியங்களிலும் சிலைகளிலும் காணக் கூடியதாக இருந்தது. அனுராதபுரத்துச் சமாதிச் சிலை, கொளுவிலை சிலை, இசுறுமுனிக் காதற் சோடிகள் போன்ற ஓவியங்களில் குப்த செல்வாக்கு இருக்கிறதாகக் கருதப்படுகின்றது. மேலும், சீகிரிய ஓவியங்கள், குப்தர் கால இந்தியாவில் அஜந்தா குகைகளில் வரையப்பட்ட சித்திரங்களை ஒத்தனவென அறிஞர் எடுத்துக் காட்டியுள்ளனர். புத்த சமயத்தினூடாக ஏற்பட்ட இந்த இந்தியத் தொடர்புகளுள் தென் இந்தியாவுடன் ஏற்பட்ட தொடர்புகளே மிகவும் தெட்டத் தெளிவான தொடர்புகளாகும். தென் இந்தியாவின் அமராவதி, நாகார்ச்சுனை ஆகிய பௌத்த நிலையங்களுடன் இலங்கைப் பிக்குகள் தொடர்புகள் வைத்திருந்தனரென்பதற்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இத் தொடர்புகள் காரணமாக அமராவதிச் சிற்ப, ஓவியப் பராம்பரியங்களின் எதிரொலிகள் இலங்கையிற் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அனுராதபுரத்து இடைக்காலப் பகுதியளவில் தென் இந்தியாவில் மஹாயான புத்தமதம் பரவியிருந்தபோது, அதன் நிலையங்களுடன், இலங்கைப் பிக்குகள் தொடர்ந்து தொடர்புகள் வைத்திருந்தனர். அப்போது அபயகிரி விகாரைக்கும் ஆசியாவின் ஏனைய பௌத்த நாடுகளுமிடையிற் பல தொடர்புகள் இருந்தன. கி.பி. 5ஆம் நூற்றாண்டிலே, சீன இனத்தைச் சேர்ந்த பாகியன் என்ற பிக்கு இங்கு வந்து அபயகிரி விகாரையில் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்தாரெனக் கூறப்படுகின்றது. மேலும், இலங்கைப் பிக்குணிகள் சபை போன்ற ஒன்று சீனாவில் அமைக்கப்பட்டதெனவும் ஆதாரங்கள் கூறுகின்றன. சீனா, பேமா, சீயம், கம்பூச்சியா போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு விஜயஞ் செய்த யாத்திரிகள் அபயகிரி விகாரையிற் சிறிது காலம் தங்கிச் செல்வது வழக்கமாக இருந்ததாகத் தோன்றுகின்றது. இந்தியாவின் பௌத்த நிலையங்களிலிருந்து மேனாடுகளுக்குச் சென்ற சிறந்த மஹா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான அறிஞர் சிலரும் அபயகிரி விகாரையிற் சிறிது காலம் தங்கியிருந்து சென்றதாக ஆதாரங்கள் கூறுகின்றன. கி.பி. 718 இல் தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த வஜ்ரபோதி என்ற மஹாயான அறிஞர் அபயகிரி விகாரையிற் சிறிது காலம் தங்கியிருந்து உறுகுணையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு யாவா, சுமாத்திரா ஆகிய நாடுகளுக்கூடாக சீனா சென்றதாகக் கூறப்படுகின்றது. இவர் இலங்கையில் இருந்தபோது இவரால் பயிற்றப்பட்ட அமோகவஜ்ர என்ற சீடன் இலங்கை மன்னனுடைய தூதனாகச் சீன அரச சபைக்குச் சென்றான் என்றும் அவன் அங்கே ஐந்து ஆண்டுகள் வரை தங்கியிருந்து மஹாயான திரிபிடகத்தைச் சீன மொழியில் மொழி பெயர்த்தான் என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை பிக்குகள் சீயம், யாவா ஆகிய நாடுகளிலே தேரவாத புத்த சமயத்தைப் பரப்புவதில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே அனுராதபுர இராச்சியம் மீது சோழர் படையெடுத்த பின்னர் இலங்கை பிக்குகள் தமது பாதுகாப்புக் கருதி தத்தமது நேசநாடுகளுக்குச் சென்றனர். இப்படியான நாடுகளுள் ஒன்று பேமாவின் அறமன நாடு அல்லது நாமஞ்ஞ தேசம் என்பதாகும். விஜயபாகு மன்னன் அப்போது பேமாவை ஆட்சி செய்த அனவரதன் அல்லது அனுருத்தன் என்ற மன்னனுடைய நண்பனாக இருந்தான். அத்துடன் சோழருடைய பிடியிலிருந்து நாட்டை விடுவித்த பின்னர் விஜயபாகு பேமா சென்று அங்கிருந்த புத்த பிக்குகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வந்து உபசம்பதா என்ற மதச்சடங்கினை நடத்தினான் என்று கூறப்படுகின்றது. இதன்படி பொலன்னறுவைக் காலத்தில் இலங்கை சமய, கலாசாரத் துறைகளிலே பேமா, சீயம், கம்பூச்சியா, யாவா, சுமாத்திர போன்ற நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்ததாகத் தெரிகின்றது.

**வர்த்தகத் தொடர்புகள்.**

ஆரம்ப காலத்திலே எமது நாடு இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளைத் தொடர்ந்து வைத்திருந்து வந்துள்ளது. விஜயனும் கூட்டத்தினரும் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்து வந்த இயக்கர், நாகர் என்றழைக்கப்பட்ட சுதேச மக்கள், பிறநாட்டு வியாபாரிகள் இங்கு வந்தபோது அவர்களுடன் வியாபாரப் பொருள்களைப் பண்டமாற்றுச் செய்தார்கள் என்பதற்குரிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கி.மு. 6 ஆம் நூற்றாண்டளவு பிற்பட்ட காலத்திலே தபஸ்சு, பல்லுக என்ற இரு வட இந்திய வியாபாரிகள் திருக்கோணமலைக்கு அண்மையிலுள்ள திரியா எனும் இடத்திற்கு வந்தார்கள் எனக் கூறப்படுகின்றது. ஐந்தாம் நூற்றாண்டளவிலே யானைகள் குதிரைகள் போன்ற மிருகங்களையுமே ஏற்றிச் செல்லக் கூடிய பெரிய கப்பல்கள் இலங்கையிடம் இருந்ததாகப் பாகியானுடைய குறிப்புகளிற் கூறப்பட்டுள்ளது. பாகியான் இலங்கையிலிருந்து இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற கப்பலில் 200 பிரயாணி கள் சென்றார்கள் என்றும் கூறப் படுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ளவாறு, எமது நாடு, கீழைத்தேச வர்த்தக மார்க்கத் திலே பொருள்களைக் கைமாற்றும் நிலையமாகப் பிரசித்தி பெற்று இருந்துள்ளது. இலங்கையின் ஒடத் துறைகளைப் போலவே தென் இந் திய ஓடத் துறைகளும் பொருள் களைக் கைமாற்றும் நிலையங்களாக இருந்தன என்றும், இந்த இரு நாட்டு ஓடத்துறைகளுக்குமிடையில் வர்த் தகப் பொருள்கள் தொடர்ந்து கைமாற்றப்பட்டு வந்தன என்றும் கூறப்படுகின்றது. இலங்கையின் மாதித்த ஓடத்துறையும் தென் இந்தி யாவின் காவேரிப்பட்டினமும் வியா பாரிகள் சந்தித்த இரு வர்த்தக நிலை யங்களாக இருந்து வந்துள்ளன. உரோம — இந்திய வர்த்தகத்திலே மிளகு அடங்கிய வாசனைத் திரவியங் களும் இரத்தினக் கற்களும் எமது நாட்டினாலேயே வழங்கப்பட்டன. இவ்வாறு கீழ்த்திசை, மேற்றிசை வர்த்தகர்கள் சந்தித்த முக்கியமான ஒரு வர்த்தக நிலையமாக எமது நாடு விளங்கியதெனலாம்.

இந்திய, பாரசீக, இதியொப்பிய கப்பல்கள் எப்பொழுதும் இலங்கைத் துறைமுகத்தில் தங்கியிருந்தனவென கொஸ்மசின் அறிக்கையிற் கூறப்பட் டுள்ளது. கி.மு. 4 ஆம் நூற்றாண் டிலே பேரரசன் அலெக்சாந்தர் வட மேற்கு இந்தியாவுக்கு வந்த காலத் திலிருந்து கிரேக்க நாடு, உரோ மாபுரி முதலிய மத்தியதரை நாடு கள் இலங்கையுடன் தொடர்புகள் வைத்திருந்துள்ளன. டொலமி என்ற கிரேக்க இனத்தவர் கி.மு. 2 ஆம் நூற்றாண்டளவு முற்பட்ட காலத் தில் வரைந்த உலகப் படத்திலே இலங்கை வரையப்பட்டிருக்கிறது. இது, அக்காலத்திலேயே வெளி நாட்டவர் இலங்கை பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அவர் இலங்கையை 'தப்புரபேன்' என்று குறிப்பிட்டுள் ளார். தப்புரபேன் என்பது 'தம்ப பன்னி' என்பதன் கிரேக்க மொழி வடிவமாகும். கி.பி. முதலாம் நூற் றாண்டில் கிரேக்க வியாபாரிகள் இந்தியாவுக்கு வந்து இலங்கைப் பொருள்களை கொள்வனவு செய்து கொண்டு சென்றதாகக் கூறப்படு கின்றது. இத்தொடர்புகள் உரோ மருடன் ஏற்பட்ட உறவுகள் மூலம் மேலும் விருத்தியடைந்தன.

கி. பி. முதலாம் நூற்றாண்டிலி ருந்தே எமக்கு உரோமருடன் வர்த்த கத் தொடர்புகள் இருந்து வந்தன என் பது 'பலினி' என்ற வரலாற்றிஞரு டைய அறிக்கைகளிலிருந்து தெரிய வருகின்றது.ஆராபியாவுக்குச்சென்று கொண்டிருக்கையிற் காற்றினால் இலங்கைக்குத் தள்ளப்பட்டுவந்த அனியுஸ் பிலோகொமியுஸ் என்ற மாலுமிக்கும் அக்காலத்தில் இலங் கையை ஆட்சி செய்த பாதிகாபய மன்னனுக்குமிடையில் நட்புண்டா னது. இதன் விளைவாக பாதிகாபய மன்னன் இம்மாலுமியுடன் ஒரு தூதுக் குழுவை உரோம மன்னனி டம் அனுப்பி வைத்தான். கிளோ டியஸ் மன்னன் காலத்திலே உரோ முக்குச்சென்றஇந்த இலங்கைத்தூதுக் குழு திரும்பி வந்த பொழுது ஏரா ளமான பவளங்களைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தது எனவும் அவற்றைக் கொண்டு மகாதூபி அலங்கரிக்கப்பட்டது எனவும் மகாவம்சத்திற் கூறப்பட்டுள்ளது. உரோமர் இலங்கையை 'செரென்டிப்' என்று குறிப்பிட்டனர். அனுராதபுரத்திலும் சீகிரியாவிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது பல உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், உரோமாபுரியுடன் பெரும் வர்த்தகத் தொடர்புகள் இருந்தனவென்றும் கி. பி. 5 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் அது குறைந்தது என்றும் தெரிய வருகின்றது.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இந்து சமுத்திரத்து வர்த்தகம் அராபியர் வசமானது. அன்று தொட்டு அராபிய வர்த்தகர்கள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்ததாகத் தோன்றுகின்றது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த வர்த்தகக் குழுவினர் அனுராதபுரத்தில் இருந்தனர் என்பதற்கு ஆதாரங்களுள. இவர்களுள் அராபிய, பராசீய வர்த்தகர்களும் இருந்தனரெனக் கூறப்படுகின்றது. கி. பி. 1344 இல் இபன் பத்தூதா என்ற முஸ்லிம் தேச சஞ்சாரி இலங்கை வந்தான். இவன் காலியை அடைந்தபோது இப்றாகிம் என்ற முஸ்லிம் மாலுமி ஒருவன் அவனுக்கு இராப்போசனம் வழங்கி யுபசரித்தானெனக் கூறப்படுகின்றது. அக்காலத்திலிருந்து இலங்கையின் மேற்குக் கரையோரக் கப்பல் துறைமுகங்கள் மூலம் சிறந்த வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டு வளர்ந்து வந்தன. இந்த வர்த்தகம் முற்று முழுதாக முஸ்லிம் வியாபாரிகள் வசமே இருந்தது. வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பொருள்களை முஸ்லிம் வியாபாரிகளே நாட்டின் உட்பகுதிகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தனர். அவ்வாறே இவர்கள் நாட்டின் உட் பகுதிகளிற் கிடைத்த வாசனைத் திரவியங்கள், யானைத்தந்தம், பாக்குப் போன்ற பல்வேறு பொருள்களைக் கரையோர ஓடத்துறைகளுக்கு எடுத்துச் சென்று வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்தும் வந்தனர். இதன் விளைவாக 14 ஆம் நூற்றாண்டளவிலே சிலாபம், கொழும்பு, களுத்துறை, பேருவளை, வெலிகமம் ஆகிய ஓடத்துறைகளை அண்டி முஸ்லிம் குடியேற்றங்கள் உண்டாயின. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏகாதிபத்தியம் முஸ்லிம் இனத்தவர் வசமே இருந்தது.

இலங்கை, சீனாவுடன் வைத்திருந்த சமயத் தொடர்புகள் பற்றி நாம் முன்னர் படித்துள்ளோம். சமயத் தொடர்புகளுடன் வர்த்தகத் தொடர்புகளும் இருந்து வந்துள்ளன. எமது புராதன நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது சீன நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சீன விசிறிகளும், பட்டுத்துணிகளும் இங்கு கொண்டு வரப்பட்டன. கி.பி. 1409 இல் இலங்கைக்கு வந்த செங் அல்லது செங் பதியா, சிவனொளிபாத மலைக்கு வழங்குவதற்கெனக் கொண்டு வந்த பொருள்களுள் விலையுயர்ந்த வர்த்தகப் பொருள்கள் இருந்தனவாகக் காலி மும்மொழிக் கல்வெட்டின் மூலம் தெரிய வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவுடன் மாத்திரமன்றி மலேசியா, பேமா, இந்துனேசியா, சீயம் முதலிய நாடுகளுடனும் பொலன்னறுவை காலத்திலிருந்து எமது நாட்டுக்கு வர்த்தகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. இவை பெரும்பாலும் கலாசாரத் தொடர்புகளுடன் ஒன்றுபட்டனவாகவே இருந்து வந்துள்ளன. கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் இலங்கை வர்த்தகர்கள் பேமா வர்த்தகர்களுடன் யானை வியாபாரஞ் செய்து வந்தனர். இந்த வர்த்தகம் சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு அபிப்பிராய பேதம் காரணமாகவே மகா பராக்கிரமபாகு பேமா மீது படையெடுத்தான் என வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன.

**பயிற்சி**

1. கீழைத்தேச நாடுகளுக்கும் மேலைத்தேச நாடுகளுக்குமிடையில் நடந்த வர்த்தகத்திலே கைமாற்றப்பட்ட பொருள்களைக் குறிப்பிடுக.

2. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்திற் செல்வாக்குச் செலுத்திய புவியியற் காரணிகள் யாவை?

3. இலங்கை எந்தெந்த நாடுகளுடன் பௌத்த கலாசாரத் தொடர்புகள் வைத்திருந்ததெனக் கூறுக.

4. (அ) குடியேற்றம்

   (ஆ) படையெடுப்பு

   (இ) திருமணம் ஆகியவற்றின் மூலம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஏற்பட்ட உறவுகளுக்குரிய உதாரணங்கள் இவ்விரண்டு தருக.

5. இலங்கைப் படம் ஒன்று வரைந்து அக்காலத்தில் இருந்த ஓடத்துறைகள் நான்கினைத் குறித்துப் பெயரிடுக. இவற்றுக்கு இப்போது வழங்கும் பெயர்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 6


# நாகரிகம் தென்மேற்குத் திசைநோக்கி இடம் பெயர்ந்தமையும் இராச்சியங்கள் இடம் மாறியமையும்

பொலன்னறுவை யுகத்தின் பிற் பகுதியில் ஏற்பட்ட மாகனின் படை யெடுப்பினை அடுத்து ராசரட்டை யின் நாகரிகம் சீரிழந்து சிதைவுற் றமை பற்றி நான்காம் அத்தியா யத்திற் படித்தோம். இங்கே, அது எவ்வாறு ஏற்பட்டதெனவும் அதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை எனவும் ஆராய்தல் முக்கிய மாகும். ஆயின், அதற்கு முன்னர் ராச ரட்டை நாகரிகத்தின் உச்சக் கட்டம் பற்றி விளங்கிக்கொள்ளுதல் வேண் டும். பொலன்னறுவை யுகத்தின் பொற்காலமெனக் கருதப்படும் கி.பி. 1153 முதல் கி.பி. 1186 வரையான காலத்தில், அதாவது மகாபராக் கிரமபாகுவின்ஆட்சிக்காலத்தில்,ராச ரட்டைச் சமவெளியின் நீர்ப்பாசன முறை உச்சக் கட்டத்தை அடைந் திருந்தது; விவசாயம் அபிவிருத்தி யடைந்திருந்தது; நாட்டின் பொரு ளாதார நிலை உறுதியாக இருந்தது. தென் இந்தியப் படையெடுப்புக் காரணமாகவும் பேமா படையெடுப் புக் காரணமாகவும் இலங்கை பெரும் புகழ்பெற்றுவிளங்கியது. கி.பி. 1165 இல் நடைபெற்ற நிக்காயப் பேரவை யையடுத்துப் புத்த சமயத்துக்குக் கிடைத்த அரச ஆதரவு காரணமாகச் சமய கலாசாரத் துறைகளிலும் நாடு முன்னேற்றம் கண்டிருந்தது.

கி.பி. 1186 இல் பராக்கிரமபாகு மன்னன் இறந்த பின்னர், அவனு டைய சகோதரியின் புதல்வர்களுள் ஒருவனான இரண்டாம் விஜயபாகு சிங்காசனமேறினான். இவன் ஒரு வருடம் மாத்திரமே ஆட்சி செய் தான்.அதற்குப் பின்னர் கி.பி. 1187 இல் நிஸ்ஸங்கமல்லன் அரசனா னான். இம்மன்னனுடைய கல்வெட் டுகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் வரலாற்றில் அதிக கல்வெட்டுகளை அமைத்த மன்ன னென இவன் குறிப்பிடப்படுகின் றான். இம்மன்னன், தான் கலிங்க நாட்டுச் சிங்கபுரியிலிருந்து வந்த தாகத் தனது கல்வெட்டுக்கள் ஒவ் வொன்றிலும் முக்கியமாகக் குறிப் பிட்டுள்ளான். மகாபராக்கிரமபாகு வின் அழைப்பின் பேரிலேயே தான் இங்கு வந்ததாகவும் தான் மகா பராக்கிரமபாகுவின் மருமகன் என வும் இவன் மேற்கொண்டும் குறிப் டுள்ளான். நிஸ்ஸங்கமல்லன் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு 6.1 ஆட்சிப்பீடம் மாறிய (புலம்பெயர்ந்த) விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதற்கு முன்னர் அவன் வசித்த நாடெனக் கருதப்படும் கலிங்க நாடு, மேற்கு இந்தியாவின் ஒரிசா நாடு என முன்னர் கருதப்பட்டது. ஆயின் அது தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஒரு நாடாக இருக்கக்கூடும் என்ற அபிப்பிராயம் இப்போது எழுந்துள்ளது. நிஸ்ஸங்கமல்லனுடைய ஒன்பது ஆண்டு ஆட்சிக்காலத்தில், அவன் இலங்கையின் முடியுரிமை கலிங்க வமிசத்தினருக்கு உரியது என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பெரும் முயற்சி செய்தான். இதனால் பாண்டியர்கள் இவனை எதிர்த்து வந்தனர். அந்த எதிர்புக்களை எல்லாம் இவன் வெற்றிகரமாக முறியடித்துக்கொண்டு தனது ஆட்சிக்காலத்தில் நாட்டில் அமைதி நிலவச் செய்தான். கி.பி. 1196 இல் இவன் இறந்த பின்னர் பொலன்னறுவை முடியுரிமை பற்றித் தொடர்ந்து பிணக்குகள் ஏற்பட்டன. உண்மையில். நிஸ்ஸங்கமல்லனின் மரணத்தின் பின்னரே ராச ரட்டையின் நாகரிகம் சீர்குலைய ஆரம்பித்தது. இது எவ்வாறு ஏற்பட்டதெனவும் இதற்கு ஏதுவாக இருந்த அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகள் யாவை எனவும் அடுத்ததாக ஆராய்வோம்.

நிஸ்ஸங்கமல்ல மன்னனால் முன்னிலைக்குக் கொண்டுவரப்பட்ட அவனுடைய சகோதரர்களும் கல்யாணவதி என்ற இராணியும் இவனுடைய மரணத்தின் பின்னர் முடியுரிமையைக் காலத்துக்குக் காலம் பெற்றனர். ஆயினும் பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்திலிருந்தே பலம் பெற்றிருந்த பாண்டிய மன்னரும் தளபதிகளும் கலிங்க குல மன்னர்களுக்கு எதிராகக் கலகங்கள் செய்தனர். இதனால் கி.பி 1196 முதல் இருபது ஆண்டுகள், கலிங்க குலத்தவருக்கும் பாண்டிய குலத்தவருக்கும் சார்புடையோராக இருந்த தளபதிகளால் கலிங்க இளவரசர்களும் பாண்டிய இளவரசர்களும் மாறி மாறிச் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டனர். இக்காரணத்தினாற் பொலன்னறுவை இராசதானியில் தொடர்ந்து குழப்பங்களும் போர்களும் இடம் பெற்றன. இந்த நிலைமை வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளருக்கு உகந்த ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. எனவே கி.பி. 1115 இல் கலிங்க குலத்தைச் சேர்ந்த மாகன் என்ற ஒருவன் 24,000 சேரப் போர் வீரர் அடங்கிய ஒரு படையுடன் வந்து பொலன்னறுவை இராச்சியத்தைக் கைப்பற்றினான். இது 1,500 ஆண்டுகளாக ராச ரட்டையில் நிலவிவந்த நாகரிகத்துக்குக் கொடுக்கப்பட்ட இறுதி அடியாக அமைந்தது.

மாகன், மிகவும் கொடூரமான அடக்கு முறைகளைக் கையாண்டான் என வரலாற்றுக் கதைகள் யாவும் கூறுகின்றன. இவன் குறிப்பாக அரச உரிமை உடையவர்களாக இருந்த குலக்குடும்பங்களின் தலைவர்களுக்கும் அவர்களுடன் இருந்த பிக்குகளுக்கும் பல அட்டூளியங்கள் செய்தான். இதனால் திக்கற்ற நிலையை அடைந்த பிக்குகளும் மேன் மக்களும் புகலிடந்தேடி றுகுணு, மலாயரட்டைகளுக்கும் வெளி நாடுகளுக்கும் சென்றனர். எனவே அனுராதபுரத்திலும் பொலன்னறுவையிலும் இருந்த விகாரைகள், பிரிவெனாக்கள் முதலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார நிலையங்கள் பாழடைந்தன. ராச ரட்டை நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்த நீர்ப்பாசனம் இக்காலப் பகுதியிலே புனரமைக்கப்படவில்லை. நீர்ப்பாசன அமைப்பு இப்படியாகச் சீரழிந்தமையினாலேயே ராசரட்டை நாகரிகத்தின் அத்திவாரம் தகர்ந்ததெனலாம.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக நன்கு பயிரிடப்பட்டுவந்த பரந்த வயல் நிலங்களும் சிறு குளங்களை அண்டிய பகுதிகளும் வெகுவிரைவில் உருமாறி அடர்ந்த காடுகளாயின. மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவின. இதனால் ராசரட்டைச் சமவெளி மனிதன் வசிப்பதற்கு ஒவ்வாத பகுதியாக மாறியது. எனவே மக்கள் மலாயரட்டையையும் தென் மேற்குப் பகுதிகளையும் நோக்கிக் குடிபெயர்ந்தனர். ராசரட்டைச் சமவெளியின் அடர்ந்த காடுகளிற் காணபட்ட மிகவுஞ் சிறிய குளங்களை அண்டி அங்குமிங்கும் சிற்சில மக்கள் கூட்டத்தினர் வாழ்ந்து வந்தனர். இக்குடியேற்றங்களின் மேல் வன்னியர் என்று பிரசித்தி பெற்ற சுயாதீன ஆட்சியாளர் ஆதிக்கஞ் செலுத்த ஆரம்பித்தனர். இங்ஙனம் கி.பி. 1230 அளவில் தம்பதெனிய இராச்சியம் உதயமாவதற்கு முற்பட்ட ஏறக்குறைய 1500 ஆண்டு காலம் சீரும் செழிப்புமுற்றிருந்த உலர்வலயச் சமவெளி அடர்ந்த காட்டு நிலமாக மாறியது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் குடியேற்றங்களை அமைக்கும் வரை இப்பகுதி மனித சஞ்சாரமற்ற காட்டு நிலமாகவே இருந்து வந்துள்ளது.

ராச ரட்டைச் சமவெளியிலிருந்து தென் மேற்கு ஈரவலயத்துக்கு இடம் பெயர்ந்து சென்ற மக்கள் புதிய தொரு பொருளாதார முறைக்கு ஏற்பத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. ஈரவலயத்துக் காலநிலையும் உலர் வலயத்துக் காலநிலையும் வேறுபட்டனவாகும். ஆண்டு முழுவதும் மழை பெய்வது பயிர்ச்செய்கைக்கு உகந்ததன்று. எனவே, முன்னர் நெற் செய்கையை மேற்கொண்டுவந்த மக்கள் இப்போது மாறுபட்ட புவியியற் சூழலுக்கு ஏற்றவாறு தமது வாழ்க்கை முறையையும் மாற்றியமைக்க வேண்டியதாயிற்று. புதிய சூழலின் பொருளாதார முறை, உணவுப் பொருள்களைப் பயிர்செய்வதைவிடப் பண வருவாய் தரும் பொருள்களின் உற்பத்தியைச் சார்ந்திருந்தது. இப்பகுதிகளிலே கறுவா, மிளகு முதலிய வாசனைத் திரவியங்களும் பாக்கு, இரத்தினக் கற்கள், யானைத் தந்தங்கள், வெட்டுமரவகைகள் போன்றனவும் அதிகம் கிடைக்கப்பெற்றன. அத்துடன் இப்பொருள்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளிலே அதிக கிராக்கியும் இருந்தது. இதனால் இக்காலத்து அரசர்களுடைய முக்கியமான வருவாய் மார்க்கம், முற்பட்ட காலத்து அரசர்களுடைய விவசாய நீர்வரி, காணிவரி ஆகியவற்றைவிட வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வியாபாரப் பொருள்களைச் சார்ந்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

பொலன்னறுவைக் காலத்துக்குப் பின்னர், புதிய ஆட்சிப் பீடத்தைத் தென்மேற்குத் திசையிலே அமைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டிய சூழ்நிலை ஆட்சியாளருக்கு ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் நிலவிய பொருளாதார, அரசியற் சூழல்களுக்கேற்பப் பாதுகாப்புமிக்க இடங்களுக்கு ஆட்சிப் பீடம் பின்னர் மாற்றப்பட்டது. இங்ஙனம் பொலன்னறுவையின் பின்னர் தம்பதெனியாவுக்கும் அதன் பின்னர் முறையே யாப்பகுவ, குருணாகல், கம்பளை, கோட்டே, கண்டி ஆகிய நகரங்களுக்கும் ஆட்சிப்பீடம் மாற்றப்பட்டது.

## தம்பதெனிய இராச்சியம்

கலிங்க மாக மன்னன் பொலன்னறுவையில் ஆட்சி செய்த காலத்தில் நான்கு முக்கியமான தலைவர்கள் தம்பதெனியா, யாப்பகுவ, மினிப்பே, ஊவா மாகாண கோவின்தன்கெல ஆகிய இடங்களிலே மாகனுக்கு எதிராகப் படைகளைத் திரட்டினார்கள். தம்பதெனிய விஜயபாகு, சேனாதிபதி சுபன், மினிப்பே சேனாதிபதி சங்க, கோவின்தன்கெல குழு முதல்வன் புவனேகபாகு ஆகியோரே இத் தலைவர்கள். இவர்களுள் தம்பதெனிய விஜயபாகு, மக்களின் ஆதரவைப் பெரிதும் பெற்று முன்னணியில் நின்றான்.

தம்பதெனியாவை இராசதானியாக்கிக் கொண்டு கி.பி. 1232 இல் அரசனான இவன் கொத்மலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த புனித பற் சின்னத்தைச் கொணர்வித்துக் கேகாலை மாவட்டத்துப் பெலிகலை மலை உச்சியிலே தந்ததாது மாளிகை ஒன்றினைக் கட்டுவித்து அதனை அங்கே பாதுகாப்பாக வைத்தான். மேலும், பாதுகாப்புத்தேடிப் பிறநாடுகளுக்குச் சென்ற பிக்குகளை இம் மன்னன் மீண்டும் நாட்டுக்கு வரவழைத்தான். இன்னும், தனது பெயரைக் கொண்டுள்ள விஜயசுந்தராராமய என்ற பெயருடன் ஒரு விகாரையையும் தலை நகரிற் கட்டுவித்தான். பிக்குகளின் ஒழுக்கத்தைப் பேணும் பொருட்டுப் பிக்குகளுக்குரிய ஒழுக்கக் கோவை ஒன்றினையும் தயாரிப்பித்தான். அவ்வாறே திரிபிடகம் என்ற தர்ம நூலையும் வரைவித்தான். களனி விகாரையைப் புனரமைப்புச் செய்வித்த இம்மன்னனாற் பல விகாரைகள் கட்டுவிக்கப்பட்டன. முதிர்ந்த வயதில் அரசனான இவன் ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் மாத்திரமே ஆட்சி செய்தான்.

விஜயபாகு மன்னனின் மரணத்தின் பின்னர் இவனுடைய மகன் இரண்டாம் பராக்கிரமபாகு கி.பி. 1236 இற் சிங்காசனம் ஏறினான். இவன் 1270 வரை ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவ்வளவு நீண்ட காலம் ஒரு மன்னன் ஆட்சியிலிருப்பதற்குக் கிடைத்த வாய்ப்புப் பற்றிச் சிந்திக்கும் போது பொலன்னறுவை இராச்சியத்தின் இறுதிக் காலத்தில் எழுந்திருந்த நிலைக்கு மாறாக, மாயாரட்டையில் அரசியல் நிலை போதியளவு உறுதியாக இருந்ததென்பது தெளிவாகின்றது. இவன் பெலிகலையில் இருந்த தந்ததாதுவைத் தம்பதெனியாவுக்குக் கொணர்வித்து மிகவும் கோலாகலமான தந்ததாதுப் பூசை ஒன்றை நடத்துவித்தான். அப்பூசையின்போது மாகனின் பிடியிலிருந்து நாட்டுக்கு விடுதலைபெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதாக இவன் மக்கள் முன்னிலையிற் சத்தியஞ் செய்தான். இந்த வேளையில் மாகனும், குறிப்பாக இலங்கையின் வடக்குக் கரையோர ஓடத்துறைகள் மூலம் தென் இந்தியாவிலிருந்து ஆயிரக் கணக்கான கூலிப் படைகளைக் கொணர்வித்துத் தனது படைப்பலத்தைப் பெருப்பித்தான் எனத் தோன்றுகின்றது. பராக்கிரமபாகு மாகனைத் துரத்துவதற்கு ஆயத்தமாகிக் கொண்டு இருந்த வேளையில்வேறொரு படையெடுப்பினை எதிர் நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவனுடைய ஆட்சியின் பதினோராவது ஆண்டு அதாவது, கி.பி. 1247 இல், சந்திரபானு என்ற யாவா மன்னன் இலங்கை மீது படையெடுத்தான். இவன் தாமிரலிங்க எனப்பட்ட நாட்டிலிருந்தே இங்கு வந்தான். இந்த நாடு, மலாயா குடா நாட்டின் வடபகுதியாகுமென இப்போது அறியப்பட்டுள்ளது. பராக்கிரமபாகு மன்னனுடைய மருமகனான வீரபாகு இளவரசன் ஒரு சேனையுடன் சென்று சந்திரபானுவைத் துரத்திவிட்டுத் தெவுந்துரை கோவிலில் நேர்த்திக் கடன் கழித்தான் என்று கூறப்படுகின்றது. இதனைக் கொண்டு தென் இலங்கை மீதே சந்திரபானு படையெடுத்தான் என்று சிந்திக்கக் கூடியதாக இருக்கின்றது. அதன் பின்னர், இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் மாகனைத் துரத்தும் பொருட்டுத் தென் இந்திய பாண்டியப் பேரரசனின் உதவியைப் பெற்றான் என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இப்படியாகப் பாண்டியர் படைகளும் பராக்கிரமபாகுவின் படைகளும் கிழக்குமேற்குத்திசைகளிலிருந்துபொலன்னறுவையைச் சூழ்ந்து கி.பி. 1255 இல் மாகனைத் தோற்கடித்ததாகக் கூறப்படுகின்றது. ஆயினும் பராக்கிரமபாகு மன்னனுக்கு எதிரான அரசியற் பயமுறுத்தல்கள் அத்துடன் முடிந்துவிடவில்லை. வட இலங்கையின் ஓடத்துறைகளிலே தங்கியிருந்த ஒரு வெளிநாட்டுப் படையை முன்னணியிற் கொண்டு இன்னொரு எதிரி வடதிசையிலிருந்து ஆக்கிரமிப்பை நெறிப்படுத்திக் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. அவன், முதல் முறை தோற்கடிக்கப்பட்டு ஓடிய யாவா மன்னன் சந்திரபானு ஆவான். இம்முறை அவன் தாம் ஒரு பௌத்த மதத்தவன் என்று கூறிப் பௌத்த மக்களைத் தன் பக்கம் கவர்ந்து கொண்டு முன்னேறி வந்தான். பராக்கிரமபாகு மன்னன் இம்முறையும் பாண்டியப்பேரரசனின் உதவியைப் பெற்றுக் கி.பி. 1261 ஆம் ஆண்டு சந்திரபானுவைத் தோற்கடித்தான். இம்முறை பாண்டிய மன்னன், சந்திரபானுவைத் துரத்துவதற்குத் தான் செய்த உதவிக்கு ஈடாகத் தனது பிரநிதி ஒருவனை வட இலங்கையின் அரசனாக நியமித்தான் எனக் கூறப்படுகின்றது. இப்படியாக நியமிக்கப்பட்ட பிரதி நிதியும் சந்திரபானு என்றே அழைக்கப்பட்டான்.

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுடைய ஆதரவுடன் அக்கால சங்கராஜ மகாதேரருடைய தலைமையில் தம்பதெனியாவில் நடத்தப்பட்ட பிக்குகள் சம்மேளனத்திலே பிக்குகளின் ஒழுக்க விதி முறைகளைக் கொண்ட ஒழுக்கக் கோவை ஒன்று வகுக்கப்பட்டது. இதுவே பிரசித்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற 'தம்பதெனிய ஒழுக்கக்கோவை' என்பதாகும். பராக்கிரமபாகு மன்னன், பிக்குகளினுடைய கல்வி, ஒழுக்க விவகாரங்களை மேம்படுத்துவதற்குப் பெரும் சேவையாற்றினான். ஆண்டு தோறும் பிக்குகளுடன் தானும் கலந்து கொண்டு ''உபசம்பதா'' எனும் விழாவினை நடப்பித்தான். இந்த விழாக்களின் போது, மதபீடப் பதவிகளுக்குத் தகுதியுடைய மகா தேரர்கள் நியமிக்கப்பட்டனர். இம்மன்னன் வெளி நாடுகளிலிருந்து தர்ம, வினையப் பற்றுடைய பிக்குகளை இங்கு வரவழைதான். மேற்குறிப்பிடப்பட்ட சந்திர பானு இங்கு வரமுன்னர் இருந்த நாடான தாமிரலிங்க நாட்டிலிருந்து தர்ம கீர்த்தி மகா தேரரை வரவழைத்து அவருடைய தலைமையில் ஒரு பௌத்த அடவி மடத்தை அமைப்பித்தான்.

இம்மன்னன் சிறந்த ஒரு பண்டிதனாகக் கருதப்படுகின்றான். ''விசுத்தி மார்க்க சன்னய'' என்ற நூல் இம் மன்னனால் எழுதப்பட்டதாகும். இவன், தற்கால இலக்கிய சர்வஞான பண்டிதன் என்ற பொருளையுடைய 'கலிகால சாகித்ய சர்வக்ஞ பண்டித' என்ற பட்டம் பெற்றிருந்தான் எனவும் குசயாதகய என்ற நூலைத் தழுவி எழுதப்பட்ட 'கவ்சிலுமிண' இவனுடைய படைப்பு என்றும் கருதப்படுகின்றது.

இரண்டாவது பராக்கிரமபாகுவுக்குப் பின்னர் கி.பி. 1271 இல் அவனுடைய மகன் போசத் விஜயபாகு, நான்காம் விஜயபாகு என்ற பெயருடன் அரசனானான். இவனால் இரண்டு ஆண்டுகள் மாத்திரமே ஆட்சி செய்ய முடிந்தது. அரண்மனையில் ஏற்பட்ட ஒரு சதியில் இவன் உயிரிழந்தான். இவனுக்குப் பின்னர் இவனுடைய சகோதரன் முதலாம் புவனேகபாகு அரசனானான். இவன் சிறிய காலம் தம்பதெனியாவிலிருந்து ஆட்சி செய்த பின்னர் தம்பதெனியாவிலும் பார்க்கப் பாதுகாப்பான யாப்பகுவ கோட்டைக்குச் சென்று அங்கிருந்து கொண்டு 12 ஆண்டுகள், அதாவது கி.பி. 1284 ஆம் ஆண்டு வரை, நாட்டை ஆட்சி செய்தான்.

## யாப்பகுவ இராச்சியம்

புவனேகபாகு மன்னனும் முந்திய மன்னர்களைப் போன்று உபசம்பதா முதலிய சடங்குகளை ஆண்டுதோறும் நடத்திப் புத்த சமய சேவைகளில் ஈடுபட்டிருந்தான். மாகனின் படையெடுப்பின் பின்னர், பாதுகாப்புடைய ஒரு கோட்டையாக யாப்பகுவ அபிவிருத்தி செய்யப்பட்டது. முதலில், சுபன் என்ற தளபதி, யாப்பகுவ மலை உச்சியில் ஒரு கோட்டையை அமைத்து மாகனுக்கு எதிராகப் படை திரட்டினான் என ஏலவே படித்துள்ளோம். மலையின் தென்பக்கச் சாரலில் அகழியும் சுற்று மதிலும் அமைக்கப்பட்டு எதிரிகளின் தாக்குதலை எதிர்நோக்குவதற்கு ஏற்ற பாதுகாப்புடைய ஓர் இடமாக அது அமைக்கப்பட்டிருந்தது. கி.பி. 1284 இல், குலசேகரன் என்ற பாண்டிய மன்னனுடைய ஆரியச் சக்கரவர்த்திஎன்றஅமைச்சன்ஒரு பெரும் படையுடன் வந்து யாப்பகுவை முற்றிகையிட்டுத் தந்த தாதுவை எடுத்துக் கொண்டு சென்றான். இதனையடுத்து மூன்று ஆண்டுகள் வரை அங்கே அர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன் ஆட்சி இருக்க வில்லை. இதுவே யாப்பகுவ இராச்சியத்தின் முடிவாக அமைந்தது.

### குருணாகல் இராச்சியம்

தந்ததாதுவானது இலங்கையின் ஆட்சி உரிமையின் சின்னமாக அது வரை காலமும் கருதப்பட்டு வந்தது. எனவே சிங்காசன உரிமையை உறுதிப்படுத்தற் பொருட்டுத் தந்ததாதுவைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. முதலாம் புவனேகபாகுவின் மகனான மூன்றாம் புவனேகபாகு பாண்டிய நாடு சென்று அதனைப் பெற்றுக் கொண்டு வந்து கி.பி.1287 முதல் பொலன்னறுவையிற் சிறிய காலம் ஆட்சி செய்தான். அதன் பின்னர் இவனுடைய சகோதரனான இரண்டாம் புவனேகபாகு இவனைத் துரத்திவிட்டுக் கி.பி. 1293 இல் குருணாகலையை முதல் முறையாகத் தலைநகரமாகக் கொண்டு அரசனானான். இவனும் முன்பிருந்த அரசர்களைப் போலப் புத்த சாசனத்தின் மேம்பாட்டுக்கு வேண்டிய உப சம்பதா முதலிய விழாக்களை நடத்தி வந்தான். இரண்டாம் புவனேகபாகுவுக்குப் பின்னர் அவனுடைய மகன், நான்காம் பராக்கிரமபாகு சிங்காசனம் ஏறினான். இவன் குருணாகல் காலத்தை ஒளியமயமாக்கிய ஒரு சிறந்த மன்னனென வரலாற்றில் இடம் பெற்றுள்ளான். இவன் தந்த தாதுக் கோவில் ஒன்றைக் கட்டுவித்துத் தந்ததாதுவை அங்கே வைப்பித்தான். மேலும், இம்மன்னன், தந்ததாதுவைப் பேணிப் பாதுகாத்தற் பொருட்டுக் காணிகளை வழங்கினான். அத்துடன், எதிர்காலத்திலும் அப்பூசைகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டிய முறைகளை விளக்கி "தளதாசிறித்" என்ற நூலை எழுதுவித்தான். இம் மன்னன் மூலம் பிரசித்தி பெற்ற பல பரிவெனாக்களுக்கு அரச ஆதரவு கிடைத்தது. வீதாகம ஸ்ரீ சணானந்த பிரிவென, தொட்டகமு விஜயபா பிரிவென ஆகியவற்றுக்குக் காணிகளை வழங்கி அவற்றின் பராமரிப்பை உறுதிப்படுத்தினான். இப்போது தலை நகராகியுள்ள சிறிவர்த்தனபுரம் அல்லது செங்கடகலபுரம் இவனுடைய காலத்திலேயே ஆரம்பமானது. கண்டி அஸ்கிரிய பீடம், இம்மன்னனுடைய ஆதரவுடனே கி.பி. 1312 இல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், ஜாதகட்ட கத்தாவ என்ற நூல் இந்த மன்னனின் உதவியைக் கொண்டு "பன்சிய பணஸ் ஜாதகய" (ஐந்நூற்றைம்பது ஜாதகக் கதைகள்) எனச் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. தளதா சிறித், சிங்கள போதிவங்ச, அனாகத வங்ச முதலிய நூல்கள் இம்மன்னன் காலத்திலேயே எழுதப்பட்டன. இந்த மன்னனுடைய ஆதாரவைப் பெற்றுப் புத்தசாசன சேவையில் ஈடுபட்ட பிரபல அறிஞர்களுள் ஸ்ரீ பராக்கிரமபாகு வில்கமுல சங்கராஜ தேரர் என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

நான்காம் பராக்கிரமபாகு கி.பி. 1325 வரை ஆட்சி செய்தான் என்று நம்பப்படுகின்றது. ஆயின் இம்மன்னனுடைய முடிவு பற்றி உறுதியான தகவல்கள் எதுவும் கிடைத்தில. இவனுடைய இறுதிக் காலத்தில், குருணாகல் நகரில் ஒரு குழப்பம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. அரச பரம்பரை மீண்டும் கி.பி. 1341இல் கம்பளை அரசனான நான்காம் புவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னேகபாகுவுடனேயே ஆரம்பிக்கின்றது. நான்காம் பராக்கிரமபாகுவுக்கும் நான்காம் புவனேகபாகுவுக்கும் இடைப்பட்ட 15 ஆண்டு காலத்தில் வன்னி புவனேகபாகு, சவுலு விஜபபாகு என்ற இரு அரசர்கள் குறிப்பிடப்படுகின்றனர். ஆயின் இவர்கள் பற்றிய முக்கியமான தகவல் எதுவும் கிடைத்திலது.

**கம்பளை இராச்சியம்**

குருணாகலிலிருந்து இராச்சியம் கம்பளைக்கு மாற்றப்பட்டமைக்குரிய காரணம் யாதெனத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாதிருக்கின்றது. நான்காம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் குருணாகல் நகரில் ஏற்பட்ட ஒரு குழப்பம் காரணமாகப் பிக்குகளும் பொது மக்களும் நகரைவிட்டு மலை நாடு நோக்கிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. எனவே இதனையடுத்து 15 ஆண்டு காலம் குருணாகல் பாதுகாப்பற்ற இடமாக இருந்தமையினால் கம்பளை தெரிந்தெடுக்கப்பட்டதெனச் சிந்திக்க இடமுண்டு. கம்பளை, தலை நகராவதற்கு முன்னர் ஓர் உப நகராக இருந்தது. பல மலைகளாற் சூழப்பட்ட சமவெளியில் அமைந்துள்ள இப்பகுதியைச் சுற்றி மகாவலி கங்கை ஓடுகின்றது. பாதுகாப்புடையது; மலய தேசத்து மத்தியில் அமைதுள்ளது; சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையில் இருக்கின்றது என்ற காரணங்கள் குறித்து மிகப் பழைய காலத்திலிருந்தே கம்பளை ஒரு பிரசித்திபெற்ற இடமாக இருந்து வருகின்றது.

நான்காம் புவனேகபாகு கி.பி. 1341 முதல் கம்பளையை ஆட்சி செய்து வருகையில் அவனுடைய சகோதரனான ஐந்தாம் பராக்கிரமபாகு கி.பி. 1344 முதல் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த ததிகமையிலிருந்து ஆட்சி செய்தான் என்று தெரியவருகின்றது. மேலும் இக்காலப்பகுதியளவில், அழகேஸ்வரர் என்ற பிரபுக்கள் பரம்பரையொன்று களுத்துறை மாவட்டத்து இறைகமவில் வலுப் பெற்று இருந்ததாகத் தெரிகின்றது.

நான்காம் புவனேகபாகுவின் காலத்திற் கண்டிக்கு அண்மையில் லங்காதிலக விகாரை என்பதும் கடலாதனி விகாரை என்பதும் கட்டப்பட்டன. இம்மன்னனுடைய அனுசரணையுடன் முதலமைச்சன் சேனாலங்காதிகாரவின் ஆதரவில் கம்பளையில் புத்த குருபீடம் புனரமைக்கப்பட்டது.

புவனேகபாகு மன்னன் திறிசிங்களாதீஸ்வர, அதாவது மும்மாகாண அதிபதி (வட, மத்திய, தென் மாகாணங்கள்) என்று குறிப்பிடப்பட்டானாயினும் அப்போது வட இலங்கை இவனுடைய ஆதிக்கத்தில் இருந்ததாகத் தோன்றவில்லை. யாழ்ப்பாணத்தைத் தலை நகராகக் கொண்டு, ஆரியச் சக்கரவர்த்திகள் என்று குறிப்பிடப்பட்ட ஒரு அரச குடும்பத்தினர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஓர் இராச்சியம் வளர்ந்து வந்தது.

கி.பி. 1358 ஆம் ஆண்டளவில் கம்பளைச்சிங்காசனத்தின்பொருட்டு ஒரு கலகம் உண்டானது. விக்கிரமபாகு என்ற இளவரசன் ஒருவன், நிஸ்ஸங்க ஆழகக்கோனார் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சன் ஒருவனுடைய உதவியுடன் நான்காம் புவனேகபாகுவுக்கும் ஐந்தாம் பராக்கிரமபாகுவுக்கும் எதிராகக் கலகஞ் செய்து அவர்களைத் துரத்திவிட்டுக் கி.பி. 1358 இல் மூன்றாம் பராக்கிரமபாகு என்ற பெயருடன் அரசனானான். இக்கலகத்தின் போது, மூன்றாம் பராக்கிரமபாகு வட இலங்கையின் தமிழ் அரசனுடைய உதவியைப் பெற்றிருந்தான். இந்த உதவிக்குக் கைம்மாறாகக் கம்பளையைச் சூழ்ந்த சில பகுதிகள் வட இலங்கை அரசனுக்கு வழங்கப்பட்டன. இதன் பின்னர் கம்பளை இராச்சியத்தின் அரசியல் விவகாரங்கள் பிரபுராச அழகக்கோனார் என்பவனால் நெறிப் படுத்தப்பட்டன. இவன் விக்கிரமபாகு மன்னனுக்கும் அவனுக்குப் பின்னர் கி.பி. 1374 இல் அரசனான ஐந்தாம் புவனேகபாகுவுக்கும் அமைச்சனாக இருந்தவனாவான். அரசியல் துறையில் இவன் அரசனைவிட முக்கியமான நிலையில் இருந்தான்.

இக்காலத்திலே, யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரியச் சக்கரவர்த்தி என்ற அரசன் மிக்க பலமுடையவனானான். இவன் இலங்கையின் மேற்குக் கடற்கரையை அண்டிய பகுதியில் நடைபெற்ற வளமான வியாபாரம் மூலம் கிடைத்த வருவாயிற் கண்ணோட்டம் செலுத்தினான். மன்னாரிலிருந்து பாணந்துறை வரை இருந்த ஓடத்துறைகளிலே வரி அறவிடும் உரிமை இவனுக்கு இருந்தது. இந்த வேளையில் கம்பளை அரசனும் அவனுக்குப் பக்கபலமாக இருந்த நிஸ்ஸங்க அழகக்கோனாரும் மேற்குக் கரையோர ஓடத்துறைகளை அண்டி நடந்த இந்த வியாபாரத்தில் அக்கறை கொண்டனர். இவ்வாறு ஆரியச் சக்கரவர்த்தியின் சவாலை எதிர்நோக்கும் பொருட்டும் மேற்குக் கரையோர ஓடத்துறைகளை அண்டி நடைபெற்ற வியாபாரத்தில் ஆதிக்கஞ் செலுத்துவதன் பொருட்டும் ஏற்ற பாதுகாப்புடைய ஒரு நிலையம் பற்றி முதலமைச்சன் கவனஞ் செலுத்தினான். கம்பளை இதற்கு ஏற்ற ஓர் இடமாக அமைந்திருக்கவில்லை. எனவே, மூன்று பக்கங்களிலும் தியவன்னா ஓயவினாலும் சதுப்பு நிலத்தினாலும் சூழப்பட்ட கோட்டேயைப் பாதுகாப்புடைய இடமெனக் கருதி அங்கே இவன் ஒரு பாதுகாப்பு அரணை அமைத்தான். அதன் பின்னர் இவன், மேற்குக்கரை ஓடத்துறைகளில் இருந்த ஆரியச்சக்கரவர்த்தியின் வரி வசூலிப்போரை கொன்றுவிட்டு அந்த ஓடத்துறைகளைத் தனது ஆதிகத்தின் கீழ்க் கொண்டு வந்தான். இதனால் கோபமடைந்த ஆரியச் சக்கரவர்த்தி மாத்தளைக் கூடாகத் தரைமார்க்கமாகக் கம்பளைக்கு ஒரு படையினையும் கடல் மார்க்கமாக மற்றுமொரு படையினையும் ஒரே நேரத்தில் அனுப்பிவைத்தான். மாத்தளைக்கூடாகத் தரைமார்க்கம் சென்ற படை மலை நாட்டுப் படையினரால் துரத்தியடிக்கப்பட்டது. கடல்மார்க்கம் சென்ற படை அழகக்கோனாரால் தோற்கடிக்கப்பட்டது. அதன் பின்னர் கம்பளையிலிருந்த ஐந்தாம் புவனேகபாகு கோட்டே நகருக்குச் சென்றான்.

கம்பளை இராச்சியக் காலம் இலங்கையின் புத்த மதபீடத்தின் அபிவிருத்தியைப் பொறுத் மட்டில் முக்கியமானதாகும். இக்காலத்தில் புத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதபீடச் சீர்திருத்தம் இரு முறை நடத்தப்பட்டுப் புத்த மதபீடம் ஒழுங்கமைக்கப்பட்டது. பிரபல கடலாதெனி விகாரை, லங்காதிலக விகாரை, கம்பக்கே தேவாலயம் முதலிய முக்கியமான பல தலங்கள் இக்காலத்திலே தோன்றின. வில்கம்முல தேரர், தேவனகல வனரத்ன தேரர், சீலவங்ச தர்ம கீர்த்தி தேரர், ஜய பாகு தேவரக்கித தேரர் ஆகிய நான்கு சங்கராசர்கள் இக்காலத்தில் வாழ்ந்தார்கள். மயுற் சந்தேஷ, திசற கந்தேஷ, விமுக்தி சங்கிறகய, எலு அத்தநகலுவங்ஷ, சத்தர்மாலங்காரய, நிகாய சங்கிறகய ஆகியன இக்காலத்துக்குரிய முக்கியமான சிங்கள நூல்களாகும்.

## கோட்டே இராச்சியம்

கம்பளை அரச பரம்பரையின் இறுதி மன்னனான புவனேகபாகு, கம்பளையைத் தாக்குவதற்கு ஆரியச் சக்கரவர்த்தி மேற்கொண்ட முயற்சி காரணமாகக் கோட்டே பாதுகாப்பு அரணை அமைத்தான் என மேலே கற்றோம். ஆயினும், கோட்டே பாதுகாப்பு அரணை ஜயவர்த்தனபுரம் என்ற பெயருடன் தலைநகராக்கிக் கொண்டு கி.பி. 1415 முதல் ஆட்சி செய்த ஆறாம் பராக்கிரமபாகுவே கோட்டே இராச்சியத்தின் முதலாவது மன்னனாகக்கருதப்படுகின்றான். ஆறாம் பராக்கிரமபாகு கம்பளை அரச குடும்பத்துடன் நேரான உறவு கொண்டிருந்த ஒருவனல்லன். இவனுடைய ஆரம்ப காலம் பற்றிய தகவல் எதுவும் கிடைத்திலது.

தம்பதெனிய இரண்டாம் பராக்கிரமபாகுவுக்குப் பின்னர் முதல் முறையாக நாட்டை ஒன்றுபடுத்தி நாடு முழுவதற்கும் ஆறாம் பராக்கிரமபாகு அரசனானான். இலங்கையின் வரலாற்றிலே, இம்மன்னனுடைய ஆட்சிக் காலமே இறுதியாகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய காலமாகக் கருதப்படுகின்றது. வன்னிப்பகுதி, யாழ்ப்பாண இராச்சியம் ஆகியன கைப்பற்றப்பட்டமையும் மலாய நாட்டில் உண்டான ஒரு கலகம் முறியடிக்கப்பட்டமையும் ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இடம் பெற்ற முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

இக்காலத்திலே காடுகளாக இருந்த உலர்வலயப் பகுதிகளிலே, அதாவது வன்னிப்பகுதிகளிலே பலம் பெற்றுச் சுதந்திரமாக அங்குமிங்குமிருந்த வன்னித் தலைவர்கள் ஆறாம் பராக்கிரமபாகுவினால் மடக்கப்பட்டனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கு அவனுடைய வளர்ப்பு மகனான சப்புமல் குமாரனை அனுப்பினான். அவன் யாழ்ப்பாண அரசனைத் தோற்கடித்து, யாழ்ப்பாணத்தையும் ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். இலங்கையிலிருந்து கறுவா முதலிய வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் சென்ற ஒரு கப்பல் தென் இந்தியாவின் விஜய நகரில் மளவராயன் என்ற அரசனால் கைப்பற்றப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பராக்கிரமபாகு விஜயநகர் இராச்சியத்தின் ஒடத்துறையைத் தாக்கினான். இவனுடைய ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் மலைநாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோதிய என்ற தலைவனை ஒருவனை கோட்டே மன்னனுக்கு ஆண்டுதோறும் செலுத்தி வந்த கப்பப் பணத்தைச் செலுத்தாது கலகஞ்செய்தான். அப்போது இம்மன்னன், அம்புலுகலை இளவரசனை அனுப்பி இந்தக்கலகத்தை அடக்குவித்தான்.

இப்படியாக நாடு முழுவதையும் ஒன்று படுத்திய ஆறாம் பராக்கிரமபாகு நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டுப் பல சேவைகள் செய்தான். இக்காலத்தில் புத்த சமயமும் சிங்கள இலக்கியமும் புத்துயிர் பெற்றன. இம்மன்னன், அவனுடைய தாயாகிய சுனேத்திரா தேவியின் ஞாபகமாகப் பப்பிலியானையில் சுனேத்திராதேவி பிரிவெனாவைக் கட்டுவித்து அதன் பராமரிப்பின் பொருட்டுப் பல கிராமங்களை வழங்கினான். இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் இரத்தினபுரியிற் கட்டப்பட்ட சமன் தேவாலயம் இம்மன்னனால் புனரமைக்கப்பட்டது.

மேலும், இம்மன்னனுடைய ஆதரவில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலே, இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த கல்விப் பீடங்கள் பல அபிவிருத்தியடைந்தன. வீதாகம ஸ்ரீ சுனாந்த பிரிவென, குருணாகல் பத்மாவதீ பிரிவென, தொட்டுகமுவ விஜயபாகு பிரிவென, தெவிநுவர இறுகல் குலதிலக்க பிரிவென, பப்பிலியானை சுனேத்திராதேவி பிரிவென என்பன இவற்றுள் சிலவாகும். இந்தக் கல்விப் பீடங்களிலே தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர், வீதகம மைத்திரி தேரர், காறகல வனரத்ன தேரர் முதலிய புகழ் பெற்ற பல அறிஞர் அறிவியற் சேவையில் ஈடுபட்டிருந்தனர். ஆறாம் பராக்கிரம பாகுவுமே ஒரு சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தான்.

இலக்கியத்துறையை நோக்கும்போது, இக் கலாத்திலே ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன எனலாம். இலக்கியத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாகக் கோட்டே காலப் பகுதி, சிங்கள இலக்கியத்தின் பொற்காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இக்காலத்தில் எழுதப்பட்ட முக்கியமான சிங்கள நூல்களுள் பறவி சந்தேஷய, சலலிஹிணி சந்தேஷய, கோகில சந்தேஷய, கிரா சந்தேஷய, ஹங்ச சந்தேஷய, குத்திலய, காவிய சேகர, புதுகுண அலங்காரய, லோவட சங்கறாவ, பரக்கும்பா சிறித் ஆகிய காவிய நூல்களும் சத்தர்ம ரத்னாகறய முதலிய உரைநடை நூல்களும் அடங்கும்.

இக்காலத்திலே இந்து மதமும் வளர்ச்சி பெற்று விளங்கியது. கோட்டே தலைநகருக்கு அருகில் ஒரு சிவன் கோவிலும், கதிர்காமத்தில் ஒரு கோவிலும் இருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆறாம் பரக்கிரமபாகு மன்னனுக்குத் தமிழ் இனத்தைச் சேர்ந்த உறவினரும் இருந்தனர் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. இவனுடைய மகள் உலகுடைய தேவி அல்லது லோகநாதா என்று குறிப்பிடப்படுகின்றான். சம்புமல் இளவரசனெனப் புகழ்பெற்ற இவனுடைய வளர்ப்பு மகன், சம்பகபெருமாள் அல்லது செம்பகப் பெருமாள் எனக் குறிப்பிடப்படுகின்றான். இவனுடைய மகள் இவனுடைய அமைச்சனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நன்னூர் துனையன் எனும் தமிழினத்தைச் சேர்ந்தவனை மணந்தாள்.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் கி.பி. 1467 இல் மரணமடைந்தான். அதனையடுத்துக் கோட்டே சிங்காசனம் பற்றிப் பிணக்குகள் உண்டாயின. இரண்டாம் ஜயபாகு மீண்டும் மன்னனானான். அப்போது சப்புமல் இளவரசன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன் விரைந்து வந்து ஜயபாகுவைக் கொன்றுவிட்டு ஆறாம் புவனேகபாகு என்ற பெயருடன் அரசனானான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, யாழ்ப்பாண இராச்சியம் கோட்டே மன்னனுடைய பிடியிலிருந்து விலகி மீண்டும் சுதந்திரமானது.

ஆறாம் புவனேகபாகுவுக்குப் பின்னர் அவனுடைய மகன் ஏழாம் பராக்கிரமபாகு என்ற பெயருடன் அரசனானான். ஆயினும், ஏழு கோறளைகளையும் ஆட்சி செய்து கொண்டிருந்த இவனைக் கொன்றுவிட்டு, எட்டாம் பராக்கிரமபாகு அல்லது வீர பராக்கிரபமாகு (1484-1509) என்ற பெயருடன் அம்புலுகலை இளவரசன் அரசனானான். இந்த அரசியற் குழப்பநிலை காரணமாக மலைநாட்டுப் பகுதியும் கோட்டே இராச்சியத்தின் பிடியிலிருந்து விலகிச் சுதந்திரமான ஒரு இராச்சியமானது. இங்ஙனம் 1505 இல் போர்த்துக்கேயர் வந்தபோது எமது நாடு கோட்டே, யாழ்ப்பாணம், மலைநாடு என்று மூன்று சுதந்திர இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

## பயிற்சி

1. நாகரிகம் தென்மேற்குத் திசை நோக்கி இடம் பெயர்ந்தமைக்குரிய காரணங்கள் யாவை?

2. இரண்டாம் பராக்கிரமபாகு நாட்டை ஒன்றுபடுத்துவதிலே எதிர்நோக்கிய பிரச்சினைகள் யாவை?

3. சிறு குறிப்புகள் எழுதுக:-
   அ. யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்தி
   ஆ. நிஸ்ஸங்க ஆழகக்கோனார்
   இ. சப்புமல் குமாரன்.

4. கோட்டே இராச்சியம் தோன்றுவதற்கு வழிவகுத்த காரணங்களை விளக்குக

3. ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்து முக்கியமான (அ) கல்வி நிலையங்கள் (ஆ) அறிஞர்கள் (இ) இலக்கியப் படைப்புக்கள் ஆகிய இத்தலைப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் மும் மூன்று உதாரணங்கள் தருக.

6. இலங்கைப் படமொன்றில் பின்வரும் இடங்களைக் குறித்துப்பெயரிடுக:- அனுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனிய, யாப்பகுவ, குருணாகல், கம்பளை, கண்டி, கோட்டே, யாழ்ப்பாணம், இறைகமம், மினிப்பே, மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 7

# அரசியல் தாபனங்களும் சமூகத் தாபனங்களும்

## சமூக முறைமை

இந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் இடம் பெயர்ந்து இங்கு வந்த ஆரியக் குழுவினர் ஆரம்பத்தில் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிற் குடியேற்றங்களை அமைத்து வாழ்ந்து வத்தனரென மேலே கற்றுள்ளோம். வரலாற்றுக் கதைகளிலே இக்குடியேற்றங்கள் கிராமம், நகரம், குடியேற்றம் முதலிய பெயர்களாற் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மகாகம எனப்பட்டது பெரியதாகவும் முக்கியமானதாகவும் இருந்துள்ளது.

இலங்கைக்கு வந்த ஆரியர்கள் அவர்கள் முன்னர் வாழ்ந்த நாட்டுப் பழக்க வழக்கங்களை மாத்திரமன்றிச் சில சமூகத் தாபனங்களையும் இங்கு அறிமுகஞ் செய்து வைத்தனர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அப்பழக்க வழக்கங்களும் சமூகத்தாபனங்களும் அப்போது இங்கு காணப்பட்ட சமூகத் தாபனங்களுடன் இணைந்து கொண்டனவேயன்றி அவை இந்தியாவில் இயங்கிய அதே உருவில் இங்கே செயற்படவில்லை. கட்டுக்கோப்புடைய ஒரு வாழ்க்கை முறைக்கு வழி வகுத்த புத்த மதம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டளவில் இங்கு வேரூன்றியமையே இதற்குரிய முக்கிய காரணமாகும்.

இந்திய சமூக அமைப்பு முக்கியமான நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது. சத்திரியர், பிராமணர், வைசிகர், சூத்திரர் என்போரே அந்த நான்கு பிரிவுகளையும் சார்ந்தோராவர். சத்திரியர் நாட்டை ஆண்டு வந்தனர். பிராமணர் கல்வித் துறையிலும் சமயத்துறையிலும் ஈடுபட்டு வந்தனர். வைசிகர் எனப் பட்டோர் விவசாயத்திலும் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். சூத்திரர், இழிவாக மதிக்கப்பட்டதொழில்கள் புரிந்தனர். இந்தியாவிலிருந்த இந்தச் சமூக முறைமை இங்கே சற்று வேறுபட்டு இயங்கி வந்ததாகத் தோன்றுகின்றது. சத்திரியர், பிராமணர், வைசிகர் என்ற பிரிவினர்கள் பற்றிய தகவல்கள் பண்டுகாபயன் ஆட்சிக் காலத்திலிருந்தும் கிடைத்துள்ளன. அக்காலத்திலே, மலசலகூடச் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்து வந்த சண்டாளர் எனப்பட்டோர் சூத்திரரை ஒத்த வகுப்பினராக இருத்தனர். ஆயினும் புத்த மதம் இங்கு கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து இந்த முறை வேறுபட்ட ஓர் ஒழுங்கின்படி இருந்து வந்ததாகத் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மகா போதிக் கிளை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டமை பற்றிக் கூறும் மகாவமிசம், அதன் பராமரிப்பின் பொருட்டு அசோக மன்னனால் அனுப்பிவைக்கப்பட்ட பல குலத்தவர் அல்லது சிற்பர் பற்றியும் கூறுகின்றது. அவர்களுள் அசோக மன்னனுடைய பட்டத்து இராணி வேதீசாவினுடைய உறவினரும், நெசவாளர், குயவர், ஓவியர் முதலிய 18 வகுப்புகளைச் சேர்ந்த மக்களும் வந்தனரெனக் கூறப்படுகின்றது. மிகப் பழைய கல்வெட்டுகளிற் போலவே பிற்பட்ட காலத்துக்குரிய பல நூல்களிலும் தொழிலின் அடிப்படையிற் பிரிக்கப்பட்ட வகுப்பினர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. குயவர், நெசவாளர், செங்கட்டி செய்வோர், கம்மாளர், சோதிடர், ஓவியர், இரத்தினக்கற் பட்டந் தீட்டுவோர் ஆகியோர் பற்றி மாத்திரமன்றி மரம், யானைத்தந்தம் ஆகியவற்றிலே சித்திரம் செதுக்குவோர் பற்றிய குறிப்புகளுமுள.

ஆரம்ப காலத்திலிருந்தே பிராமணர் இங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள். அரசனுடைய புரோகிதர்களாகவும் வைத்தியர்களாகவும் இருந்த பிராமணர் பற்றி ஏடுகளிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உபதிஸ்ஸ என்ற பிராமணன் விஜயனுடைய புரோகிதனாக இருந்தான். அவன் கல்வித்துறையிலும் ஈடுபட்டிருந்தான். பண்டுவ என்ற பிராமணனிடமிருந்து பண்டுகாபயன் சிற்பக்கலைகள்கற்றான். இவனுடைய குருவினுடைய சந்திரன் என்ற மகனே இவனுக்குப் புரோகிதனாக இருந்தான். எனினும் போர்வேலைகளில் ஈடுபட்டிருந்த பிராமணர் பற்றியும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பிராமணர் பற்றியும் அனுராதபுரக் காலத்துக்குரிய தகவல்கள் கிடைத்துள்ளன. வலகம்பா மன்னனுக்கு எதிராகக் கலகஞ் செய்த திஸ்ஸ இப்படியான ஒரு பிராமணனாவான்.

ஆரம்ப காலத்தில் இந்த நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் பற்றிக் குறிப்பிடும்போது 'சத்திரிய' என்ற சொல் வரலாற்றுக் கதைகளிலே கையாளப்பட்டுள்ளது. கல்வெட்டுகளிலே 'இராசா', 'மகா இராசா' என்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அனுராதபுர காலத்திலே மௌரிய, லம்பகறண எனும் இரண்டு பிரதான அரச குடும்பங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வைசிகர் எனப்பட்ட குழுவினரும் பழைய காலத்தில் இங்கே வசித்துள்ளார்கள். தேவானம்பிய திஸ்ஸனுடைய காலத்தில் ஐந்நூறுவைசிகர் குருத்துவம் பூண்டு வெஸ்ஸ கிரியில் வசித்தனர்.

சூத்திரர் எனப்பட்டோர் எமது நாட்டுச் சமுதாயத்திலே காணப்படவில்லை. ஆயினும், நகரத்துக் குப்பை கூழங்களை அகற்றுதல், பிணங்களை அடக்கஞ் செய்தல் போன்ற கருமங்களைச் செய்தோர் பற்றிய தகவல்கள் பண்டுகாபயன் ஆட்சிக் காலத்திலிருந்து கிடைத்துள்ளன. இவர்களுக்கென நீச்சசுசான (இழிந்தோர் இடுகாடு) எப்னபட்ட சுடுகாடு அமைக்கப்பட்டிருந்தது. துட்டுகைமுனு காலத்திலுமே இங்கு குறிப்பிடப்பட்ட சண்டாளச் சாதியினர் இருந்தனரெனவும், இக்குலத்தைச் சேர்ந்த அசோகமாலா என்ற அழகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் காதலித்தமையினால் துட்டுகை முனுவினுடைய மகன் சாலிய இளவரசன் சிங்காசன உரிமையை இழந்தான் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு நோக்குமிடத்து அனுராதபுர காலத்தின் முற்பகுதியிலே சத்திரியர், பிராமணர், வைசிகர், சண்டாளர் என நான்கு பிரிவினர் இருந்தனர் என்பது தெளிவு. ஆயினும் புத்த மதம் கொண்டுவரப்பட்ட பின்னர் சத்திரியர், பிராமணர், வைசிகர், சண்டாளர் எனப் பட்ட பிரிவுகளைச் சேர்ந்த எல்லா மக்களையும் உபாசக (பக்தியுடையவன்) உபாசிக்கா (பக்தியுடையவள்) எனக் குறிப்பிடும் வழக்கம் ஆரம்பித்தது. அத்துடன் இவர்களுள் துறவறம் பூண்டவர்கள் பிக்குகள், பிக்குணிகள் என்று அழைக்கப்பட்டனர். இதன்படி அனுராதபுர காலத்தில் பிக்கு, பிக்குணி, உபாசக, உபாசிக்கா எனப்பட்ட நான்கு பிரதான பிரிவுகளாகவே இலங்கை மக்கள் வகுக்கப்பட்டிருந்தனரெனலாம்.

### சாதி முறை வளர்ந்தமை

சமுதாயத்தின் இந்த எளிமையான தன்மை, அனுராதபுர காலத்தின் பிற்பகுதியளவில் மாற்றமடைந்தது. அக்காலத்தில் தென் இந்தியாவுடன் இருந்த நெருங்கிய உறவு காரணமாக அங்கு இந்து மக்கள் மத்தியில் நிலவிய சாதி முறை எமது நாட்டுச் சமுதாயத்திற் செல்வாக்குச் செலுத்தியது. பொலன்னறுவைக் காலத்தின் ஆரம்பத்திலிருந்து இந்நாட்டுச் சமுதாயத்திலே முக்கியமான மூன்று படிகள் காணப்பட்டன. அசர குடும்பங்களைச் சேர்ந்தோர், அமைச்சர்கள், பிராமணர் முதலிய நிலவுரிமை கொண்டிருந்த வகுப்பினர் முதலாவது படியைச் சேர்ந்திருந்தனர். இந்த வகுப்பினர் பொதுவில் குலத்தவர், மகா குலத்தவர் என்ற பெயர்களினால் குறிப்பிடப்பட்டனர். விவசாயம் உட்படப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தோர் இரண்டாவது படியைச் சேர்ந்திருந்தனர். மூன்றாவது படியில், குறைந்தனவாகக் கருதப்பட்ட சிற்சில சேவைகளைச் செய்துவந்த சண்டாளர் எனப்பட்டோர் இருந்தனர். முதலாம் விஜயபாகு மன்னனுடைய காலத்திலே, சிவனொளிபாத மலை மண்டபத்தில், இவர்களைப் போன்ற குறைந்த தொழிலாற்றிய மக்களுக்கெனப் புறம்பான ஒரு மண்டபம் கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

### பெண்களின் அந்தஸ்து

சமூக அமைப்புப் பற்றி ஆராயும் போது, பழைய காலத்துப் பெண்களுடைய அந்தஸ்துப் பற்றியும் ஆராய்வது முக்கியமாகும். பிதாவை குடும்பத் தலைவனாகக் கொண்ட சமூக முறை நிலவியதெனினும் பெண்கள் தாழ்ந்த நிலையில் வைக்கப்படவில்லை. பெண்களுக்குச் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற பௌத்த மதப் போதனையே இதற்குரிய முக்கியமான காரணமாகும். மிகப் பழைய ஏடுகளிலே, பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு தராதரங்களில் இருந்த பெண்கள் பற்றியும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த பெண்கள் பற்றியும் தகவல்கள் கிடைக்கின்றன. மிகப் பழைய காலத்திலே ஒரு பெண்ணை, இன்னாருடைய மனைவி, இன்னாருருடைய சகோதரி என்று குறிப்பிடும் சிறப்பு முறை ஒன்று வழக்கிலிருந்தது. தனியே பிரயாணஞ் செய்வதற்கும், சுதந்திரமாகச் சமய அனுட்டானங்ளிலே ஈடுபடுவதற்கும் மாத்திரமன்றிப் பெற்றாருடைய அனுமதியுடன் கணவனைத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்குமே பெண்களுக்குச் சுதந்திரம் இருந்தது. மேலும் உதார ஒழுக்கம் உடையவர்களாகத் திகழ்ந்த விகார மகாதேவி, சோமாதேவி போன்ற பெண்மணிகளின் சரித்திரங்கள் வீர சரித்திரங்களாகச் சமுதயாத்தினாற் போற்றப்பட்டன. சிற்சில துறைகளிலே பெண்கள் ஆண்களுடன் சம மட்டத்தில் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்களுள. அநேகமான சந்தர்ப்பங்களிலே சிங்காசனத்தில் வீற்றிருப்பதற்குமே பெண்களுக்கு வாய்ப்பு இருந்தது என்பது சீவலீ, அனுலா, கல்யாணி, லீலாவதி போன்ற இராணிகள் பற்றிய கதைகள் மூலம் தெரிய வருகின்றது.

**கிராமத்தின் தன்னிறைவுத் தன்மை**

கிராமம் புராதன இலங்கைச் சமுதாயத்தின் அடிப்படை அலகாக இருந்தது. ஒரு கிராமத்துக்குத் தேவையான பொருள்கள் அக்கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகத் தோன்றுகின்றது. விவசாயத்தின் மூலம், ஒரு கிராமத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அக் கிராமத்திலேயே உற்பத்தி செய்யப்பட்டன. உலர் முறைப் பயிர்ச் செய்கையைப் போன்றே ஈரமுறைப் பயிர்ச் செய்கையும் ஆரம்ப காலத்திலிருந்து கைக்கொள்ளப்பட்டது. கிராமத்து மக்களின் தொகை பெருகியதையடுத்து அதிக உணவுப்பொருள்கள் தேவைப்பட்டன. அப்போது வருடத்தில் ஒரு முறைமேற்கொள்ளப்பட்ட மகா போகத்தின் அறுவடை போதியதாக இருக்கவில்லை. எனவே நீரைச் சேமித்து வைத்து ஆண்டின் இன்னொரு போகத்திலும் விவசாயம் செய்யும் முறை ஆரம்பமானது. அது யல, அதாவது சிறு போகம் எனப்பட்டது. விவசாயத்தில் ஈடுபட்டோர் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கையில், விவசாய வேலைகளுக்கு வேண்டிய கத்தி, கோடரி, மண்வெட்டி, கலப்பை முதலிய உபகரணங்களைக் கிராமத்துக் கம்மாளர் வழங்கி வந்தனர். குயவர்கள் சட்டிபானைகளைச் செய்தனர். இவ்வாறாக ஒரு கிரமத்துக்குத்தேவையான பொருள்கள் அந்த அந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தோரால் வழங்கப்பட்டன. அறுவடைக்குப் பின்னர் இவர்கள் தத்தமது பொருள்களை பண்டமாற்றுச் செய்து கொண்டனர். ஒரு கிராமத்திலே உற்பத்தி செய்ய முடியாதிருந்த சில பொருள்களை வெளியிலிருந்து கொண்டுவர வேண்டிய அவரியமேற்பட்டது, இதில் வியாபாரிகள் ஈடுபட்டிருந்தனர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

பழைய கல்வெட்டுகளிலே வர்த்தகர்கள் 'வணிகர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். மாந்தோட்டம், திருக்கோணமலை, ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்கள் வர்த்தக சம்பந்தமாக முக்கியத்துவம் பெற்றிருந்தன. இப்படியான கப்பற்றுறைமுகங்களை அண்டி வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. மாந்தோட்டத்திலிருந்து வர்த்தகத்தின் பொருட்டு வெளிநாடு சென்ற 'நந்தி' என்ற வர்த்தகர் பற்றி எமது நூல்களிற் கூறப்பட்டுள்ளது. இப்படியான கப்பற்றுறைமுகங்களை அண்டி வர்த்தக வகுப்பினர் உருவாயினர். வர்த்தக வகுப்பினரின் தலைவன் பொதுவாக 'செட்டி' என்று அழைக்கப்பட்டான். உள்நாட்டு வியாபரத்துக்குப் பொருள்கள் மாட்டு வண்டிகளிலும் மிருகங்கள் மேலும் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டன. அத்துடன் நடமாடும் வியாபாரிகளும் பொருள்களைச் சுமந்து சென்றனர். பிரதான சந்தைகள் இடத்துக்கிடம் காணப்பட்டன. 10 ஆம் நூற்றாண்டுக்குரிய பதுளைத் தூடன் கல்வெட்டின்படி, மஹியங்கணையிலுள்ள சொறபொற வாவிக்கு அண்மையிலுள்ள கோபிட்டி கமவிற் பெரிய சந்தை ஒன்று இருந்ததாகத் தோன்றுகின்றது. இச்சந்தை நன்கு நிருவாகிக்கப்பட்டு வந்ததாகவும் அதனைஅண்டிய பகுதிகளிலே உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருள்களும் ஏனைய பல பொருள்களும் அங்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. இந்தச் சந்தையின் நிறுத்தல், அளவை முறைகள், வரிமுறை ஆகியன மிகவும் விரிவாக இந்தக் கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ஆரம்ப காலதில், தன்னிறைவுடைய கிராமங்களிலே பண்ட மாற்றுமுறை இருந்ததென மேலே கற்றுள்ளோம். ஆயினும் காலப் போக்கிலே வர்த்தகத்திற் பணம் புழக்கத்துக்கு வந்தது. சிங்களத்திற் ககவுண், மசுறங் எனப்பட்ட நாணயங்களும் பல்வேறு தரப் பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோக நாணயங்களும் புழக்கத்திலிருந்தன. மேலும், வெவ்வெறு நிறைகளிலான பல உலோகத் துண்டுகளும் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றுள் கலங், சுக, மஸ்ஸ, பலம என்ற பண அலகுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பொலன்னறுவைக் காலத்திலிருந்து மன்னர்களுடைய பெயர் பொறிக்கப்பட்ட உலோக நாணயங்கள் புழக்கத்திலிருந்துள்ளன.

# அரசியல் அமைப்பு

## மத்திய நிருவாகம்

விஜயன் முதலான வட இந்தியக் குழுக்கள் வருவதற்கு முன்னருமே குவேனி போன்ற சுதேச தலைவர்களால் கொண்டு நடத்தப்பட்ட அரசியல் அமைப்புகள் இந்த நாட்டில் இருந்தவெனக் கருதுவதற்கு இடமுண்டு. வட இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்தவர்கள் இந்திய நிருவாக உத்திகளை இங்கே அறிமுகஞ் செய்து வைத்தனரென்பதில் ஐயமில்லை. பின்னர் தேவாநம்பிய திஸ்ஸன் காலத்தில் மௌரியர்களுடைய ஆட்சி முறைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு புகுத்தப்பட்டன. அது முதல் இந்தப் பல்வேறு நிருவாக உத்திகளும் ஒன்றிணைந்து உருவான நிருவாக அமைப்பு ஒன்று இலங்கையில் வளர்ந்து வந்துள்ளது. இந்த நிருவாக அமைப்பின் தலைவனாக அரசன் இருந்தான்.

## அரசன்

ஆரம்ப காலத்திலே அரசன் 'இராசா', 'மகாராசா' என்ற பதங்களினாற் குறிப்பிடப்பட்டான். அரசன், மக்கள் முன்னிலையில் முடி சூட்டப்பட வேண்டியவனாக இருந்தான். முடி சூட்டிவிழா கோலாகலமாக நடத்தப்பட்டது. இந்த விழாவின்போது அரச குலத்துக்கு ஏற்ற ஓர் இளவரசி பட்டத்து இராணியாக்கப்படுவாள். இந்த விழா, அசோகச் சக்கரவர்த்தி தேவாநம்பிய திஸ்ஸனுக்குக் காட்டி வைத்த மகிடாபிஷேக முறையை அடிப்படையாகக் கொண்டு உருவாகி வளர்ந்ததாகும். இந்த விழாவின் போது மன்னன், நாட்டுமக்கள் அனைவருக்கும் பாதுகாப்பளிப்பதாக உறுதி கூறுவான். இதற்கேற்ப, பிற்காலங்களிலே, மன்னன், சமுதாயத்தில் அமைதியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்குரியவன் என்ற முறையில், நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதும், அவர்களுடைய முன்னேற்றத்துக்கு வேண்டிய நீர்ப்பாசனத் திட்டங்கள் முதலியவற்றை ஒழுங்கு செய்து வழங்குதலும், அவர்களுடைய ஆத்மீக வாழ்க்கைக்கு வேண்டிய சமய, கலாசாரக்கருமங்களை விருத்தி செய்தலும் அரசனைச் சார்ந்த கடமைகளாகக் கருதப்பட்டன. இதனாலேயே மகாவமிசத்தில் ஒவ்வொரு அரசனையும் பற்றிக் கூறும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும், விவசாயத்தை ஊக்குவித்தற் பொருட்டுக் கட்டிய குளங்கள், கால்வாய்கள் ஆகியன பற்றியும் பௌத்த மதத்தின் மேம்பாட்டின் பொருட்டும் மக்களுடைய நல்வாழ்வின் பொருட்டும் ஆற்றிய சேவைள் பற்றியும் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டுத் தலைவனாக அரசன் இருந்தானாயினும் சர்வாதிகாரியான முறையிலே அவன் செயற்படுவதற்கு இடமிருக்கவில்லை. குறிப்பாக, நாட்டின் சமயத்துறை ஆலோசகர்களான பிக்குகள், புரோகிதர், அமைச்சர்கள் ஆகியோரின் கருத்துக்களுக்கு அரசன் செவிசாய்க்க வேண்டி இருந்தது. அவ்வாறின்றி அரசன் தன் எண்ணப்படி நடந்கொண்ட சந்தர்ப்பங்களிலே அவனுக்கு எதிராகக் கலகங்கள் உண்டாயின. மேலும், பழைய மரபுகளுக்கு, அதாவது முந்திய கால அரசர்கள் கைக்கொண்ட சட்டதிட்டங்களுக்கு ஏற்பவே அரசன் செயற்பட வேண்டியிருந்தது. மேலும், பௌத்த மதம் கூறும் பத்து அரசதர்மங்கள் பற்றியும் அரசன் விழிப்பாக இருக்கவேண்டியிருந்தது. இதனால் நாட்டை ஆட்சிசெய்த அரசன் தர்மராசனென மக்களால் மதிக்கப்பட்டான்.

அனுராபுரக்காலதின் பிற்பகுதியளவில் அரசன் ஒரு செல்வந்தன் என்ற கருத்து உண்டானது. அதன் பின்னர் பொலன்னறுவைக் காலப்பகுதியளவில், அரசன் எனப்பட்டவன், மனித வேடத்திலுள்ள ஒரு தேவன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தை ஏற்படுத்துவதற்கு நிஸ்ஸங் கமல்லன் போன்ற சில மன்னர்கள் முயற்சித்தார்களென அவர்களுடைய கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின் றது.

### ஆட்சி உரிமை

சிற்சில சந்தர்ப்பங்கள் தவிர, ஆட்சி உரிமையானது சாதாரண மாகச் சகோதரனிடமிருந்து சகோ தரனுக்கு வழங்கப்பட்டது. இந்த வழக்கம் அனுராதபுர காலத்தி லிருந்தே கைக்கொள்ளப்பட்டு வந்துள் ளது. இளைய சகோதரனுக்குப் பின் னர் மூத்த சகோதரனுடைய மகனு க்கு ஆட்சி உரிமை வழங்கப்பட்டது. முடிசூட்டு விழாவின் போதே பட்ட த்து இராணியுந் தெரிந்தெடுக்கப்பட் டாள். அத்துடன், அரசனுடைய சகோதரர்களுக்கு எப்பா, மாப்ப என்ற பதவிகள் வழங்கப்பட்டன. இளைய சகோதரர்கள் றுகுணு ரட்டை, மலாய ரட்டை ஆகிய வற்றுக்கு எப்பாக்களாக நியமிக்கப் பட்டார்கள். அரசன் இறக்க நேர்ந் தால் மாப்பா சிங்காசனமேறுவான். அப்போது றுகுணுரட்டையின் எப்பா அந்த மப்பா பதவிக்கு நியமிக்கப்படு வான். அனுராதபுர காலத்தின் பிற்பகுதியிலிருந்து ஒவ்வொரு அரச னும் எப்பா, மாப்பா பதவிகளை முறையே வகுத்து அரசனாகும் ஒழுங் கைக் கடைப்பிடித்தான் என்பதி லிருந்து இந்த வழக்கம் எவ்வளவுக்கு வலுவுற்றிருந்ததென்பது தெளிவா கும். மேலும் தாம் உபய குலத்து உயர்ந்தோர் எனவும் இவர்கள் தம் மைக் கூறிக் கொண்டார்கள். இவர் கள், சட்டப்படி முடிசூட்டப்பட்ட அரசனுக்கும் அரசிக்கும் பிறந்த பிள் ளைகள் என்பதே இதன் பொருளா கும். இவ்வாறு சட்டப்படியான இள வரசன் ஒருவனுக்கே அரசுரிமை வழங் கப்பட வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழக்காக இருந் தது.

### அரச அலுவலர்

அரசன், மாப்பா, எப்பா என்ற பதவிகளுக்கு அடுத்ததாகத் தளப திப் பதவி மிகவும் முக்கியமான பதவியாக இருந்தது. அரசனுடைய பாதுகாப்பும் நாட்டின் பாதுகாப் பும் முற்றுமுழுதாகத் தளபதியினு டைய கைகளிலேயே இருந்தன. இக் காரணத்தினால் ஆரம்ப காலத்தி லிருந்து அரசனுடைய உறவினன் ஒருவனே தளபதிப் பதவிக்கு நியமிக் கப்பட்டான். அனுராதபுர காலத் தின் பிற்பகுதியளவில் போர்ப் படை யின் அமைப்பு விரிவடைந்தமையி னால், ஒவ்வொரு படைப்பிரிவுக் கும் பொறுப்பாகப் பல தளபதிகள் நியமிக்கப்பட்டனர். இதனால் இந் தத் தளபதிகள் அனைவருக்கும் தலை வனாகச் சேனைத்தலைவன் எனும் பதவி உருவாக்கப்பட்டது. இப்பதவி யும் அரசனுடைய கிட்டிய உறவினன் ஒருவனுக்கே வழங்கப்பட்டது.

அனுராதபுரக் காலத்தின் முற்பகு தியிலிருந்து யத்தக்காஹக, அசிக்கா ஹக எனும் இரு பதவிகள் அரச சபையில் இருந்தன. இந்த இரு பதவி களும் அரசனுக்கு மிகவும் விசுவாச முள்ள இருவருக்கு வழங்கப்பட்டன. தளபதியையடுத்து முக்கிய பதவியை வகித்தவர் பொருளாளராவார். ஆர ம்ப காத்திலிருந்து இப்பதவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்கு மிகவும் விசுவாசமுள்ள ஒருவனே நியமிக்கப்பட்டான். அனுராதபுர காலத்தின் பிற்பகுதியிலிருந்து அரசனுடைய வரவுசெலவு பெரிதும் உயர்ந்தமையினாற் பொருளாளர் பதவிகள் பல உருவாக்கப்பட்டன.

இவர்கள் எல்லோரும் அங்கம் வகித்த அரச சபையில் அரசன் சிங்காசனத்தில் வீற்றிருந்து அரச அலுவல்களை நெறிப்படுத்தி வந்தான்.

**பிரதேச ஆட்சி**

மத்திய ஆட்சியுடன் அதற்கு ஓரளவு கட்டுப்பட்ட பிரதேச ஆட்சி முறையும் ஆரம்ப காலத்திலிருந்து இயங்கி வந்துள்ளது. அனுராதபுரம் தலைநகராக அமைந்திருந்ததாயினும் பின்னர், அதனை மையமாகக்கொண்டு அதன் நான்கு திசைகளினதும் ஆட்சி நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. இவை ''பஸ்ஸ'' என்று குறிப்பிடப்பட்டன. அனுராதபுரத்தின்வட திசை ''உத்தர பஸ்ஸ'' எனப்பட்டது; கிழக்குத் திசை ''பிராச்சின பஸ்ஸ'' ஆனது. தென் திசை ''தக்கிண பஸ்ஸ'' எனவும் மேற்குத் திசை ''பஸ்சிம பஸ்ஸ'' எனவும் குறிப்பிடப்பட்டன. 'பஸ்ஸ' என்ற பகுதி 'தேசம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனாலேயே உத்தர தேசம், தக்கிண தேசம் முதலிய பிரயோகங்கள் வழக்கில் வந்தன.

அனுராதபுரக் காலத்தின் பிற்பகுதியளவில் றுகுணு ரட்டை, மலாய ரட்டை, தக்கிண தேசம் என்ற பிரதேசங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திறிசிங்களய எனப் பின்னர் குறிப்பிடப்பட்ட மூன்று பகுதிகளுள் ஒன்று றுகுணுரட்டை என்பதாகும். மகாவலி கங்கை, களுகங்கை, மத்திய மலைநாடு, கடற்கரை ஆகியவற்றினாற் சூழப்பட்ட கிழக்கு, தெற்குப் பகுதிகள் றுகுணு ரட்டை என்று குறுப்பிடப்பட்டபோதிலும் இதன் எல்லைகள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்துள்ளன.

றுகுணையில் இருந்த அரசப்பிரதிநிதி றோஹண போஜகன் என்ற பெயராற் கல்வெட்டுகளிலே குறிப்பிடப்பட்டுள்ளான். இவ்வாறே ஆரம்ப காலத்தில், யாழ்ப்பாணக் குடா நாடு நாகதீபமெனக் குறிப்பிடப்பட்டது. வசப மன்னனுடைய காலத்தில் நாகதீபத்தின் அதாவது யாழ்ப்பாணத்தின் அரசனுக்குப் பதிலாக இசிகிரி என்ற அமைச்சனே அப்பகுதியை ஆட்சி செய்தான்.

தக்கிண தேசம் என்பது முதலில் தக்கிணபஸ்ஸ எனப்பட்ட பகுதியைக் குறிக்கும். இப்பகுதி அனுராதபுரக் காலத்தின் இறுதிப் பகுதியளவில், ததுறு ஓயாவிலிருந்து களுகங்கை வரை பரந்திருந்து மாயா ரட்டை எனக் குறிப்பிடப்பட்டது. அரசனுக்குப் பின்னர் சிங்காசன உரிமையைப் பெற்றிருந்த மாப்பா அல்லது மாயா என்பவனால் இப்பகுதி ஆட்சி செய்யப்பட்டு வந்தமையினாலேயே இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது.

**கிராம ஆட்சி**

பண்டுகாபய மன்னன் அனுராத கமத்தைநிர்மாணித்துவிட்டுஇலங்கை முழுவதும் கிராமங்களின் எல்லைகளை வகுத்தானென வரலாற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளிலே கூறப்படுகின்றது. ஆரம்ப காலத்திலிருந்தே கிராமமானது பொருளாதார, சமூக, அரசியல் திட்டங்களிலே மிகவும் முக்கியமான சிறிய கூறாக இருந்து வந்தது. ஒரு கிராமத்திலே ஒற்றுமையினையும் ஒழுங்கினையும் பேணுதற்பொருட்டு கம்சபாவ, அதாவது கிராமசபை என்பதிருந்தது. இதன் தலைவர், பழைய கல்வெட்டுகளிலே கமிக எனவும் வரலாற்றுக் கதைகளிலே கமபோஜக எனவும் குறிப்பிடப்பட்டுள்ளார். கிரமத்து ஒற்றுமையையும் ஒழுங்கையும் பேணுவது கமிகவின் முக்கியமான கடமையாக இருந்தது. அரசனுக்குரிய வருவாயைச் சேகரிப்பதும் கிராமத்து விடயங்களுக்குப் பொறுப்பாளியாக இருப்பதும் கமிகவின் ஏனைய கடமைகளாகும். கிராமத்து நிருவாகத்துக்குரிய அதிகாரம் இவனைச் சார்ந்திருந்தது. ஆயினும், இவன், கிராமத்தவர்களுடைய பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஆகிய வற்றுக்கு ஏற்பவே நிருவாகத்தை நடத்த வேண்டி இருந்தது. சிற்சில சந்தர்ப்பங்களிலே புதிய சட்டதிட்டங்கள் கொண்டுவரப்பட்டதையடுத்து கிராமத்து முதியோர் எதிர்த்துள்ளனர். அப்படியான சந்தர்ப்பங்களிலே, கமிக, எதிர்புகளுக்குச் செவி சாய்த்துச் சமாதானமாகச் செயற்பட வேண்டியிருந்தது. எனவே சனநாயக ஆட்சியின் அமிசங்கள் கிராம சபையின் நிருவாக முறையில் நன்கு காணப்பட்டனவென்லாம்.

அரசனுக்குச் சிற்சில சேவைகள் புரிந்தவர்களுக்கு நிலபுலங்கள் வழங்கப்பட்டன. இவற்றின் நிருவாகம் அந்தந்தக் கிராமத் தலைவர்களாற் கொண்டு நடத்தப்பட்டது. குற்றம் புரிந்தவர்கள் கிராமத்திலே ஒழித்திருந்தால் எல்லோரும் ஒன்றுகூடி அவர்களைப் பிடித்துக் கொடுக்க வேண்டி இருந்தது. அப்படிச் செய்யாத சந்தர்ப்பங்களிலே சம்பந்தப்பட்ட கிராமத்துக்கு அரசனால் தண்டனை வழங்கப்படும். வழக்குகளும் கிராம சபையினால் தீர்த்து வைக்கப்பட்டன. இவை பற்றிய அறிக்கைகளை மத்திய அரசின் அலுவலர்கள் காலத்துக்குக் காலம் கிராமங்களுக்குச் சென்று பரிசோதனை செய்தனர். ஆராமைகளுக்கு நிலபுலங்கள் வழங்கப்பட்டன. இப்படிக் காணிகள் வழங்கப்பட்ட கிராமங்களின் நிருவாகம் ஆராமைகளில் வசித்த பிக்குகளின் ஆலோசனைகளுக்கு ஏற்பக் கிராமத் தலைவர்களாற் கொண்டு நடத்தப்பட்டது. இக்கிராமங்களுக்குள் குற்றம் புரிந்தவர்கள் புகுந்து விட்டால், ஆராமையைச் சேர்ந்த பிக்குகளின் அனுமதியுடன் அவர்களை வெளியே துரத்திவிட வேண்டியிருந்தது. அரச அலுவலர்கள் இக்கிராமங்களுக்குள் செல்வதற்கு அனுமதி இருக்கவில்லை.

**கல்வி**

ஆரம்ப காத்திலிருந்தே கல்வி ஒரு முக்கியமான சேவையாகக் கருதப்பட்டது. கல்வித்துறைக்கு அரச ஆதரவு கிடைத்தது. ஆரம்பத்தில் கிராமத்துக் கல்வி விவகாரங்களைப் பிராமணர் மெற்கொண்டு வந்தனர். அரச குடும்பத்தவர்களுமே இப்பிராமணர்களிடம் கல்வி கற்றனர்

புத்த மதம் கொண்டு வரப்பட்ட பின்னர் கிராமங்களிலே விகாரைகள் தோன்றின. அதன் பின்னர் இவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாகக் கொண்ட கல்வி முறையொன்று உருவானது. பிக்குகள் மத்தியிலேயே பெரும்பாலும் கல்வி அறிவு பரவியது. ஆயினும், இக்கல்வியை அரச குடும்பத்தவர்கள் முதல் சமுதாயத்தின் கீழ் மட்டத்திலுள்ளோர் வரை எல்லா மக்களும் பெற்றுவந்தனர். இதன் மூலம் மொழி, கலைகள் ஆகியவற்றில் சிறந்த அறிவு பெற்ற பண்டிதர்கள் சாதாரண மக்கள் மத்தியிலும் காணப்பட்டனர். பாதிக்காபய மன்னன் காலத்தில் வாழ்ந்த தீக்ககாறாயன் எனப்பட்டவன் பலமொழிகள் கற்றறிந்த மகா பண்டிதனாகத் திகழ்ந்தான்.

வெவ்வேறு காலப்பகுதிகளிலே வெவ்வேறு துறைகளிற் பாண்டித்தியம் பெற்ற அரசர்களும், அமைச்சர்களும், பொதுமக்களும் இருந்தனரென்பதற்கு ஆதாரங்களுள. அனுராதபுர காலத்தின் பிற்பகுதிக்கும் கோட்டே காலத்தின் ஆரம்பத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் கல்வித்துறையை வளர்த்த பிரபல பிரிவெனாக்கள் பல, நாட்டின் பல்வேறுபகுதிகளிற் காணப்பட்டன. பொலன்னறுவை, தம்பதெனியா, கோட்டே ஆகிய காலப்பகுதிகளிற் பிரசித்தி பெற்ற பல பிரிவெனாக்கள் இருந்தன. இப்பிரிவெனாக்களிலே மொழிகள், வாணியல், பொருளியல் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பிரிவெனாக்களை அமைத்தல், அவற்றைக் கொண்டு நடத்துதல், நிலபுலங்களை வழங்குதல், தர்ம நூல்களை எழுதுவித்தல் ஆகியவற்றின் மூலம் அரசர்கள் கல்வித்துறைக்கு ஆதரவளித்து வந்தனர்.

**வைத்திய சேவை**

வைத்திய சேவையும் அரச ஆதரவைப் பெற்று அமைக்கப்பட்டிருந்தது. பழைய கல்வெட்டுகளில் வெஜ என்ற சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வைத்தியரைக் குறிக்கும் சொல்லாகும். சாதாரண மக்களுடைய சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்வது அரசனைச் சார்ந்த கடமையாகக் கருதப்பட்டது. பிக்குகளுக்குப் போலவே சாதாரண மக்களுக்கும் வைத்தியசாலைகள் கட்டப்பட்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டனர். புத்ததாச மன்னன் ஒரு சிறந்த வைத்தியனாக இருந்தான் எனவும் இவன் பத்துக் கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் என்ற விகிதத்தில் வைத்தியர்களை நியமித்திருந்தான் என்றும் கூறப்படுகின்றது.

பிரதான நகரங்களிலும் ஆராமைகளுக்கு அண்மையிலும் வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பாகப் புத்ததாச, முதலாம் அக்போ, முதலாம் சேனன், இரண்டாம் சேனன், ஐந்தாம் காசியப்பன், மகா பராக்கிரமபாகு போன்ற பல அரசர்கள், வைத்தியசாலைகளைக் கட்டுவித்து அவற்றைக் கொண்டு நடத்தும் பொருட்டு நிலபுலங்களை வழங்கி வைத்திய சேவைக்கு ஆதரவளித்தார்கள் என்பதற்குச் சான்றுகளுள. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள தொல்பொருளியல் சார்ந்த அகழ்வுகளிலே அனுராதபுரம், மிகிந்தலை, மதிரிகிரிய, பொலன்னறுவை ஆகிய இடங்களிலே பழைய வைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசாலைகளின் சிதைவுகள் காணப் பட்டுள்ளன. இவற்றிலே மருந்துப் போத்தல்கள், பழைய காலத்தில் அறுவை வைத்தியத்திற் பயன்படுத் தப்பட்டனவாகக் கருதப்படும் உபக ரணங்கள், மருந்தரைக்கும் அம்மிகள் முதலியன கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**பயிற்சி**

1. (அ) அனுராதபுரக் காலத்தின் ஆரம்பப் பகுதிகளிற் செய் யும் தொழிலைக் கொண்டு மக்கள் வகுப்புகளாகப் பிரிக் கப்பட்டிருந்த முறையை விளக்குக.

   (ஆ) பௌத்த மதம் காரண மாகப் புராதன இலங்கை யிலே உண்டான முக்கிய சமூகப் படிகள் நான் கினையும் குறிப்பிடுக.

   (இ) பொலன்னறுவை காலத் திலிருந்து இலங்கைச் சமு தாயத்திற் காணப்பட்ட முக்கியமான மூன்று படி களும் யாவை?

2. ஆரம்ப காலத்து இலங்கை அர சர்களின் பொறுப்புகள் யாவை?

3. நாட்டை ஆட்சி செய்வதற்கு உதவியாக இருந்த முக்கியமான அலுவலர் யார் யார் எனக் கூறுக.

4. அனுராதபுர காலத்தின் பிற்பகு தியிலிருந்து இலங்கையில் அரச உரிமை எவ்வாறு வழங்கப்பட்ட தென விளக்குக.

3. "புராதன கிராமசபை சன நாயக முறையில் அமைந்தது" ஆராய்க.

6. இலங்கையின் படம் ஒன்றை வரைந்து புராதன இலங்கையின் பிரதேச ஆட்சிக் கூறுகளின் எல்லைகளை வரைந்து பெரிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு -- 9

# வரலாறு

## பாடத்திட்டம்

**9—1 இலங்கையின் நீர்வள நாகரிகம்.**

*9—1.1* ஆரம்பம்
*9—1.2* நீர்வள நாகரிகத்தின் அடிப்படை.
*9—1.3* இலங்கையின் தரைத்தோற்றம், வடி காலமைப்பு, காலநிலை
*9—1.4* நீர்ப்பாசன முறை தேவைப்படுவதற்கான காரணம்.
*9—1.5* நீர்ப்பாசன நடவடிக்கைகள் மீது விடே கவனம் செலுத்திய மன்னர்கள்.
*9—1.6* நீர்ப்பாசன நடவடிக்கைக்கு தரைத்தோற்றத்தைப் பயன் படுத்துதல்.
*9—1.7* குளங்களின் பிரதான அங்கங்களை அறிந்து கொள்ளல்.
*9—1.8* நீர்வள நாகரிகத்தின் பொற்காலம்.
*9—1.9* நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி.

**9—2 இலங்கையின் வெளிநாட்டு உறவுகள்**

*9—2.1* வெளிநாட்டுத் தொடர்பு விருத்தியடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தியமை.
*9—2.2* பௌத்த கேந்திர நிலையமாதல்.
*9—2.3* இந்தியாவுடனான தொடர்பு.
*9—2.4* ஏனைய நாடுகளுடான தொடர்பு.

**9—3 சிங்கள இராசதானி தென்மேற்கே இடம்பெயர்தல்.**

*9—3.1* மாகனின் ஆக்கிரமிப்பு காரணமாக சிங்கள் அரசியற் தலைமைத்துவம் பலவீனமடைதல்.
*9—3.2* நீர்ப்பாசன அமைப்பு அழிந்தமையினால் பொருளாதாரம் செயலிழந்தமை.
*9—3.3* இராசதானி தென் மேற்கே இடம்பெயர்ந்தமை.

**9—4 சமூக நிறுவனங்கள் (கி.பி 15 ஆம் நூற்றாண்டு வரை)**

*9—4.1* சமூக அமைப்பு.
*9—4.2* மத்திய நிருவாகம்.
*9—4.3* பிரதேச நிருவாகம்.
*9—4.4* கிராம நிருவாகம்.
*9—4.5* அரசாங்க சம்மதம் பெற்ற சில பொதுச் சேவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு - 9

# வரலாறு

### விரிவான பாடத்திட்டம்

**9—1 இலங்கையின் நீர்வள நாகரிகம் (16 பாடவேளை)**

**9—1.1 ஆரம்பம்**

— இந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் வந்த மக்கள் நதிக்கரைகளில் குடியேறினர். (விஜயனும் பத்தகச் சானா குழுவினரும்)

— குடியேறிய ஆற்றங்கரைகள்.
(மல்வத்து ஓய, கலா ஓய, கிரிந்தி ஓய, வளவ கங்கை, கும்புக்கன்ஓய, மகாவலி)

**9—1.2 நீர்வள நாகரிகத்தின் அடிப்படை**

— நீர்ப்பாசன அமைப்பை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரம்.

**9—1.3 இலங்கையின் தரைத்தோற்றம் — வடிகாலமைப்பு — கால நிலை.**

— தரைத்தோற்றம்
மத்திய மலைநாட்டைச் சூழ்ந்துள்ள தாழ்நிலம்

— வடிகால் முறை
பிரதான நதிகள், வடி காலமைக்பு

— காலநிலை
பருவக் காற்று மழைப்போக்கு

**9—1.4 நீர்ப்பாசனமுறை தேவைப்படுவதற்கான காரணம்.**

— புவியியற்காரணிகள்
மழை வீழ்ச்சியின் நிச்சயமற்ற தன்மை.
போதாமை, நீண்ட காலத்துக்கு
கிடைக்காமலிருத்தல், உரிய
காலத்திற்கிடைக்காமை

— சமூகம்
சனத்தொகை அதிகரிப்பு

**9—1.5 நீர்ப்பாசன நடவடிக்கைகள் மீது விசேட கவனம் செலுத்திய மன்னர்கள்.**

— பண்டுகாபயன் (கி.மு. 377—307)
வரலாற்றில் குறிப்பிடப்படும் முதலாவது குளத்தை நிருமாணித்தவன் (அபயவாவி)

— தேவாநம்பிய தீசன் (கி.மு. 247—207)
திசா வாவியை நிருமாணித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— **வசபன் (கி.பி. 67—111)**

முதன் முதலாக ஓரளவு பெருங்குளத்தைக் கட்டிய அரசனாவான்.
இவனால் 11 குளங்களும் 12 கால்வாய்களும் கட்டப்பட்டன.
(உதாரணம்:- மகாவிலச்சிய வாவி—மானன் கட்டிய வாவி.)

— **மகாசேனன் (கி.பி. 274—301)**

முதன் பெருங்குளங்களைக் கட்டுவித்தவன்.
மின்னேரிய தெய்வம் என இன்றும் வணங்கப்படுபவன்.
மகாசேனன் கட்டிய குளங்களுள் சில:-
மின்னேரிய, ஹுருளு, கணதரா, மாமினியா, கவுடுலு, மாகல்ல, மகாகல்கடவல

— **தாதுசேனன் (கி.பி. 455—473)**

கலாவாவியும் யோத அல (ஜயகங்கை) வும்.

— **இரண்டாம் முகலன் (கி.பி. 531—551)**

நாச்சதுவாக்குளமும், பதவியாக்குளமும் அமைக்கப்பட்டமை.

— **முதலாம் அக் போதி (கி.பி. 571—604)**

மாமடுவக் குளம், மினிப்பே கால்வாயை நீட்டியமைத்தல்.

— **இரண்டாம் அக் போதி (கி.பி. 604—614)**

கந்தளாய் — கிரித்தலை

— **முதலாம் பராக்கிரமபாகு (கி.பி. 1153—1186)**

குளங்களைப் பெருப்பித்தலும் மீளப் புனரமைத்தலும்.
முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் மிகப் பெரிய நீர்ப்பாசன நடவடிக்கை பராக்கிரம சமுத்திரமாகும்

**9—1.6 நீர்ப்பாசன நடவடிக்கைக்குத் தரைத்தோற்றத்தைப் பயன்படுத்துதல்**

மலைத்தொடர்களை ஊடறுத்துப் பாயும் நதிகளை மறித்தல். சம நிலங்களினூடாக வாய்க்கால்களைக் கட்டுதல்.

**9—1.7 குளத்தின் பிரதான அங்கங்களை அறிந்து கொள்ளல்.**

குளக்கட்டு, கலிங்கற்றொட்டி, கலிங்கல், அலைதாங்கி, சுருங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9—1.8 நீர்வள நாகரிகத்தின் பொற்காலம்.**

— பௌத்த சமய வருகையால் எமக்கு கிடைத்த முதுசம்.

மொழியும் இலக்கியமும்

கட்டிடக்கலை, செதுக்கல், கிலை.

தார்மீக வாழ்க்கை

**9—1.9 நீர்வள நாகரிகத்தின் வீழ்ச்சி**

— சிங்கள மத்திய ஆட்சி பலவீனமடைதல்

— நீர்ப்பாசனம், பரிபாலனம் தொடர்பாக இருந்த அமைப்புகள் வீழ்ச்சியடைந்தமை.

— தென் இந்திய ஆக்கிரமிப்பு

— மாகனின் ஆக்கிரமிப்பு

**9—2 இலங்கையும் வெளிநாட்டுத் தொடர்புகளும்**

*(12 பாடவேளை)*

9—2.1 வெளிநாட்டுத் தொடர்புகள் விருத்தியடைவதில் தாக்கத்தை ஏற்படுத்தியவை.

— புவியியல் நிலையம் காரணமாக வர்த்தகத் தொடர்ப்பு விருத்தியடைந்தமை.

— வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய பருவக் காற்றும் நீரோட்டங்களும்.

— வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்துக்கொண்ட நாடுகள். (இந்தியா, உரோம், சீனா, அராபியா

— பரிமாற்றம் செய்யப்பட்ட வர்த்தகப் பொருள்கள்.

— பொருள் பரிமாற்று மத்திய நிலையமாக இலங்கையின் முக்கியத்துவம்.

**9—2.2 பௌத்த கேந்திர நிலையமாதல்.**

— பௌத்த சமயம் காரணமாகத் தொடர்புகள் ஏற்பட்ட நாடுகள் (இந்தியா, பர்மா, சீயம், கம்போடியா, சீனா

**9—2.3 இந்தியாவுடனான தொடர்பு**

— சமய கலாசாரத் தொடர்பு (வட இந்தியா)
அரசியற் கலாசாரத் தொடர்பு (தென் இந்தியா)
(சிங்கள் அரசர்கள் அதிகாரத்தைப் பெறுவதற்கு தென் இந்திய அரசர்களின் உதவியை பெற்றுக் கொள்ளல் - முதலாம் முகலன்)

— மானவம்மன் (கி.பி. 684—718)

— சோழர் இலங்கையை வெற்றி கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு (பல்லவ பாண்டிய, சோழ அரசுகளுடன் இலங்கை கொண்ட தொடர்பு - மிகச் சுருக்கமாக)

**9—2.4 ஏனைய நாடுகளுடனான தொடர்புகள்**

— உரோம நாட்டுடன் வர்த்தகத் தொடர்பு
— வியாபாரத் தூதுவர் பரிமாற்றம்
— பாத்திய அரசர் காலத்தில் உரோமாபுரியின் குளோடியஸ் பேரரசனிடம் சிங்கள தூதுக்குழுவொன்றை அனுப்புதல்.

— **சீனாவுடன் தொடர்பு**
— பாகியனின் இலங்கை வருகை.
— சிங்கள பிக்குணிகள் சீன பிக்குணிகள் சங்கத்தை அமைத்தல்.

— **அரபு நாட்டுத் தொடர்பு**
— கி.பி. 9—15. ஆம் நூற்றாண்டுகளில் விருத்தியடைந்தமை.
— வர்த்தகப் பொருள்கள் பரிமாற்றப்பட்டமை.

**9—3 இராசதானி தென்மேற்கே இடம் பெயர்தல்**

(12 பாடவேளை)

**9—3.1 மாகனின் ஆக்கிரமிப்பினால் சிங்கள அரசியற் தலைமைத்துவம் பலவீனமடைதல்.**

**9—3.2 நீர்ப்பாசன அமைப்பு அழிந்தமையினால் பொருளாதாரம் செயலிழந்தமை.**

— அவற்றை திருத்தியமைப்பதற்குத் தேவையான அரசியல் தலைமைத்துவம் இல்லாமை.
— தென் மேற் பகுதியில் வியாபாரம் முக்கியத்துவமடைதல்—கறுவா, மிளகு, பாக்கு முதலியன.

**9—3-3 இராசதானி தென் மேற்கே இடம்பெயர்ந்தமை.**

(தம்பதெனியா, யாப்பகுவை, குருணாகலை, கம்பளை, கோட்டை, கண்டி)

— தமிழர் வடக்கு நோக்கிப் பெயர்ந்தனர்.
— இராசரட்டை வனமாக மாறுதல் — வன்னி இராச்சியங்கள் தோன்றுதல்.

**9—3.3.1 தம்பதெனிய இராசதானி**

முன்றாம் வியபாகு மன்னன்
இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன்.
(இலக்கிய சேவை, சமயச் சேவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9—3.3.2 குருணாகலை இராசதானி**

— இராசதானியாகத் தேர்ந்தெடுப்பதற்கான காரணம்.

நான்காம் பராக்கிரமபாகு அரசனின் சேவை.

**9—3.3.3 கோட்டே இராச்சியம்**

— தலைநகரமாவதற்கு உதவிய புவியியற் காரணிகள் (குடாநாடாயிருத்தல்)

— பிரதேசத்தின் வர்த்தக நடவடிக்கைகள்

— ஆறாம் பராக்கிரமபாகு அரசனின் சிறப்பு.

**9—3.3.4 யாழ்ப்பாண இராச்சியம்**

— 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் சுதந்திர இராச்சியமாக இருத்தல்.

**9—3.3.5 கண்டி — கண்டி இராச்சியத்தின் தோற்றம்.**

**9—4 சமூக அரசியல் நிறுவனங்கள் (கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரை)**

(10 பாடவேளை)

**9—4.1 சமூக அமைப்பு**

— தொழில்கள் தரங்களாக வகுக்கப்பட்டிருத்தல்

— கிராமங்கள் சுயதேவையில் பூர்த்தியடைந்திருந்தமை பொருள் பண்ட மாற்று, வரையறுக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகம்.

— அனுராதபுர காலத்தில் குலமுறையொன்று இருந்ததெனினும் குலபேதம் பிரபல்யமடையாமை.

— பொலன்னறுவைக் காலத்தின் பின்னர் குலபேதம் பிரபல்யமடைந்தமை.

**9—4.2 மத்திய நிருவாகம்**

— அரசன்

— அரச உரிமை

— அரசனின் அதிகாரிகள் சிலரை அறிந்து கொள்ளல்.

சேனைத்தலைவர்,

செயலாளர் முதலிய பதவிகள் அனுராதபுர காலத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

அவை சேனாதிபதி, ஐத்தக்காஹக்க. அசிக்காஹக்க, மஹலேனா என்பனவாம்.

சிதுனா, செனவிரத், சபாபதினா, அத்தவுன் ஆகிய பதவிகள் பொலன்னறுவைக் காலத்தில் குறிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9—4.3 பிரதேச நிருவாகம்**

— அனுராதபுர காலத்தில் உருகுணு, மலயரட்டை தக்கிண தேசம் என்பன குறிக்கப்பட்டுள்ளன. பொலன்னறுவைக் காலத்தில் மாயரட்டை குறிக்கப்பட்டுள்ளது. எப்பா, மாப்பா ஆகிய பிரதேச நிருவாகப் பதவிகளும் இருந்தன

**9—4.4 கிராம நிருவாகம்**

— கிராம சபையின் வேலைகள்
(வரி சேகரித்தல், அரச சேவைகளுக்குக் கொடுப்பனவு வழங்குதல்)

**9—4.5 அரசாங்க சம்மதம் பெற்ற சில பொதுச் சேவைகள்.**

— வைத்திய சேவை

— கல்வி

(ஆரம்ப காலந்தொட்டு கி.பி. 15 ஆம் நூற்றாண்டு வரை இத்தகைய சமூக, அரசியல் நிறுவனங்களின் இயல்புகள் பலவிதமானவை என்பதைத் தெளிவுபடுத்தல் வேண்டும்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉතිහාසය 9 (දෙමළ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org